# கல்கி

வைரவிழா ஆண்டு

KALKI
28.10.2001
ரூ. 6.00



## சரணுக்குக் கிடைத்த கிரண்!

# Steelwin®

## THE RECLINER CHAIR

சுகம்

முழுமையான

உங்கள் விரல் முனையில்




3 years Guarantee*

* Against Manufacturing Defects

Imagine being able to do all this on one chair! Steelwin's amazing Recliner can change from chair to hammock to bed and everything in between, in a trice, at a gentle flick of the elegant arms rest. That's the Recliner. A chair that changes to suit your need.

---

**CHENNAI : Triveni & Co.** 5, Raja Street, T. Nagar, Chennai - 600 017. Ph: 4360111.

**Siva Sakthi Industries,** 100, Menambedu Road, SIDCO IND. ESTATE, AMBATTUR, Chennai - 98. Ph: 623 3957.

**BANGALORE : Steelwin,** 131, Devatha Plaza, Residency Road, Bangalore - 560 025. Ph: 080 - 2210541, 2221866

DEALERS


- **Annanagar :** ○Carrefour, Ph:6210933. ○J.F.A, Ph: 6223377. National Furnitures, Ph:6212666,
- **Annasalai :** ○Apollo chairs, Ph:8411960. ○Spencer & Co., Ph: 8523611. ○Chellarams, Ph: 858 3046
- **Royapettah High Road :** ○J.F.A., Ph: 813 1384. ○Sathya Furniture Co. Pvt. Ltd., Ph: 4983929. ○ Cyber Cove Furniture Mart. Ph: 8207211. • **Ashok Nagar :** ○J.F.A. Ph: 3713493.
- **Teynampet:** ○Imperial Furniture Co., Ph: 4349644. ○Kapsons, Ph:4339986.
- **Thiruvanmiyur :** ○Punyas Agencies, Ph: 4481520. ○Jayaraja Furniture, Ph: 4456315
- **T.Nagar :** ○Fantasy Furniture Co., Ph : 8234420. ○Gunaa Marketing, Ph: 4340083. ○Muthu Furniture, Ph:4344193. ○New Gold House Foams & Furnishers, Ph: 8230375. ○Anush Furniture, Ph: 4338021.
- **Lloyds Road :** ○Indroyal Furniture Co., Ph: 826 8966. • **Vadapalani:** ○Palve, Ph: 4840812.
- **Purasawalkam :** ○Sakthivel Enterprises, Ph: 6422877 • **Tambaram :** ○Tambaram Bedding Mart, Ph: 2264775
- **Nanganallur :** ○Balasubramaniam & Co., Ph: 2332425 • **Adyar :** ○Deepak Furnitures, Ph: 4465625

**List of Dealers in Tamil Nadu**

• **Coimbatore:** Elite Furniture, Ph: 399122. Rexin Land, Ph:233240. Elite Furniture Mart, Ph:236662. Carrefour, Ph: 302303. • **Erode :** A.P. Thomas, Ph: 257471. • **Karaikudi :** Sree Laxmi & Sons, Ph:38286 • **Kumbakonam:** Standard Steel Furniture, Ph: 421846. Bismi Furniture, Ph: 425262. • **Madurai :** Sacs Enterprises, Pvt. Ltd., Ph: 536212. Sri Vinayakam Furniture, Ph: 746746. Sacs & Sons, Ph: 747656. • **Mayiladuthurai:** Bismi Furniture Pvt. Ltd., Ph: 22856. • **Nager Koil:** Rohith Furniture, Ph: 76955. • **Pudukottai:** Mumtaj Furniture Mart, Ph: 22060. • **Ramanathapuram:** Surya Home Applicante, Ph: 2‥009. • **Salem:** Millennium Neo Furrn, Ph: 419145. • **Thanjavur:** Standard Steel Furniture, Ph: 31493. • **Tirunelveli:** Bright Furniture, Ph: 333028. • **Tirupur:** Woodland Furniture works, Ph: 425181. • **Trichy:** Cauveri Furniture, Ph: 764661 - Galaxy Wood House, Ph: 763551 - Vedham Furniture, Ph: 760433. • **Tuticorin:** Ganga Rajesh Furniture, Ph: 326245. • **Kovilpatty:** Bharath Furniture Super Market,Ph: 21258. • **Vellore :** T.P.G. & Sons, Ph : 20333. • **Sivakasi :** Bharath Agencies, Ph: 422789.

**PONDICHERRY:** Bismi Furniture Pvt. Ltd., Ph: 346139. Sadhuram Industries, Ph: 338588.

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com   ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



# கல்கி

## தீபாவளி மலர் 2001

ஆன்மிகக் கட்டுரைகளின் அணிவகுப்பு

**காடெல்லாம் நரசிம்மம் கல்லெல்லாம் தெய்வீகம்!**

**ஆயர்பாடி அழகுகள்**

**சிரகிரிவாழ் சர்வேசன்**

**ராதையின் பிரேம பக்தி**

**கொடுங்கல்லூர் பகவதி அம்மன்**

**எது பிரார்த்தனை?...**

விலை ரூ.70

*ரிஜிஸ்தர் தபாலில் பெற ரூ.30 சேர்த்து அனுப்பவும். அல்லது உள்ளூர் ஏஜெண்டைத் தொடர்பு கொள்ளவும்.*

மானேஜர், கல்கி, சென்னை - 97

# பெர்னாண்டஸ் - ஒரு சர்ச்சை!

**மத்திய பாதுகாப்புத் துறைக்கு மீண்டும் அமைச்சராகியிருக்கிறார் ஜார்ஜ் பெர்னாண்டஸ். தெஹல்கா விவகாரத்தில் கமிஷன் தீர்ப்பு வருமுன் அவர் அமைச்சரானது சரிதானா? என்கிற சர்ச்சை நீடித்துக் கொண்டிருக்கிறது. இதுகுறித்து த.மா.கா. செய்தி தொடர்பாளரும் எம்.பி.யுமான ஞானதேசிகனிடமும், பா.ம.க. எம்.பி. மூர்த்தியிடமும் கருத்துக் கேட்டோம்.**

**டி.எஸ். ஞானதேசிகன் :**
**மாநிலங்களவை உறுப்பினர் (த.மா.க.)**

தெஹல்கா டேப்கள் அசலானவை என்று சமீபத்தில் கமிஷன் கூறியுள்ளது. இப்படிப் பட்ட நிலையில் அவசர, அவசரமாக மீண்டும் அவரைப் பாதுகாப்பு அமைச்சராக நியமித்த தன் மர்மம் என்ன?

'இப்போதைய சூழலில் பாது காப்புத் துறைக் கென்று தனி அமைச்சர் இருப்பது அவ சியம். அதுவும் பெர்னாண்டஸ் போன்ற திறமையான ஒருவர் கண்டிப் பாக அந்த இலா காவுக்குத் தேவை' என்று நியாயப் படுத்துகிறார்கள். அதுவல்ல காரணம் ''எனக்கு மீண்டும் பாதுகாப்புத் துறை அமைச்சர் பொறுப்பு கொடுக்காவிட்டால் தே.ஜ.கூ. உடைந்து விடும்'' என்று பெர்னாண டஸ் பிரதமரை மிரட்டியிருக்கிறார் என்று குற்றம் சாட்டுகிறேன். பெர்னாண்டஸுக்கு மீண்டும் பாதுகாப்புத் துறை அமைச்சர் பொறுப்பு கொடுத்ததன்மூலம் தர்ம நியாயங் களைப் பற்றிப் பேசும் நடுநிலையைப் பிரதமர் இழந்து நிற்கிறார். "இவரை விட்டால் வேறு யாரும் அந்தப் பொறுப்புக்குப் பொருத்தமான வர் இல்லை" என்று சொல்வது அமைச்சரவை யில் இருக்கும் பல திறமைசாலிகளை அவ மானப்படுத்துவது போல இருக்கிறது.


● பெர்னாண்டஸ்

'நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஜெய லலிதா முதல்வர் பொறுப்பேற்றபோது அவரது கூட்டணிக் கட்சிகள் வாய் பொத்தி மௌனம் காத்தனவே' என்று இந்த விவகாரத்தைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள். ஜெயலலிதா விவ காரத்தில், தண்டனை அமுல் செய்யப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்பீல் செய் திருக்கிறார். அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அவ ரைத் தலைவராகத் தேர்ந் தெடுத்ததை அப்போதைய கவர்னர் (பின்னால் சுப்ரீம் கோர்ட் நிராகரித்தது வேறு விஷயம்) ஏற்றுக் கொண்டார்.

எனவே, வேங்கடசாமி கமிஷன் தீர்ப்பு வரும்வரை பெர்னாண்டஸ் பொறுத்துப் பார்த்திருக்க வேண்டும். இப் போது அமைச்சரவையில் அவர் சேர்ந்தது சரி என்றால் அப்போது என்ன அடிப் படையில் ராஜினாமா செய் தார் என்பதைப் பெர்னாண டஸ் விளக்குவாரா?

**ஏ.கே. மூர்த்தி :**
**மக்களவை உறுப்பினர் (பா.ம.க.)**

பெர்னாண்டஸை மீண் டும் பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமித்ததை விமர்சனம் செய்ய காங் கிரஸ்காரர்களுக்குக் கொஞ்சமும் அருகதை கிடையாது. இந்தியாவில் ஊழலை அறிமுகப்படுத் தியவர்களே அவர்கள் தான். போபர்ஸ் மற்றும் நரசிம்மராவ் காலத்தில் நடந்த ஊழல்களை மறக்க முடியுமா? கம்யூ னிஸ்ட் தோழர்கள் பெர் னாண்டஸ் நியமனத்தை ஆட்சேபிப்பது அவர் மீதுள்ள கோபத்தாலோ அல்லது ''பொது வாழ்க்கையில் நேர்மை'' என்ற அடிப்படை யிலோ அல்ல. அவர்களது நோக்கம் தே.ஜ.கூ. அரசுக்கு ஏதாவது தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதுதான்.

இவர்கள் ஆட்சி செய்யும் மேற்கு வங்கத்தில் ஊழல் நாற்றம் சகிக்க முடியாமல் இருப்பதை மம்தா பானர்ஜி தினமும் போட்டு உடைக் கிறார். இவர்கள் ஊழலை எதிர்ப்பது என்பது அரசியல் ஆதாயங்களுக்கு ஏற்பத்தான் நடக்கும். எனவே நேர்மை, நியாயங்களைப் பற்றிய

அவர்களது மதிப்பீடு கேலிக்கிடமானது.

பெர்னாண்டஸ் போன்றவர்கள் இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருப்பது நமக்குத்தான் பெருமை. காந்திய நெறியை மறந்த காங்கிரஸ்காரர்கள், பெர்னாண்டஸ் வீட்டிற்குச் சென்று பார்க்க வேண்டும். அங்கு எந்த ஆடம்பர பொருட்களும் கிடையாது. எளிமை அங்கே ஆட்சி செலுத்துகிறது. கயிற்றுக் கட்டிலில் தான் உறங்குகிறார் அவர். அவரது நேர்மையைச் சந்தேகிக்க, காங்கிரஸ் மற்றும் மார்க்ஸிஸ்ட் கட்சிகளுக்குச் சிறிதும் தகுதி இல்லை. அவர் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்தபோது பனியின் கொடுமை வாட்டும் சியாச்சின் சிகரத்துக்குப் பலமுறை சென்று வீரர்களுக்குத் தோழமை உணர்வை வெளிப்படுத்தியவர்.



* ஞானதேசிகன்

மீண்டும் பாதுகாப்புத் துறை அமைச்சர் பொறுப்பு கொடுத்ததன்மூலம் தர்ம நியாயங்களைப் பற்றிப் பேசும் நடுநிலையைப் பிரதமர் இழந்து நிற்கிறார்.

ஆப்கன்மீது அமெரிக்க தாக்குதலைத் தொடர்ந்து நாட்டுக்கு முழு நேர பாதுகாப்புத் துறை அமைச்சர் அவசியம் என்பதை உணர்ந்து அவரைச் சரியாகவே நியமித்திருக்கிறார் பிரதமர். வெளியுறவுத் துறை அமைச்சர்கூட "பாதுகாப்புத் துறைக்குப் பொருத்தமான நபர் பெர்னாண்டஸ் தான்" என்று சொல்லியிருக்கிறார்.

இதுதவிர வேங்கடசாமி கமிஷன் விசாரணையை நடத்திக் கொண்டிருக்கிறது. தீர்ப்பு வரவில்லை. அதற்கு முழு ஒத்துழைப்பு தருவோம் என்று பிரதமர் சொல்லியிருக்கிறார். அந்தக் கமிஷன் தனது தீர்ப்பில் பெர்னாண்டஸ் நேர்மையைச் சந்தேகிக்கும்படி ஏதாவது சொல்லும் பட்சத்தில் கூச்சலிட்டால் அர்த்தமுண்டு. அதுவரை வாயை மூடிக் கொண்டு முடங்கிக் கிடப்பதுதான் நல்லது.

சந்திப்பு :
**ப்ரியன்**

படம் :
**ராஜன்**



* ஏ.கே. மூர்த்தி

இதை விமர்சனம் செய்ய காங்கிரஸ்காரர்களுக்குக் கொஞ்சமும் அருகதை கிடையாது. இந்தியாவில் ஊழலை அறிமுகப்படுத்தியவர்களே காங்கிரஸ்காரர்கள்தான்.


**கல்கி-**

**B. M. SILK SAREES**

இணைந்து வழங்கும்

BMSS

**பட்டுப் புடவை**

**பரிசுப் போட்டி – 13**

கல்கி, வைரம், இந்த இரண்டு வார்த்தையும் இடம் பெறுமாறு சிறந்த ஸ்லோகனை எழுதி அனுப்புங்கள். 'அட இங்க பார்றா' என்று நினைக்க வைக்கும் ஒரு ஸ்லோகனுக்கு ரூ.**2,500/-** மதிப்புள்ள பட்டுப் புடவை பரிசு. ஆறுதல் பரிசாக நான்கு பேருக்கு கல்கி புத்தகங்கள் வழங்கப்படும். கடைசி தேதி **5.11.2001**. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பட்டுப் புடவை பரிசுப் போட்டி – 13

பெயர் : ...............................

...............................

முகவரி : ...............................

...............................

...............................

...............................

...............................

# ஆஷாஜி கொடுத்த சரஸ்வதி பொம்மை!



• ஆஷா



• பவதாரிணி

ஆஷா போஸ்லேவுக்கு சினிமா உலகின் மிகப் பெரிய விருதான தாதா சாகிப் பால்கே விருது கிடைத்திருக்கிறது.

"அவருக்கு இந்த விருது கிடைத்திருப்பதில் எங்கள் குடும்பமே ரொம்ப சந்தோஷப்படுகிறது" என்கிறார்கள் இளையராஜா குடும்பத்தினர்.

"அவருடைய குரல் மட்டுமல்ல. ஆஷாஜியும் பழகுவதற்கு இனிய பெண்மணி. எளிமையானவர்" என்கிறார் இளையராஜாவின் மனைவி.

"ஆயிரக் கணக்கானத் திரைப்படப் பாடல்களை அவர் பாடியிருந்தாலும், அவர் பாடியுள்ள ஏராளமான பஜன்ஸும் என்னை ரொம்பவே கவர்ந்தவை. அவருக்கு என் கணவர் மீதும், என் கணவருக்கு ஆஷாஜி மீதும் பெரும் மதிப்பும், மரியாதையும் உண்டு. என்னைப் பொருத்தவரை, அவருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அங்கீகாரம், ரொம்ப காலம் கடந்து கிடைத்துள்ளதாகவே நினைக்கிறேன்.

"ஆஷாஜி, எங்கள் வீட்டுக்கு நிறைய தடவை வந்திருக்கிறார். ஒருமுறை அவர் வந்திருந்தபோது அழகான சரஸ்வதி பொம்மையைக் கொண்டு வந்து கொடுத்தார். அந்த பொம்மை, இன்னமும் எங்களிடம் பத்திரமாக இருக்கிறது. அவர் ஒவ்வொரு தடவை எங்கள் வீட்டுக்கு வருகிறபோதும், நான் தவறாமல் அவருக்குப்பட்டுப் புடைவை பரிசளிப்பது வழக்கம்."

இளையராஜாவின் மகள் பவதாரிணிக்கு ஆஷா செய்த அட்வைஸ் மனத்தில் எப்போதும் நிற்கிறது என்கிறார்.

"எனக்குச் சிறந்த பாடகிக்கான தேசிய விருது கிடைத்தபோது, தானே ஃபோன் செய்து, எனக்கு வாழ்த்தும், ஆசியும் தெரிவித்தார் ஆஷாஜி. அவர் பாடவேண்டிய பாடலுக்கு, இசையமைக்கப் பட்டவுடன் டிராக் எடுக்கிற போது, நான் பாடியிருக்கிறேன். அப்போது என் குரலைக்கேட்டு, ரசித்து, 'குரல்வளம் என்பது இறைவன் அளிக்கும் வரம். அது எல்லோருக்கும் கிடைத்துவிடாது. உனக்குக் கிடைத்திருக்கும் இந்த வரப்பிரசாதத்தை நன்கு பயிற்சி செய்து, பாதுகாத்துக் கொள்!" என்றார் ஆஷாஜி.

"என்னைவிட என் அண்ணன் கார்த்திக், ஆஷாஜிக்கு ரொம்ப நெருக்கம். திருமணமான கையோடு, மும்பை சென்று தம்பதியாக ஆஷாஜியை சந்தித்து, ஆசி பெற்றுவந்தார்" என்கிறார் பவதாரிணி.

- எஸ். சந்திரமௌலி



"அம்மா...!
அடுத்த வாரம்
'கல்கி' ஆடைச்
சிறப்பிதழா மலருதே!
அதைப் பார்த்துட்டு,
அழகான டிரஸ்ஸா
வாங்கிட்டு வா!
அதுவரைக்கும் நான்
இப்படியே
குளிச்சுக்கிட்டே
இருக்கேன்!"

# ஆஹா ஆடைச் சிறப்பிதழ்!

அதிக பக்கங்கள் 4.11.2001



தீபாவளி
சிறப்பிதழ் அசத்தல்
ஸ்பெஷலாக வர
இருக்கிறது!

**என்ன ஸ்பெஷல்
என்பதை முடிந்தால்
கண்டுபிடித்துக்
கொள்ளுங்கள்!**

# கொலுவில் இருந்து தீபாவளி வரை சிறப்புத் தள்ளுபடி விற்பனை

"வணக்கம் சார்" என்றேன்.

"வணக்கம். வணக்கம். வாங்க என்னது மழையில் நனைந்து... ஈரம் சொட்டிக் கொண்டு... கொஞ்சம் இருங்க. டேய் பாபு ஓடிப்போய் டவல் எடுத்துட்டு வா... சூடா காபி சாப்பிடறீங்களா?"

"என்ன சார்... இப்படி கவனிக்கிறீங்க. நான் உட்காரலை சார்.... நாற்காலி எல்லாம் தொப்பலாய் ஊறிடும்."

"முதலில் உட்காருங்கள் நாற்காலி ஊறிப் போனால் பரவாயில்லை."

மேற்கண்ட உரையாடல் யார் யாருக்கு இடையில் என்று தெரிந்தால் அசந்துவிடுவீர்கள்.

ஆமாம். உபசரிக்கப்படும் நான் பத்திரிகையின் மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ்! உபசரிப்பவர் ஸ்வர்ணாலயா ஜுவல்லரி மானேஜிங் டைரக்டர் திரு. சுகுமாரன் அவர்கள். எனக்கு உறவினர் வீட்டுக்குள் நுழைந்தது போல இருந்தது.

'சங்கீதா' காபியை உறிஞ்சிக் கொண்டே சொன்னேன். "சார் பல இடங்களில் மார்க்கெட்டிங் ஆட்களுக்கு முகம் மலர்ந்த வரவேற்பு கிடைப்பதில்லை சார்." சுகுமாரன் சொன்னார்: "என்னைப் பொறுத்தவரை நீங்கள் எல்லாம் தேடி வந்து கதவைத் தட்டும் வளர்ச்சி வாய்ப்புகள்."

("So far as I am concerned, marketing people are growth opportunities knocking at my gates. Sometimes the visitor's chair becomes more important to business than our own.")


சுத்தமாக ஊறிப்போன நாற்காலியில் நன்றியில் நெளிந்தேன். "எதைப்பற்றி எழுதப் போகிறீர்கள்?" என்றார்.

"ஐப்பசி, கார்த்திகை, நவராத்திரி, தீபாவளி சீஸன்..." இழுத்தேன்.

"ஆமாம். முக்கியமான உற்சவம். தீபாவளி இருப்பதிலேயே விசேஷமான பண்டிகை..."

"ஆமாம் சார். என்னென்ன செய்திகள் புதுமைகள் தரப் போகிறீர்கள்?"

"ம்ம்... புதுமைகளை சுமந்து வராத மார்க்கெட்டிங்கும். மார்க்கெட்டிங் பண்ணப் படாத புதுமைகளும் சுவாரசியம் தராது. ஆனால் சூழல் மீறிய வெறும் புதுமைகள் வியப்பைத் தராலம்... விற்பனை விளைவுகள் இருக்காது. இதுபோலெல்லாம் யோசித்தோம். பிறகு சில விஷயங்களை மார்க்கெட்டிங்கில் அறிமுகம் செய்கிறோம்." அவர் சொற்களைத் தேடிப் பயன்படுத்தும் நேர்த்தி கூட புதுமைதான். தொடர்ந்தார். 'ஒரே காரட்டில் ஒரு வைர செட்' என்று நாங்கள் அறிவித்தது பெரும் வரவேற்பைப் பெற்றது. இப்போது ப்ராடக்ட் ஒன்றும் ப்ரோகிராம் ஒன்றும் லான்ச் பண்ணுகிறோம். நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த மக்கள் 'நமக்கும் இதற்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது' என்று ஒதுங்கும் 2 விஷயங்கள் வைரமும் ரூபி,



ஏமரால்டு, ப்ளூ சபையர் நகைகளும் தான். இதில் வைரத்தை அவர்களுக்கு அன்னியோன்னியமாக்கி சாதித்த நாங்கள், இப்போது மற்ற விலையுயர்ந்த கற்கள் பதித்த நகைகளையும் எல்லோரும் வாங்கக் கூடிய விலையில் எல்லோரும் ரசிக்கும் டிஸைன்களில் மினிமம் ரூ. 20,000க்கு ஒரு செட் என்று அறிமுகப்படுத்தி இருக்கிறோம்."

"எல்லோரும் வாங்கக் கூடிய விலையில் எப்படி ஜாதிக்கற்கள் வைத்த நகை செட்கள்?" என்று கேட்டோம்.

"எங்களுக்கு நகைக்கடை பஜாரில் உள்ள ஓவர்ஹெட்ஸ் செலவுகள். பிரமாண்டமான விளம்பரங்கள். பெரிய அலுவலர்

படை, பெரும் வாடகை, சம்பளம், கரண்ட் என்று எதுவும் பெரிதாக இல்லை.

குறைந்த லாபம், நிறைந்த சேவை, உயர்ந்த தரம், பரந்த நினுசுகள்- இவையே நாங்கள் இன்று வரை ஒரு பிரைவேட் அபார்ட்மெண்ட்டில் இருந்து கொண்டு இவ்வளவு பிரபலமாக வளரக் காரணம்."

"உண்மைதான் அது என்ன ப்ரோகிராம் என்று ஏதோ...." என்றோம்.


"ஆம். எங்கள் நிறுவன மாடியில் அழகிய பெரிய கொலு ஒன்றினை ஒரு பிரபலமான வி.ஐ.பி.யின் கைகளினால் திறக்கிறோம். நகை வாங்குபவர்களை கொலுவுக்கும் அழைத்துச் சென்று பிரசாதம், எவர்சில்வர் பாத்திரம், ஜாக்கெட் பீஸ், மங்களகரமான மஞ்சள், குங்குமம், கயிறு என்று பரிசுப் பொருள்கள் தருகிறோம். **தீபாவளி வரை ஸ்பெஷல் டிஸ்கவுண்ட்டும் உண்டு"** என்றார்.

"நகை வணிகத்தில் நடக்காத விஷயங்களை நடத்தி காட்டுகிறீர்கள். பெண் வாடிக்கையாளர்கள் ஸ்வர்ணாலயா ஜுவல்லரி மீது காட்டும் அபாரமான பிரியமும் நட்பும் ஏன் என்று இப்போது புரிகிறது."

"அதுமட்டுமல்ல சமீபகாலமாக மிகப் பிரபலமாக பேசப்படுகிற Sangold வளையல்களும் விற்கிறோம்."

"எக்ஸ்பிஷனில் வந்து உடனே விற்றுத் தீர்ந்ததே அதுவா?"

"ஆமாம் ஜோடி வளையல் ரூ. 1000லிருந்து ரூ. 2000 வரை தங்கம் கலந்து உருக்கி, (வெறும் பூச்சு அல்ல இமிடேஷனும் அல்ல) கருக்காமல் வெளுக்காமல் காரண்ட்டி உள்ள நகைகள் வசதி குறைவானவர்கள், பிரயாணத்துக்கு மட்டுமே, பேன்ஸிக்காக என்றும் வாங்குகிறார்கள். மற்றும் பாண்டிச்சேரி மீராமாதா பெண்டன்ட் மற்றும் மோதிரம் எங்களது ஒரு ஸ்பெஷல் நகை. அன்னை பக்தர்கள் ஒருவருக்கொருவர் சொல்லி நிறைய விற்பனை ஆகிறது. பெரிய கம்பெனிகளின் கார்ப்பரேட் ப்ரொமோஷன் பரிசுகள், நீண்ட



பணி செய்த அலுவலருக்கு தங்கக் காசு பரிசுகள், Souvenirs, மெமண்ட்டோஸ், வெள்ளி பரிசுகள் எல்லாம் இப்போது வழமையான வியாபாரங்களாகியிருக்கிறது."

"மிகவும் மகிழ்ச்சி. வளர வளர உங்கள் மார்க்கெட்டிங் உத்திகளும், சிதறாத சிந்தனைகளும் உங்கள் வணிகத்தில் புது உற்சாகத்தைத் தரும் என்று நம்புகிறோம். இது என்ன உங்கள் மேஜையில் ஸ்வர்ணா அட்வர்டைசிங் என்கிற கார்டு?"

"அது புதிதாக நாங்கள் துவக்கியிருக்கும் விளம்பர நிறுவனம். தொலைக்காட்சி தொடர்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் தனியார் விளம்பரங்களைத் தொகுத்து நிகழ்ச்சிக்கு வழங்கும் கம்பெனி. விளம்பரப் படங்களும் எடுக்கிறோம்." வேகமும் உத்வேகமும், தொலைநோக்கும் கொண்ட இவர் வணிக உலகினை மீறிய சிந்தனைகள் கொண்டவராகவும் இருக்கிறார். "பெண் சுதந்திரம் எப்போதோ வந்திருக்கணும்" என்பதிலிருந்து "பின் லேடன் ஒரு Unavoidable historic phenomenon" என்பது வரை பேசும் ரேஞ்ச் மிகவும் சுவாரஸ்யம். வாழ்த்தி விடை பெற்றோம்.

# ஸ்வர்ணாலயா ஜுவல்லரி

5, பசுல்லா ரோடு, தி. நகர், சென்னை – 600 017.

போன்: 8231986, 8231987, 8241201, Cell : 9841035305

email: asukumaran@eth.net web: www.swarnalayajewellery.com

Advt



* ரிக்சா

* கிரண்







* சரண்

# சரணுக்குக் கிடைத்த கிரண்!

"கதைக்குப் பொருத்தமான கச்சித முகங்களைத் தேடித் திரிவதே பெரிய 'த்ரில்' " என்கிறார் இயக்குனர் சரண். 'காதல் மன்னனி'ல் தொடங்கி 'ஜெமினி' வரை தமது கதாநாயகிகளை எப்படிக் கண்டு பிடித்தார்..? அவரே அந்த 'அழகிய' பிளாஷ்பேக்குகளை ஓபன் பண்ணுகிறார் :

**காதல் மன்னன்** படத்தின் நாயகி திலோத்தமா ஒரு மிடில் கிளாஸ் பெண். விநோதமான ரகம். அப்பாமீது பாசமும், பயமும் உள்ள அவளுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்ட பிறகு மணமகன் அல்லாத வேறொரு இளைஞன் மீது காதல் அரும்புகிறது. இந்தப் பாத்திரத்திற்கு, தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமில்லாத, கொஞ்சம் அந்நியமான புதிய முகமே பொருத்தமாக இருக்க வேண்டும் என்று தேடினேன். நிறைய அப்பாவித்தனம் நிறைந்த முகத்தில், காதல் வயப்பட்ட பின்பு அதை இலகுவாக வெளிப்படுத்த தகுந்த கண்களும், இந்தப் பாத்திரத்திற்கு அவசியமென்று பட்டதால் அப்படியொரு எல்கேஜி அழகைத் தேடிக் கொண்டிருந்தேன்.

சென்னை பரதக் கலாஞ்சலி நாட்டியப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த 'மானு' பற்றித் தகவல் கிடைத்தது. மனத்திற்குள் நான் வரைந்து வைத்திருந்த அதே முகம்.

"நடிப்பா ஆளை விடுங்கள்" என்று எடுத்த எடுப்பிலேயே மறுத்துவிட்டார். பரதத்தில் உலக அளவில் பெயர் வாங்க வேண்டும் என்பது தான் மானுவின் லட்சி



* ஷாலினி




* லைலா

யம். அந்த அஸ்ஸாம் பெண்மணியின் அப்பா கௌஹாத்தியில் இருப்பதை அறிந்து அவரோடு தொடர்பு கொண்டேன். உங்கள் மகள் ஒரே ஒரு படத்தில் நடித்தால்கூட, அதில் கிடைக்கும் புகழ், உலகம் முழுக்க நடன நிகழ்ச்சிகள் நடத்த உதவியாக இருக்கும் என்றேன். இந்த ஒரு படம் மட்டும்தான் என்று ஒத்துக் கொண்டார். 'காதல் மன்னன்' படத்திற்கு பிறகு மானுவைத் தேடி நிறைய வாய்ப்புகள் வந்தன. அவற்றையெல்லாம் மறுத்துவிட்ட மானு இப்போது பல்வேறு நாடுகளுக்கும் பறந்து பறந்து பரதம் ஆடிக் கொண்டிருக்கிறார்.

'அமர்க்களம்' படத்தின் நாயகி ஒரு பாசமான போலீஸ் குடும்பத்தில் வளரும் வில்லனின் மகள். ஒரு துறுதுறு பெண்ணாக, பக்கத்து வீட்டில் பார்த்துப் பழகியது போன்ற உணர்வு இருக்க வேண்டும் என்று முடிவு செய்தபோது மனத்தில் பட்டவர் ஷாலினி. ஒன்றிரண்டு மலையாளப் படங்களிலும், தமிழில் விஜய்யுடன் இணைந்தும் நடித்திருந்திருந்த ஷாலினியை ஏன் அஜீத்துடன் நடிக்க அழைக்கக்கூடாது என்று அணுகியபோது, 'படித்துக் கொண்டிருப்பதால் இப்போதைக்கு நடிக்கப் போவதில்லை' என்றார். மானுவைப் போலவே இவரையும் சம்மதிக்க வைப்பதற்கு மூன்று மாத காலம் பிடித்தது. இந்தப் படத்திற்கு ஷாலினிதான் வேண்டும் என்று நான் நினைத்ததற்கு இன்னொரு காரணம், எனது கதாநாயகிக்கு இசை அறிவு





• சிம்ரன்



• மானு

உண்டு. ஷாலினியும் முறைப்படி சங்கீதம் கற்று வருவதை அறிந்து எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. படத்தில் நீங்களும் ஒரு பாட்டுப் பாடலாம் என்று ஷாலினியைப் பாடவும் வைத்தேன். அவரைத் தவிர அந்த பாத்திரத்தில் வேறு யார் நடித்திருந்தாலும் இத்தனை 'டெப்த்' கிடைத்திருக்காது.

'**பா**ர்த்தேன் ரசித்தேன்' படத்தில் சிம்ரனும், லைலாவும் நாயகிகள். சுயநல முள்ள எதிர்மறையான பாத்திரம் சிம்ர னுக்கு. அதே நேரம் ரசிகர்கள் அவரை வில்லியாகவும் நினைத்துவிடக் கூடாது அய்யோ பாவம் என்கிற அனுதாபமும் அவர் மீது ஏற்பட வேண்டும். இதற்குப் பழ கிய ஒரு முகமே சரியென்று நினைத்தபோது, 'வாலி' படத்தில் தமது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியிருந்த சிம்ரன் கண்களில் பட்டார். பதினெட்டே நாட்களில் சிம்ரன் தொடர்பான காட்சிகளை எடுத்து முடித் தேன். சிம்ரனுக்கோ தமது பாத்திரம் மிகச் சிறியதோ என்ற சந்தேகம். 'ரஷ்' பார்த்து விட்டு அழுதே விட்டார். ஆனந்த கண்ணீர்!

லைலாவின் பாத்திரம் வேலைக்குப் போகிற ஒரு மிடில் கிளாஸ் மங்கை. 'அட! நம்ம வீட்டுப் பொண்ணு' என்று சொல்லத் தூண்டுவதுபோல சிரித்த முகம் வேண்டும் என்று தேடியபோது, கவிதாலயா தயாரிப் பாளர் புஷ்பா கந்தசாமி பரிந்துரைத்த பெண்தான் லைலா! அய்யய்யோ அவர் ராசியில்லாத நடிகையாயிற்றே, எல்லா படமும் பிளாப் என்று எனது இணை இயக்குனரே அலறினார். இதுபோன்ற மூட நம்பிக்கைகளை உடைக்க வேண்டும் என்பதற்காகவே லைலாவை நடிக்க வைத் தேன். பார்த்தேன் ரசித்தேனுக்குப் பிறகு தமிழில் ஹீரோயின் பஞ்சத்தைத் தீர்த்து வைக்கும் முன்னணி கதாநாயகியாக லைலா வளைய வருகிறார்.

**அ**டுத்து 'அல்லி அர்ஜுனா' நாயகி ரிச்சா. தமிழ் தெரிந்திருக்க வேண்டும். படபடவென்று பொறிந்து தள்ளுகிற துடுக்கான சுட்டிப் பெண்ணாக, கண் களில் குறும்புத்தனம் கொப் பளிக்கிற ஒரு முகம் தேவை என்று தேடியபோது முதலில் தென்பட்டவர் காயத்ரி ஜெயராம்.

மிஸ் இந்தியாவில் கலந்து கொள்ளும் பயிற்சிக்காக மும்பை பறந்து விட்டார். அடுத்து ஹிந்தி பாப் ஆல்பம் ஒன்றில் பார்த்த ஒரு முகம் பச்சென்று மனத்தில் பதிந்துவிட்டது. அந்த ஆல்பம் தயாரித்தவர்களைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தும் தோல்வி. அதிர்ஷ்டவசமாக ஆல்பத் தில் பார்த்த அதே முகம் ஃபேர் அண்ட் லவ்லி விளம்பரத்தில் தோன்ற, சம்பந்தப் பட்ட விளம்பர நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு அந்தப் பெண்ணின் முகவரி வாங்கி, மும்பைக்குப் பறந்தால் தேடிய பெண் கிடைக்கவில்லை. ஏமாற்றம். சோர்ந்து சென்னை திரும்பினால், எனது டேபிளில் மாடல் கோ ஆர்டினேட்டர் மூலம் வந் திருந்த ஐம்பது புகைப் படங்கள். படங் களைப் புரட்டத் தொடங்கினேன். அதிர்ச்சி. யாரைத் தேடி மும்பை போனேனோ அதே ரிச்சா!

ரிச்சாவுக்குத் தமிழ் தெரியாது என்றா லும், வசனங்களின் அர்த்தங்களைத் தெரிந்து கொண்டு சரியான உச்சரிப்புடன் பேசி ஒரே டேக்கில் ஓகே செய்கிற கூர்மையான அறிவு. கடந்த இருபது வருடத்தில் இதுபோன்று அபாரமாக நடிக்கிற ஒரு நடிகையை நான் இப்போதுதான் பார்க்கிறேன். அல்லி அர்ஜுனாவுக்குப் பிறகு தெலுங்கில் ரிச்சா நடித்த 'நுவ்வே காவாலி' இருபத்தைந்து கோடி ரூபாய் வசூல் செய்திருக்கிறது. இப்போது ஹிந்தி, தெலுங்கு, தமிழ் என்று பிஸியாகிவிட்டார் ரிச்சா.

**டி**சம்பரில் படப்பிடிப்பு தொடங்குகிற **'ஜெமினி'** படத்திற்காக கிடைத்தவர் மும்பையைச் சேர்ந்த கிரண். கதைக்கேற்ப நாயகி ஒரு வடநாட்டுப் பெண். அதற்கு கிரண் பொருத்தமாக இருப்பார் என்றே அவரைத் தேர்வு செய்திருக்கிறேன். இந்திய சினிமாவுக்கு இன்னொரு சூப்பர் ஹீரோ யின் கிடைக்கப் போவது உறுதி."

**- விஷுவல்தாசன்**



# கலைஞர் எரிச்சல்! கூட்டணி முறியுமா?

உள்ளாட்சித் தேர்தலில், அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சிக்காரர்கள் ஆடிய அழுகுணி மற்றும் அராஜக ஆட்டத்தை கவர்னரும், மத்திய அரசும் கண்டு கொள்ளாத நிலையில் "இனி மக்களே பார்த்துப் புரட்சி செய்தால்தான்" என்று விரக்தியின் விளிம்புக்குச் சென்று சொல்லியிருக்கிறார் கலைஞர். கடந்த இரண்டு, மூன்று மாத காலமாகவே கலைஞரின் உள்ளத்தில் பா.ஜ.க மீதுள்ள கோபம் நீறுபூத்த நெருப்பாகவே இருந்து வந்திருக்கிறது. இப்போது அந்த நெருப்பைக் கக்கியிருக்கிறார் கலைஞர்.

மத்தியில் ஆளும் கூட்டணியில் முக்கிய அங்கமாக இருந்தும், அதிலும் இரண்டு காபினெட் அமைச்சர்களை வைத்திருந்தும், தங்களது கோரிக்கைகள் சரிவர மத்திய அரசால் கவனிக்கப்படவில்லை என்ற ஆதங்கமும், கோபமும், கடந்த இரண்டு மாதங்களாகவே தி.மு.கவில் புகைந்து வந்திருக்கிறது.

சென்னை போலீஸ் அதிகாரிகளை மாற்றும் விஷயத்தில் மத்திய அரசு தீவிரம் காட்டியிருந்தால், உள்ளாட்சித் தேர்தலில் போலீஸ் ஓரளவு நடுநிலை வகித்திருக்கக்கூடும் என்று சொல்கிறார்கள் கழகப் பிரமுகர்கள்.

சட்டமன்றத் தேர்தலிலும், உள்ளாட்சித் தேர்தலிலும் பா.ஜ.கவுக்கு நிறையவே இடங்களை ஒதுக்கினார் கலைஞர். ஒரு உறுதியான தோழமைக் கட்சியாக இருந்தும், தங்கள் கோரிக்கைகளுக்கு உரிய மரியாதை மத்தியில் கிடைக்காதது கலைஞருக்கு எரிச்சலை உண்டாக்கியிருக்கிறது.

தே.ஜ.கூவிலிருந்து விலகி விட வேண்டும் என்று சில பிரமுகர்கள் உணர்ச்சி பூர்வமாகப் பேசினாலும் அந்த நிலையைச் சந்திப்பதற்கும் தி.மு.க.வினர் தயங்குகிறார்கள். காரணம் மத்திய அரசில் பங்கு வகிக்கும் நிலைமையிலேயே கழகத்தினரை எதிர்த்து இவ்வளவு அராஜகம் நடக்கும் நிலையில், அதுவும் இல்லையென்றால் நிலைமை இன்னமும் மோசமாகப் போய்விடும் என்பது அவர்களது கருத்து.

தி.மு.க தானாகவே எந்தக் கூட்டணியையும் முறிக்கும் பழக்கம் இல்லாததால் எண்ணெய்யும், தண்ணீருமாக உறவு தொடர்கிறது. பா.ஜ.க மீதுள்ள கோபம் காரணமாக, பிரதமர் கலந்து கொண்ட ஜனா வீட்டுத் திருமணத்திலும் கலைஞர் பங்கு பெறவில்லை.

உள்ளாட்சித் தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவு நடந்த மாலையிலிருந்தே மிகவும் டென்ஷனாக இருக்கிறார் கலைஞர். தி.மு.க தொண்டர்கள் அ.தி.மு.க அராஜகத்தைச் சந்திக்கும் துணிச்சலை இழந்திருப்பதும் கலைஞரை வருத்தமடையச் செய்திருக்கிறது. தமக்குக் கறுப்புப்பூனை பாதுகாப்புத் தவிர வேறு எதையும் மத்திய அரசு உருப்படியாகச் செய்யவில்லை என்பதும் கோபத்துக்கு ஒரு காரணம்.

"இந்த இடைப்பட்ட காலத்தில் ஜெவுக்குச் செக் வைக்கும் விதமாக நடந்த சில காரியங்களை வெளிப்படையாகச் சொல்ல முடியாது. ஆனால் கூட்டாட்சி முறையில் மத்திய அரசு எந்த அளவு முடியுமோ அந்த அளவு செய்திருக்கிறது" என்பது பா.ஜ.க பிரமுகர்களின் வாதம்.

'டான்ஸி வழக்குத் தீர்ப்பு வரும்வரை பொறுத்திருந்து பார்க்கலாம்' என்று ஒரு கருத்தும் தி.மு.க வில் இருக்கிறது. தீர்ப்பு ஜெவுக்குச் சாதகமாக இருக்கும் நிலையில் மீண்டும் அவர் ஆட்சிக்கு வரக்கூடும். அந்த நிலையில் மத்திய அரசில் இருப்பதுதான் தி.மு.க.வுக்குப் பாதுகாப்பு என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்போது மத்திய அரசு தி.மு.கவின் கோரிக்கைகளைக் கவனிப்பதில் சீரியசாக இறங்கியிருக்கிறது. முதல் நடவடிக்கையாக முழு நேர கவர்னர் போடப்படலாம் என்கிறார்கள்.

— கௌசி


படம்: சௌரா

# GOKULAM

The monthly magazine for children

**NOVEMBER 2001**





## GOA

**A PARADISE ON EARTH**

Poster with Article

## ANT ANTICS

IN THE WILD

## OSKWANGA

SHORT STORY

## THE CUCHI TUNNELS OF VIETNAM

## LOTTERY SCHOLARS


A Jayabalan Story

Rs.6/- ONLY

## GOKULAM SCHOLASTIC GALA CONTEST

- Exciting Prizes

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097






2001 அக்டோபர் 28
விஷு ஐப்பசி 11
மலர் : 60
இதழ் : 13

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



## ஆளுங் கட்சியின் அராஜகம்!

உள்ளாட்சித் தேர்தல்களில் அ.தி.மு.கவின் வன்முறையும் அராஜகமும் மேலோங்கியிருக்கின்றன.

எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி, தேர்தல் ஊழியர்களும் இதனை உறுதி செய்துள்ளதால் இரு பெரும் கவலைகள் உதிக்கின்றன.


முதலாவது - இந்தத் தேர்தலை நியாயமான தேர்தல் என்று எவ்வாறு ஏற்பது...?

இரண்டாவது - ஒரு சில எதிர்க்கட்சியினர் நியாயமான வாக்களிப்பினால் தேர்வாகி ஆட்சி மன்றத்துக்கு வந்தாலும் அ.தி.மு.க அரசு தமிழகத்தில் ஆட்சியிலிருக்கும்வரை அவர்களை உருப்படியாகச் செயல்பட அனுமதிக்குமா...?

கராத்தே தியாகராஜன், சேகர் பாபு ஆகிய இரு அ.தி.மு.கவினரும் தேர்தல் வன்முறைகளை முன்னின்று அரங்கேற்றியதாகச் செய்தி.

பிரசாரத்தின்போதே கராத்தே தியாகராஜனும் அவரது ஆதரவாளர்களும் மலிவான யுக்திகளில் ஈடுபடுவதைப் பார்க்க முடிந்தது. அந்த பிரசாரப் பாணியின் அகௌரவமும் உணர்ச்சி தூண்டும் போக்கும் இன்றைய குற்றச்சாட்டுகளுக்கு வலு சேர்க்கின்றன.

காவல் துறையிடம் பாதுகாப்பு கோரிய எதிர்க்கட்சித் தொண்டர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு மறுக்கப்பட்டுள்ளது. 'உங்கள் பாதுகாப்புக்கு நீங்களே பொறுப்பு' என ஒரு பெண் வேட்பாளருக்குக் காவல்துறை பதில் கூறியிருக்கிறது. மிக




வெட்கக்கேடான நிலை இது.

இதையெல்லாம் காணும்போது, உள்ளாட்சித் தேர்தல்களிலிருந்து அரசியலை முற்றிலுமாகப் பிரித்தெடுக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்று தெரிகிறது. அவ்வாறு செய்ய வேண்டியதன் அவசரமும் புரிகிறது.

அரசியல் சார்ந்தே உள்ளாட்சித் தேர்தல்கள் இருக்குமானால், ஒவ்வொரு முறையும் இத்தகைய அராஜகப் போக்குகள் அதிகரித்துக்கொண்டே போகும். உள்ளாட்சித் தேர்தலின் வெற்றி - தோல்வி, மாநில ஆளுங்கட்சிக்கு மக்கள் மன்றத்தில் நடக்கும் மறுசோதனை என்பதால் இந்தப் போக்கு மேலும் மோசமாகுமேயொழிய மாறாது. உள்ளாட்சித் தேர்தல்களிலிருந்து கட்சி அரசியலை அடியோடு நீக்கிவிடுவதுதான் ஜனநாயகத்தின் ஆணி வேரான உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரம் சேர்க்கும்.


கட்சி அரசியல் நீக்கப் பெற்று, கண்ணியமாகவும் ஆரோக்கியமாகவும் நடக்கின்ற உள்ளாட்சித் தேர்தல்கள், கட்சி அரசியல் சார்ந்த பொதுத் தேர்தல்களிலும் ஆரோக்கியமான பாதிப்புகளை ஏற்படுத்தி நலன் விளைவிக்கும்.

# கமிஷன் முகத்தில் கரி!

'உலகெங்கிலும் யுத்த சூழல் நிலவுகிறது. நமது நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் மத்திய அரசு பாதுகாப்புத் துறைக்குத் தனி அமைச்சரை நியமிக்கத்தான் வேண்டும்.' இதில் கருத்து மாறுபாடு இருக்க முடியாது.

ஆனால், அப்பொறுப்பில் பெர்னான்டஸை நியமிக்கும்படி ஜஸ்வந்த் சிங் வெளிப்படையாக சிபாரிசு செய்ததும், அதை ஏற்று பிரதமர் மீண்டும் பெர்னான்டஸுக்கு அப் பதவியைத் தந்திருப்பதும் தார்மிகப் படுகொலைகள்.

தெஹல்கா டேப் விவகாரத்தையொட்டி ராஜினாமா செய்யும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது ஜார்ஜ் பெர்னான்டஸுக்கு.




தொடர்ந்து நாடே அல்லோல கல்லோலப்பட, நீதிபதி வேங்கடசாமி தலைமையில் விசாரணை கமிஷனும் நிறுவப்பட்டது. இக் கமிஷன் தனது அறிக்கையைக் கொடுக்கும் முன்னரே பெர்ணான்டஸ் மீண்டும் அமைச்சராகியிருக்கிறார்.

இத்தனை நாட்களாக நாட்டில் விசாரணை கமிஷன் அறிக்கைகள்தான் கிடப்பில் போட்டு அலட்சியப்படுத்தப்பட்டன. இப்போதோ விசாரணை கமிஷனையே கேவலப்படுத்தி, கரிபூசிவிட்டது பிரதமரின் இந்த முடிவு!

ராணுவ தளவாடங்கள் வாங்கும் கான்டிராக்ட்களில் சந்தேகத்துக்கு இடமான பரிவர்த்தனைகள்; ராணுவ ரகசியங்கள் குறித்த தகவல் என்று நாட்டின் பாதுகாப்புடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் லஞ்சம் தரப்பட்டுள்ளதாகவும் பெறப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் இருக்க, அத்துறைக்கான அமைச்சர் தார்மிகப் பொறுப்பு ஏற்று விசாரணைகள் முடியும்வரை ஒதுங்கியிருப்பதுதான் நியாயம்.

அதிலும் பெர்ணான்டஸின் வீட்டிலேயே, அவரது கட்சித் தலைவர் கையூட்டு பெற்றுக்கொண்டதற்கான ஆதாரம் இருக்கிறது என்கிறபோது பெர்ணான்டஸை நிரபராதி என்று கூறுவது நகைப்புக்கிடமாயிருக்கிறது.

பெர்ணான்டஸ் மீண்டும் அமைச்சராக்கப்படாவிட்டால் பி.ஜே.பி அரசுக்கு சமதா கட்சியின் ஆதரவு தொடராமல் போகக்கூடும் என்ற அச்சுறுத்தல் இருந்திருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட அச்சுறுத்தலுக்குப் பணிந்து தார்மிகப் பண்புகளில் சமரசம் செய்து கொள்வதென்பது பி.ஜே.பிக்கோ வாஜ்பாயிக்கோ பெருமை சேர்க்காது.

பிரதமரின் இந்த முடிவு, ஏற்கெனவே ஊழல் வழக்குகளில் விசாரணை கமிஷன் களையும் நீதி விசாரணைகளையும் சந்தித்து வருகின்ற சோனியா காந்தி, லாலு பிரசாத் யாதவ், ஜெயலலிதா போன்றவர்களுக்குத் தவறான முன்னுதாரணமாகத் திகழும்.

நாட்டின் பாதுகாப்புக்கு இதைக் காட்டிலும் பெரிய அச்சுறுத்தல் என்ன இருக்க முடியும்! ○



# ஜிகாத் என்றால்...

(பிற பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட சில வாசகர் கடிதங்கள் சற்றே சுருக்கமாக.)

அமெரிக்கத் தாக்குதலின் பின்னணியில் உள்ளதாக நம்பப்படுபவர்கள் முஸ்லீம்கள் மட்டுமே என்பதை மீடியா வெளிச்சம் போட்டுக்காட்ட, அமெரிக்காவில் உள்ள முஸ்லீம்களுக்கும் முஸ்லீம் இயக்கங்களுக்கும் கடும் அச்சுறுத்தல்கள். காவல்துறை பகுதிகளுக்கும் முஸ்லீம் கல்வி நிறுவனங்களுக்கும் போதிய பாதுகாப்பு அளித்தனர்.

முதல்முறையாக அமெரிக்காவில் உள்ள ஐந்து மில்லியன் முஸ்லீம்களும், அவர்களது அமைப்புகளும் பிற அமெரிக்கர்களுக்கு "இஸ்லாம் வன்முறைக்கெதிரானது. முஸ்லீம் அல்லாதவர்களிடமும் கூட வன்முறை காட்டப்படக் கூடாது என்கிறது இஸ்லாம். தற்காப்புக்காக மட்டுமே தாக்குவதற்கு அனுமதியுண்டு. ஜிகாத் என்றால் வரம்புமீறிய அடக்குமுறைக்கு எதிரான போராட்டமே தவிர, முஸ்லீம் அல்லாதவர்கள் மீது காட்டப்படும் வன்முறையை அது குறிக்காது" என்பதையெல்லாம் விளக்க நேர்ந்தது.

**நேஷன் அண்ட் தி வோர்ல்ட் – கலீம் கவாஜே (வாஷிங்டன் டி. சி)**

## மாற்றான் தோட்டம்...

கார்பெட் தேசியபூங்கா வேட்டையாடுபவர்களின் சொர்க்கமாகிவிட்டது. அவர்கள் அப்பாவி மிருகங்களுக்குப் பெரும் கிலியை ஏற்படுத்தி அவற்றைக் கொல்கிறார்கள். காடுகள் தொடர்பான சட்டங்களும் திருத்தப்பட்டு, அத்துமீறுபவர்களுக்கான தண்டனை அதிகரிக்கப்படவேண்டும்.

**தி வீக் – பி ஹெச் புடானி, மும்பை**

செப்டெம்பர் 11லிருந்தே, கர்நாடக அரசுதான் அளித்த பல வாக்குறுதிகளை, பாதுகாப்பைக் காரணமாகக் காட்டி காற்றில் பறக்க விட்டுக் கொண்டிருக்கிறது. முதலில் இந்திய சர்வதேச திரைப்பட விழா. அடுத்து ATP இரட்டையர் சாம்பியன்ஷிப் பந்தயங்கள். பெங்களூர் IT.comஆக இருக்கலாம். ஏன் இப்படி முதுகெலும்பில்லாமல் அரசு நடந்து கொள்கிறது? இந்தியாவை எப்போதும்தான் ஆபத்து சூழ்ந்திருக்கிறது. இப்போது என்ன ஒரேயடியாக அதிகப்படி கவலை? மக்களிடையே நம்பிக்கையை வளர்க்க வேண்டிய அரசு, தனது பொறுப்புகளைத் தட்டிக்கழிப்பதாகவே எனக்குப்படுகிறது.

**தி டைம்ஸ் ஆஃப் இந்தியா – கோபால் ஸ்ரீனிவாசன் (பெங்களூர்)**

உலகெங்கும் நிலவி வரும் நிச்சயமில்லாத சூழலில் இந்தியாவும் சீனாவும்தான் இந்த வருட முடிவில் தங்களது தேசிய வருமானத்தில் (GDP) வளர்ச்சியைக் காண்பிக்குமெனத் தோன்றுகிறது. இந்த இரண்டு நாடுகளிலுமே உள்ளூர் சந்தை மிகப் பெரியது என்பதையும் பொருள்கள் விற்பதற்கு ஏற்றுமதியை மட்டுமே இவை நம்பியிருக்கத் தேவையில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த பல ஆண்டுகளாக சீனா ஏற்றுமதியை நம்பியே பொருள்களைத் தயாரித்தது என்றாலும் இந்த ஆண்டு உள்ளூரில் உள்ள டிமாண்டுக்கேற்பத் தனது உற்பத்தியை நிச்சயிக்கிறது. தகவல் தொழில் நுட்பப் பிரிவிலும் மருந்துத் தயாரிப்பிலும் நம் நாட்டில் பெரும் முன்னேற்றம் என்றாலும் உலக வர்த்தகத்தில் நமது பங்கு மிகமிகக் குறைவுதான். ஒரு விதத்தில் இதுவே நல்லதாக அமைந்துவிட்டது – சரிவும் பலமாக அமையவில்லை. வணிகம் குறித்த நம்பிக்கையை அரசு உருவாக்க வேண்டும்.

**காபிடல் மார்க்கெட் – மோகன் குப்தா (சோலாபூர்)**

தொகுப்பு: **ஜி.எஸ்.எஸ்.**



## அன்பான வேண்டுகோள்

சிவானந்த குருகுலத்தில் இருக்கும் சுமார் 300 ஆதரவற்ற குழந்தைகளும், முதியோர்களும் இந்த வருடம் தீபாவளி திருநாளை மனமகிழ்ச்சியுடன் கொண்டாட பொதுமக்களிடம் உதவிக்கரம் நீட்டுகிறது.

பொதுமக்கள் அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் இக்குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக்கொள்ளப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாகவோ, அல்லது புத்தாடைகள், பட்டாசு, இனிப்பு, எண்ணெய், சியக்காய், அரிசி, கோதுமை போன்ற தானிய வகைகளை நன்கொடை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடைத் தொகையினை காசோலையாகவோ / டிராப்டாகவோ 'சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்' என்ற பெயரில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

நிர்வாகி,
'சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்'
நெ. 20 கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.
Phone: 2391078,2392444

**சென்னையில் நன்கொடை கொடுக்க வேண்டிய முகவரி :**

திரு. ரத்தன் பிரகாஷ் மல்ஹோத்ரா
M/S.பிரகாஷ் டிரேடிங் கம்பெனி,
நெ.156, தம்பு செட்டி தெரு,
சென்னை - 600 001.
Phone: 5342428, 5342803, 5342587

குருகுலம், காட்டாங்கொளத்தூர். 04114-52345 (STD) 954114-52345, 51815 (Local Call)

பின்குறிப்பு : காசோலையாகவோ / டிராப்டாகவோ 'சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்' என்ற பெயரில் தான் அனுப்ப வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம்.

E-mail : sivanand@md2.vsnl.net.in
Visit our website at:www.sivanandagurukul.org



• 'லகானி'ல்

பெரிய மனிதர்களைப் போல் இல்லாமல், பெரிய மனிதராகவே இருந்துவிட்டால், இன்னும் அதிக அபாயம்தான்! பாருங்களேன்... அமீர் கான், தனது ஸூப்பர்ஹிட் படமான 'லகானி'ன் வெற்றியை முழுவதுமாகக் கொண்டாடியிருக்கக் கூட மாட்டார். அதற்குள் அவர் தலைக்குக் குறி வைத்துவிட்டார், தற்போது நைரோபியிலிருந்து இயங்கி வரும் அபுசலீம் எனும் 'டான்'! மும்பையில் மட்டுமே அவர்மீது 60 வழக்குகள். பிரபலமானது, குல்ஷன்குமார் கொலை வழக்கு. இவன் லகானின் வெளிநாட்டு உரிமைகளை அமீரிடம் வேண்ட, அவர் மறுக்க, உடனே அவருடன், படத்தின் இயக்குனர், ஃபைனான்சியர் எல்லோரையும் தீர்த்துக் கட்ட நாலு ஆசாமிகளை ஏவிவிட்டான். கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றியிருந்த மும்பை போலீஸ், சஞ்சய் சிங், தன்வீர், பப்லூ, இம்ரான்கான் என்ற அந்த நால்வரையுமே தீர்த்துக் கட்டிவிட்டது. அமிருக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

# 'குருப்பின் குரூப் இன்ஷ்யூரன்ஸ்!

பாதுகாப்பு என்று வரும்போது பெரிய மனிதர், சின்ன மனிதர் என்ற பாகுபாடெல்லாம் பார்க்கக் கூடாது. அபாயம் என்பது போர் வடிவத்தில் மட்டுமல்ல. ரோட்டில் ஓடும் கார் வடிவத்திலும்தானே வருகிறது? இந்த உண்மையை, முலுண்டிலுள்ள வாஜி காலேஜ் ப்ரின்சிபலான, எம்.ஆர். குருப்பைக் காட்டிலும் அதிகமாக உணர்ந்தவர் யாருமிருக்க முடியாது. அவரது மாணவர்களில் ஒருவர், திடீர் விபத்துக்கு ஆளாகி, ஆபரேஷனுக்கான நிதியைப் பெற்றோரும் உற்றோரும் திரட்டி ஆஸ்பத்திரியில் கட்டும் முன்னரே, பரிதாபமாக பலியாகிவிட்டார். இந்தச் சம்பவம் அவரைப் பெரிதும் உலுக்கிவிட, மீண்டும் இப்படி ஓர் அவல நிலை உருவாகாதிருக்கும் பொருட்டு, தங்களது காலேஜில் படிக்கும் அனைத்து மாணவர்களையும் 'இன்ஷ்யூர்' செய்து விட்டார். நியூ இண்டியா அஷ்யூரன்ஸ்காரர்கள், ரூ.50,000 பாலிஸிக்கு, மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு மாணவரிடமும் வசூலிக்கும் ப்ரீமியம் ரூ.28! அதிலும் ரூ.8 காலேஜ் தரப்பில் தரப்படும். மாணவர்கள் ரூ.20 கட்டினால் போதும். மாணவர்களுக்குப் பாதுகாப்பு வளையம் அமைத்திருக்கும் முதல் காலேஜ், மும்மையிலேயே இதுதான். குருப்பின் இந்த 'குரூப் இன்ஷ்யூரன்ஸ்' பெரிய வெற்றிதான்.



பெரிய வெற்றி என்று நாம் மார்தட்டிக் கொள்பவை சில சமயங்களில் பிசுபிசுத்து பல்லிளிப்பதைக் கண்டும் காணாததுபோல் 'பாவ்லா' செய்ய வேண்டிய நிலைமை உருவாகத்தான் செய்கிறது.



• மஹிமா

மும்பையில்; 'பவன் ஹன்ஸ்' காரர்களின் பதினாறாவது ஆண்டு விழாவில் 'சிவில் ஏவியேஷன் மினிஸ்டர்' ஷாநவாஸ் ஹுசைன் பேசினாரா? அப்போது, விமானப் பயண சம்பந்தப்பட்ட பாதுகாப்பில் உலகிலேயே இஸ்ரேலுக்கு அடுத்தபடியாக மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பது இந்தியாதான் என்று பெருமை பூத்தார். கிட்டத்தட்ட அதேசமயத்தில் மும்பையிலிருந்து டெல் அவிவ் செல்லவிருந்த ஈஐஏஐ ஃப்ளைட்டில், ஒரு பெண்மணி அதுவும் இஸ்ரேலியப் பெண்மணி, இடையைச் சுற்றிக் கட்டியிருந்த பையில் ஆறு .22 துப்பாக்கி குண்டுகள் வைத்துக் கொண்டிருந்த செய்தி, தினசரிகளில் அல்லோல கல்லோலப்பட்டது. இத்தனைக்கும், இஸ்ரேலுக்குப் பயணிப்பவர்களை எல்லாம், ஏதோ வேலைக்கு ஆள் எடுப்பது போல், தனிப்பட்ட முறையில் பேட்டியே எடுப்பார்கள். அப்படியும், ஏர்லைன்ஸ் செக்யூரிட்டியின் விஸ்தார 'செக்'கிங்கில் அந்தப் பெண்மணி மாட்டவே இல்லை. விமானத்தில் ஏறுவதற்கு முன், ஏர்போர்ட் போலீசார்தான் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்திருக்கிறார்கள். ஜெட் ஏர்வேஸிலும், ஜவேரி என்ற பயணியிடமிருந்து, ஏழு புல்லட்டுகளைப் போலீசார்தான் கைப்பற்றினார்கள். என்னவோ... ஷாநவாஸ் பிழைத்துப் போகட்டும் என்று கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டியதுதான்.

'கண்டு கொள்ள மாட்டார்கள் என்ற தைரியத்தில் சிலர் அடிக்கும் கூத்தை என்னவென்பது?' - இப்படி அங்கலாய்ப்பவர் பாலிவுட் தாரகை மஹிமா சௌத்ரி. அவர் லியாண்டர் பயஸை மணமுடிக்கப் போகிறார் என்று எழுதிக் களைத்தவர்கள், இப்போது அதற்கு நாளே குறித்து, நவம்பர் 15ம் தேதி திருமணம் என்றும் செய்தி வெளியிட்டு விட்டார்கள். இன்னும் குறைந்தது



• பயஸ்

நாலு வருடங்களுக்காவது, அதாவது, நடிப்பு போரடிக்கும்வரை திருமணம் இல்லை என்று அடித்துச் சொல்லும் மஹிமா, "இதை விடுங்கள் மாதுரி தீக்ஷித்துக்கு இரண்டு மாத கர்ப்பம் என்று ஏழு மாதங்களாக எழுதி வருகிறார்களே? அதை என்ன சொல்வது?" என்று ஆச்சர்யப்படுகிறார்.

— ஜெயஸ்ரீ ராஜ்

***'உசேலே'* என்ற தமிழ் பாப் ஆல்பம் மூலம் இசையமைப்பாளராகியிருக்கிறார் பாடகர் ஸ்ரீநிவாஸ்!**

சினிமாவுல இருநூறு பாடல்களுக்கு மேல பாடியிருக்கேன். இருந்தாலும் மனசுக்குள்ள ஏதோ ஒன்று அரித்துக்கொண்டே இருந்தது. இருக்கிறது. "வேறென்ன? அடுத்து என்ன பண்ணப் போற"ங்கற ஒரு பிராண்டல் அது. எல்லா கலைஞனுக்குள்ளும் இருக்கிற விஷயம்தானே. அதுதான் எனக்கும். 'செம் பருத்தி' தொடருக்காக டைரக்டர் ராஜீவ் மேனன் பாடல் கம்போஸ் பண்ணச் சொன்னார். ''மின்சாரக் கனவு', 'கண்டு கொண்டேன் கண்டுகொண்டேன்'ங்கற அவரோட படங்களைப் பார்த்தாலே அவரோட இசை ஈடுபாடு புரியும். அவரே என்மேல நம்பிக்கை வைச்சு சொல்லும் போது எனக்குள்ள ஆயிரம் பட்டாம் பூச்சிகள் படபடத்தன. கம்போஸ் பண்ணினேன். எல்லா ட்யூனுமே அவருக்குப் பிடிச்சுப் போச்சு. இதை ஏன் ஆல்பமா பண்ணக்கூடாதுன்னு கேட்டார். அப்புறம் அவரே இதை ரெடி பண்ணி கேசட்டாகவும் வீடியோவாகவும் வந்திருக்கு.

***ஏற்கெனவே 'பார்வை' என்ற ஆல்பம் வெளியிட்டவர்தான் ஸ்ரீநிவாஸ். அந்தப் பாடல்கள் சீரியஸ் தன்மை கொண்டவை. 'உசேலே' எப்படி?***

'உசேலே' ஒரு இளமைத் துள்ளல். 'உசேலே'ங்கற ஒரு பாடல்போதும், நரம்புகளில் மின்சாரம் பாய்ச்சி நடனத்துக்கு இழுக்கிற டைப். ஒவ்வொரு பாடலும் ஏதோ ஒரு இனிமையைக் கொண்டிருக்கு. எங்கோ ஒரு பெயர் தெரியாத ஊரில் முகம் தெரியாத ஒருவர் அந்தப் பாடல்வரிகளை முணு முணுத்தால்கூட என் இதயம் ஆனந்தக் கூத்தாடும். பணத்தைவிட நாங்கள் எதிர்பார்ப்பது அதைத்தான். அந்த சுகத்தைத் தான்.

***ஸ்ரீநிவாஸ் சிறு வயதிலேயே கர்நாடக சங்கீதம் கற்றவர். பிறகு ஏன் சபா கச்சேரி களை நாடவில்லை?***

"பயம்தான் காரணம். கர்நாடக சங்கீதம் கற்றிருக்கிறேன் என்றாலும், சபாவில் பாட சின்ன உதறல் உள்ளுக்குள் இருந்து கொண்டே இருக்கு. இன்னும் நிறைய கற்க வேண்டும் என்பதாகவும் அது இருக்கலாம். இன்னும் பத்து வருடம் சங்கீதம் கற்றால் கூட என்னால் சபாவில் உட்கார்ந்து பாட முடியாது."

***பயம் இங்கு மட்டும்தானா? இளைய ராஜா இசையில் பாடும்போது கூட பயம் தானாம்!***

"அனைத்து இசையமைப்பாளர்களுடனும் பாடியிருக்கேன். ரஹ்மான் ஸ்டுடியோவில் பாடும்போது பயமும் குதூகலமும் கலந்திருக்கும். அதாவது காலேஜ் போயிட்டு வர்றமாதிரி. ராஜாட்ட பாடும்போது பயம். அவர் ஒரு ஜீனியஸ்ங்கற மரியாதைக்காகவும் இந்தப் பயம் இருக்கலாம். ஸ்கூலுக்குப் போற ஒரு மாணவனுக்கு வாத்யார் மேல இருக்கிற பயம் மாதிரி அது. இன்றைக்கு நிறைய புதுப்பாடகர்கள்



• 'உசேலே'வில்...

# ஸ்ரீயுக்க ஸ்ரீ

***வந்திருக்கிறார்கள். வேறுமொழியிலிருந்து கூட பாட வருகிறார்கள். இது பற்றி என்ன நினைக்கிறார் இவர்?***

"இது நல்ல விஷயம்தான். இன்னைக்கு நானோ, என்னைப் போல பல பாடகர்களோ வெளிவர, ஏ.ஆர். ரஹ்மான்தான் காரணம். நிறைய பாடகர்கள் வரவரத்தான் வெரைட்டி கிடைக்கும். ஆனால் வேறு மொழியிலிருந்து இங்க வந்து பாடறவங்களோட பாட்டு சிலது நல்லா இருக்கு. சிலது சரியில்லை. தமிழ் தெரிஞ்சவங்களைத் தமிழ் தெரியாதவங்க மாதிரி பாடச் சொல்றது கொடுமையான விஷயம். "உங்க வாய்ஸ் மாதிரி வேண்டாம். வேற மாதிரி ட்ரை பண்ணுங்கங்கறதெல்லாம் தேவையில்லாததுன்னு நினைக்கிறேன். பிற மொழியிலயிருந்து இங்க வந்து தமிழ்ல பாடறது அவங்களுக்கும் ஒரு பெருமையான விஷயமில்லை. பணம் சம்பாதிக்கறது மட்டும்தான் அதுல இருக்கும். சில படத்துப்



• ஸ்ரீநிவாஸ்

பாடல்களை எந்தத் தமிழ்ப் பாடகர்களும் பாடலை. எல்லாமே பிற மொழி பாடகர்கள். இது மாறணும். உள்ளூர்ல நிறைய பாடகர்கள் இருக்கும்போது அவங்களை

# நெகிழ்ச்சிகள்!

என்கரேஜ் பண்ணணும். மொத்தமா அவங்களை ஒதுக்கிடறதிலே என்ன அர்த்தம் இருக்கு? அது ஒரு மோசமான ட்ரெண்ட்!"

***கேசட்டில் பாடல் கேட்கும்போது ஒழுங்காக இருக்கிறது. அதே பாடலைக் கச்சேரிகளில் நீங்கள் பாடும் போது சில நேரம் தடுமாறுகிறதே...?***

இது எல்லாருக்கும் இருக்கிற பிரச்னைதான். ரிக்கார்டிங் தியேட்டரில் பாடும்போது சுதந்திரமாகப் பாடலாம். கவனம் முழுவதும் அதுலதான் இருக்கும். யாரும் இருக்க மாட்டாங்க. எந்த தொந்தரவும் இருக்காது. ஆனா ஸ்டேஜ்ல அப்படியில்லையே. அதான் அந்தப் பிரச்னை. ஸ்டுடியோவில்கூட என்னை அதிகமா வேலை வாங்கிய பாடல் 'உயிரே'ல வர்ற "என்னுயிரே.... என்னுயிரே...." பாடல். ஹைரேஞ்ச்... இந்தப் பாடலை ஸ்டேஜ்ல பாடும்போது சில நேரம் தடுமாறிடுவேன்.

***சரி, தமிழ்ல பாப் ஆல்பத்துக்கு வரவேற்பு எப்படி?***

இதற்கான வரவேற்பு அதிகமா இல்லை. அது தெரிஞ்சுதான் இதைப் பண்ணியிருக்கோம். மக்கள் ரசனை மாறணும். படத்துக்கான பாடல்ங்கறது அந்தப் படத்தோட வெற்றி, ஸ்டார் வேல்யூ இத வச்சுதான் ஹிட்டாகுது. ஆனா பாப் ஆல்பத்துல அப்படியில்லை. எல்லாமே நல்லா வரணும்னு ரொம்ப ரிஸ்க் எடுத்துப் பண்றோம். இது மக்களுக்குப் போய்ச் சேரணும். எஸ்.பி.பி., ஜேசுதாஸ் மாதிரியான பெரிய பாடகர்களும் தனி ஆல்பம் வெளியிடணும். டீவி. சேனல்களும் இதுக்கு நேரம் ஒதுக்கணும்ங்கறது என்னோட விருப்பம்.

***அடுத்து சினிமாவுக்கு இசையமைப்பதுதான் எண்ணமா?***

இப்போ பாடல் நல்லா போய்ட்டு இருக்கு. ஒவ்வொரு பாடல் பாடும்போதும் நிறைய சந்தோஷம் இருக்கு. இசையமைப்புல இறங்கணும். அதுக்கான நல்ல வாய்ப்பு வரும்போது நிச்சயம் இசையமைப்பாளராவேன். அதுதான் என் இலட்சியம்; கனவுங்கற மாதிரியெல்லாம் இல்லை. சினிமா எனக்கு நிறைய தந்திருக்கு. நான் இசையை இயக்குவது போக என்னை அது முழுமையாக இயக்க ஆரம்பித்து விட்டது. நான் அதன் போக்கில் சென்று கொண்டிருக்கேன் நதியில் விழுந்த இலை மாதிரி. அவ்வளவுதான்.

**— செ. ஏக்நாத்**



- பக்தர்களிடம்
  கடவுள் கேட்ட வரம்
  'அரசியலுக்கு இழுக்காதீர்கள்.'
- முதல் நாளிலேயே
  ஆசிரியரின் பிரம்பைக் கேட்டு
  அடம் பிடித்தது குழந்தை
- ஆயிரம்பேரோடு
  வேட்பு மனுத்தாக்கல்
  ஐம்பது வாக்குகள்
- இரண்டு வருடங்களாய்
  நோயால் முடியாதது
  மருத்துவத்தால் ஒரே நாளில்
- பொம்மைக்குப் பசி
  சாப்பிடவில்லை
  குழந்தை


# அப்பாவின் பொடிமட்டை!

**ச**மீபத்தில் வெளியாகியிருக்கிறது ஈரோடு தமிழன்பனின் 'ஒரு வண்டி சென்ரியு'. சென்ரியு– ஹைக்கூவைப் போல் ஒரு குறுங்கவிதை வடிவம். தமிழில் முதல் சென்ரியு தொகுப்பு இது என்று தெரிகிறது... சாம்பிளுக்குச் சில சென்ரியுக்கள்!

- தொகுதிகள்
  முடிவாகவில்லை
  தோல்வி முடிவாகிவிட்டது.
- தும்மல்கள் மொய்க்கக்
  கேட்பாரற்று
  அப்பாவின் பொடிமட்டை




வெளியீடு: மருதா பதிப்பகம்,
கடை எண்: 3, கீழ்த்தளம்,
'ரியல் ரீஜென்ஸி,'
102, பாரதி சாலை, சென்னை – 14.
விலை: ரூ. 40.



# உயிர் காக்க உதவுங்கள்!



அன்புடையீர்,

நான் தனியார் கம்பெனி ஒன்றில் சாதாரண அட்டெண்டராக பணிபுரிகிறேன். எனது மகள் செல்வி. கே. ஹேமலதா, சென்னை ஆவடி ஏ.டி.எஸ்.ல் ஐடிஐ எலக்ட்ரானிக் 2வது வருடம் படித்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய **'சிறுநீரகம்' முற்றிலும் செயலிழந்து விட்டதால்,** சென்னை காளியப்பா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறாள். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக காத்துக் கொண்டிருக்கும் அவளுக்கு, என் மனைவி சிறுநீரகம் தானம் கொடுக்கிறாள். இந்த **அறுவை சிகிச்சைக்கு** ரூ. 1,40,000/- **செலவு** ஆகும் என மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். ஆகவே நல்ல உள்ளம் கொண்ட அனைவரும், எனக்கு உதவி செய்து என் மகளை வாழவைக்க உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**V. Kandaswamy,**
**152, Pillaiar Koil Street,**
**Avadi, Chennai - 600 054.**

## V. GANAPATI STHAPATI & ASSOCIATES

வாஸ்து விஞ்ஞான அடிப்படையில் மரபு வழிப்பட்ட கோயில்கள், விமானங்கள், கோபுரங்கள் மற்றும் புதிய கலைச் சின்னங்கள் போன்றவற்றை வடிவமைத்துக் கட்டுமானம் மேற்கொள்ளல்; பழைய கோயில்களைப் பழுது பார்த்தல் (Repairs), புதுப்பித்தல் (Renovation); புனர் நிர்மாணம் செய்தல் (Reconstruction); பழைய கோயில்களைத் திருத்தி அமைத்தல் (Rectification of defective parts).

## VAASTU VEDIC DESIGNERS & BUILDERS

விஞ்ஞான அடிப்படையில் வாஸ்து இலக்கணப்படி மனைகள், வீடுகள், கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் போன்றவைக்கான வரைபடங்கள் தயாரித்தல், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல், மேலும் ஆலோசனை வழங்குதல்.

***தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :***

**Dr. V. GANAPATI STHAPATI, B.A., F.I.I.A.,**
*Traditional Architect & Builder,*
Proprietor
S46, First Avenue, Vettuvankeni,
Injambakkam, Chennai - 600 041.

Telefax : 4491384
Tel : 4492651
E-mail : vastuved@md3.vsnl.net.in
Visit at www.vastuved.com

# 4

காஞ்சனா தாமோதரன்

"ம்ம்...அடுத்து என்ன?" மின்னி அனுகாவைக் கேட்டாள்.

அனுகாவுக்குச் சிரிப்பு வந்தது. இந்த மின்னிக்கு என்ன தெரியும். டேட்டிங், ரொமான்ஸ் எல்லாம் ஏதோ கணக்குப் பாடம் மாதிரியென்று நினைத்துக்கொண்டிருக்கிறாள். அடுத்தபடி என்னவென்று கேட்கிறாள். அனுகாவுக்கும் அவளுக்கும் அதே பதினைந்துதான். ஆனால், ஆஸ்பென் பயணத்துக்கு அப்புறம் மின்னி குழந்தை போல் தெரிகிறாள். அவளிடம் ஆலன் பற்றிச் சொல்லியிருக்கக் கூடாதோ. ஆனால், அவனைப் பற்றிப் பேசவில்லையென்றால் இந்நேரம் தலை

# இக்கரையில்



வெடித்திருக்கும்.

வெள்ளிக்கிழமை சாயங்காலம். அடுத்த இரண்டு நாளும் பள்ளிக்கூடம் கிடையாது என்கிற நிம்மதி. ராஜி ஆன்ட்டியும் அம்மாவும் கீழே சமையலறையில் கதையடித்துக் கொண்டிருந்தார்கள். அப்பா வெளியூர்ப் பிரயாணம். மின்னியின் அப்பா எப்போதும் போல் உயிர்களைக் காப்பாற்ற ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தார்.

மின்னி வழக்கம் போல் அனுகாவின் அறையைச் சுற்றி வந்து, அங்குலம் அங்குலமாய் ஆராய்ந்து கொண்டிருந்தாள். தன் அறை தன்னைவிட மின்னிக்குத்தான் அதிகம் பரிச்சயமானது என்று அனுகா நினைத்துக்கொண்டாள். அனுகாவின் சி.டி.க்கள் அவ்வளவையும் திரும்ப ஒருமுறை பார்த்தாயிற்று. அனுகாவுக்குப் பிடித்த 'ன்ஸிங்க்' பாட்டுக்காரன் ஜஸ்டினின் பெரிய போஸ்டரைப் பார்த்துக் கொண்டுதான் 'அடுத்து என்ன' என்று கேட்டாள். மின்னியின் அறையில் பாடகர்கள், விளையாட்டு நட்சத்திரங்கள் ஆகியோரது போஸ்டர்கள் ஒட்ட ராஜி ஆன்ட்டி அனுமதிப்

பதில்லை. மின்னிக்கு அது ஒரு பெரிய குறை. அது மட்டும் இல்லை. இன்னும் நிறைய குறைகளும்.

"நீ அதிர்ஷ்டக்காரி, அனுகா. ஜஸ்டின் போஸ்டர், அகஸ்ஸி போஸ்டர் என்று சுவர் முழுதும் நிரப்பலாம். அடுத்து உன் அம்மா உன்னை டேட் பண்ணக் கூட அனுமதிக்கலாம்..."

"மின்னி, டேட் பண்ணுவதற்கு நீ யாரையாவது பார்த்து வைத்திருக்கிறாயா என்ன?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை, அனுகா." மின்னி அசடு வழிந்தாள். "அதற்கான சுதந்திரம் எங்கள் வீட்டில் இல்லை என்பது கேட்காமலேயே எனக்குத் தெரியும். உன் அம்மா-ரஞ்சி ஆன்ட்டி... அந்த விதத்தில் என் அம்மா மாதிரி இருக்க மாட்டாள். நிச்சயமாய்."

"மின்னி, எனக்கே இன்னும் என் அம்மா அந்த விஷயத்தில் எப்படியென்று தெரியாது. அதற்குள் நீ அவசரப்படாதே.



ஆமாம், நீ ஏன் இப்படிச் சலித்துக் கொள்கிறாய்? உனக்கு என்ன குறைந்துபோனது? கர்னாட்டிக், பரதம், டென்னிஸ், அது, இதென்று அசத்துகிறாய். எனக்குத்தான் கர்னாட்டிக்கும் பரதமும் ஒழுங்காய் வரவில்லை. என் அம்மாவுக்கு அது பற்றி நிறைய ஏமாற்றம்தான். ராஜி ஆன்ட்டிக்குச் சந்தோஷம்தானே?"

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள் காரணத்துடன். அனுகாவின் அம்மாவும் ராஜி ஆன்ட்டியும் நெருங்கிய தோழிகள். அதே சமயத்தில் படுபயங்கரப் போட்டிக்காரிகளும் கூட, ஒரு காலத்தில். அனுகாவும் மின்னியும் பிறந்த காலத்திலிருந்து எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்ப்பது அம்மாக்களுக்கு வழக்கமாகியிருந்தது. யாருக்கு முதலில் பல் முளைத்தது. யார் தலைமயிர் அடர்த்தி. கீழே விழுந்த காயம் யாருக்கு விரைவில் ஆறியது. கொஞ்சம் வளர்ந்த பிறகு போட்டி வேறு வடிவங்களில். யாருக்குப் பரத நாட்டியம் நன்றாக வருகிறது. நன்றாகப் பாடுவது யார். பள்ளிக்கூட டென்னிஸ் டீமில் இருப்பது யார். இத்யாதி.

"எனக்குத்தான் பரதமும், கர்நாட்டிக்கும் சரியாக வராமல், க்ளாஸை நிறுத்த வேண்டியதாயிற்றே. என் தமிழ் உச்சரிப்பு கூட படு மோசம். என் அம்மாவைப் பொறுத்த வரை நான் ஒரு படுபயங்கரக் கலாசாரத் தோல்வி. உன்னைப் பார். இன்னும் சில மாதங்களில் அரங்கேற்றம்." மென்சிரிப்புடன் சொன்னாள் அனுகா.

"நிச்சயமாக. பரத நாட்டிய அரங்கேற்றம் மூலம்தான் அம்மாவுக்குக் கலாசார வெற்றி வாங்கித் தரப் போகிறேன்." சிரிப்புடன் சொன்ன மின்னியின் முகம் இலேசாக மாறியது. "அனுகா, இந்த வருட 'உலகக் கலாசாரங்கள்' க்ளாஸில், இந்தியா பற்றியும் படித்தோம். அந்தச் சமுதாயத்தைப் பற்றி எனக்கு நிறையத் தெரியாது என்பது அப்போதுதான் புரிந்தது. என்னை மாதிரி, நாட்டியம், சங்கீதம், பாவாடை தாவணியென்று இருப்பதுதான் கலாசாரமா?"

படுக்கையின் குறுக்காகக் கவிழ்ந்து படுத்துக் கொண்டிருந்த அனுகா எழுந்து உட்கார்ந்து, முழங்கால்களைக் கட்டிக் கொண்டாள். பாதங்களைப் படுக்கையிலிருந்து உயர்த்தி, ஆடுகுதிரை போல் அசையத் தொடங்கினாள். "நாட்டியம், சங்கீதம், பாவாடை, தாவணி மட்டும்தான் கலாசாரமென்றால், சென்னையிலேயே வளரும் என் மாமா பெண் உன்னை விடக் கலாசாரத்தில் குறைந்தவள் என்று சொல்ல வேண்டியிருக்கும், மின்னி. ஆனால், அது சரியா? கலாசாரம் என்பது ஒரு வாழ்க்கைப் பார்வை? வாழும் இடத்தைப் பொறுத்தோ?"

"இடம் மட்டுமென்று சொல்ல முடியாது, அனுகா. என் அம்மாவைப் பார். தான் வளர்ந்த இடத்தை மட்டுமில்லை, காலத்தையும் தன்னோடு பெயர்த்துக் கொண்டு வந்திருக்கிறாள் அவள். யு.எஸ்.ஸில் காலத்தோடு ஏதோ ஒரு வகையாக முன்னேறுகிறாள். ஆனால், அவள் விட்டு வந்த நாடு அவளுள் ஒரு கால கட்டத்திலேயே உறைந்து கிடக்கிறது. அந்த உறைந்த காலத்தை என் மேலும் திணிக்கப் பார்க்கிறாள். இது சரியா?"

அனுகா ஆடுகுதிரையாவதை நிறுத்தினாள். "மின்னி, நீ இந்தக் கேள்வியை ராஜி ஆன்ட்டியிடம் கேட்டிருக்கிறாயா?"

"இல்லை, அனுகா. அம்மா மனத்தைக் கஷ்டப்படுத்த எனக்கு விருப்பமில்லை."

"ஆனால், நீ இதைப் பற்றி நிறைய யோசித்திருக்கிறாய். என்னைவிட அதிகமாகவே. உன் மன அழுத்தத்தை உன் அம்மாவிடம் பகிர்ந்து கொள்வது முக்கியமில்லையா?"

"வீட்டில் அம்மா சொன்னதைச் செய்வது பற்றி எனக்குப் பிரச்னை இல்லை, அனுகா. ஆனால் வெளியுலகம் எவ்வளவு வித்தியாசமானது. இரண்டு உலகத்திலுமே



**"என் புருஷனை டைவர்ஸ் பண்ணலாமான்னு பார்க்கறேன்..."**

**"எதுக்குடி?"**

**"சீரியல் பார்த்துட்டு அழும்போது ஆறுதலே சொல்ல மாட்றாரு!"**

**— எஸ். எஸ். பூங்கதிர்**

என்னால் வாழ முடிகிறது. அதே சமயத்தில், இரண்டிலுமே ஆழம் இல்லை என்று தோன்றுகிறது. ஏதாவது நடந்ததால் நான் இப்படிப் பேசுகிறேனோ என்று நினைக்காதே. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இதெல்லாம்...... சும்மா....... உணர்வுகள். அம்மாவிடம் இப்படிப் பேச முடியாது."

"ஏன்?"

"ஏதோ ஒரு மௌனத் தடை. அவள் முதலில் போட்டதா, நான் போட்டதா என்று தெரியவில்லை. ஆனால், அது இருப்பது எங்கள் இரண்டு பேருக்குமே தெரியும். அதை இதுவரை தாண்டியதில்லை."

''அம்மா மனத்தைக் கஷ்டப்படுத்த விருப்பமில்லை என்கிறாய். இப்போது ராஜி ஆன்ட்டியிடம் மனம் திறந்து பேச முடியுமென்றால், நீ என்ன சொல்வாய்?''

''நான் யாரென்று புரிந்து கொள்ள என்னையே அனுமதிப்பாயா அம்மா.... இதுதான்.'' மின்னியின் குரலில் ஒரு மெல்லிய சுமறல். அனுகாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

அனுகாவுக்கும் அழ வேண்டும் போலிருந்தது. சற்று நேரம் மௌனமாயிருந்தாள். மின்னியின் கேள்வி சாதாரணமானதாய்த் தெரியவில்லை.

"மின்னி, நம் அம்மாக்கள் பற்றி இன்னொரு கோணத்தில் நினைத்துப் பார்த்திருக்கிறாயா? என் அம்மா மேற்படிப்பிற்காகத் தனியாக இங்கு வந்தவள். உழைப்பினால் முன்னுக்கு வந்தவள். இங்கேயே பிறந்த பலர் கூட எட்ட முடியாத உயரத்தில் நிற்கிறாள். ராஜி ஆன்ட்டியைப் பார். உன் தாத்தாவும் பாட்டியும் அவளைப் பொத்திப் பொத்தி, அந்தக் காலத்துப் பெண்ணாய் வளர்த்தார்கள். இருந்தும், இன்று எல்லாவற்றையும் எவ்வளவு திறமையாக நிர்வாகம் செய்கிறாள். இருவருமே சாதனைப் பெண்கள்தானே!"

"தெரியும், அனுகா. சில சமயம் நம் அம்மாக்களைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. அந்நிய மண்ணில் கொஞ்சம் தங்கள் வேரடி மண்ணையும் தக்க வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். அதே சமயத்தில், எனக்கும் உரிமைகள் உண்டு இல்லையா? சரி, அதை விடு. நாம் எங்கேயோ போய்விட்டோம்.'' மின்னி சிரித்தாள். "முதல் கேள்விக்கு வருவோம். ஆலனும் நீயும் அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்?''



**''லட்சக்கணக்குல லோனை வாங்கிட்டு பத்து பைசாகூட கட்டாமல் என்னை இப்படி லோ... லோன்னு அலைய வைக்கிறீங்களே, இது உங்களுக்கே நல்லா இருக்கா?''**

**''கடன் கொடுக்கறதுக்கு முந்தி என்னை எப்படியெல்லாம் அலைய விட்டீங்க, அது மட்டும் நியாயமா?''**

**— சீர்காழி ரேவதி**

ஆலனை இத்தனை நேரம் மறந்திருந்தது அனுகாவுக்கு ஆச்சரியமாயிருந்தது. புன்னகை செய்தாள். "ரஹ்மானின் இந்திய இசை கேட்க வேண்டுமென்று சொன்னான். அம்மாவிடம் சி.டிக்களைக் கேட்க வரச் சொல்லியிருக்கிறேன்."

''ஆன்ட்டியிடம் மட்டும் பேசினால் போதுமே? உனக்கு ரஹ்மானின் பாட்டு பற்றி என்ன தெரியும்?'' மின்னி நன்றாகவே சிரித்தாள்.

"ஹேய், கிண்டலா? உனக்கு ஞாபகம் இருக்கிறதா? தமிழ்ச்சங்கப் பொங்கல் விழாவில் 'சின்ன சின்ன ஆசை' பாட்டுக்கு நாம் ஆடினோமே. மூன்றாம் வகுப்பில் இருந்தோமோ? ராஜி ஆன்ட்டிதானே நமக்கு ஆடச் சொல்லிக் கொடுத்தது...'' அனுகா சிரித்தாள். மின்னியின் முகம் இப்போது கொஞ்சம் தெளிந்திருந்தது நிம்மதியாய் இருந்தது. "மின்னி, அரங்கேற்றம் அளவுக்கு வந்து விட்டாய். கொஞ்சம் ஆடிக் காட்டேன்."

ஜஸ்டின் டிம்பர்லேக், ப்ரிட்னி ஸ்பியர்ஸ், ஆண்ட்ரே அகஸ்ஸி எல்லாரின் போஸ்டர் புன்னகைகளுக்கும் நடுவே, "ந.....ட.....னம்ம்ம் ஆ.....ஆ.....டி.....னார்.....'' என்று கணீரென்ற குரலில் பாடியவாறு அபிநயம் பிடிக்கத் துவங்கினாள் மின்னி.

கீழே சமையலறையில், அம்மாக்களும் பேசிக் கொண்டிருந்தனர். விதுவைப் பற்றி ராஜி சொன்னதைக் கேட்டு ரஞ்சி அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

(தொடரும்)

## லேடனின் - பீதியில் அமெரிக்கர்கள்!

**த**லைக் கவசம், உடல் கவசம், கைகளுக்கு க்ளவுஸ், முகத்துக்குக் காஸ்-மாஸ்க் என்று நூற்றைம்பது டாலர்களுக்குக் கிடைக்கும் எல்லா பாதுகாப்பு உடைகளையும் வாங்கி வைத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள் அமெரிக்கர்கள்.

அதிலும் ராணுவ - கப்பல் படை ஸ்டோர்களில், 'காஸ் மாஸ்க்கா? ஸாரி, எல்லாம் தீர்ந்து போய்விட்டதே?' என்பது வழக்கமான பதிலாகிவிட்டது.

காற்றிலேயே கலந்து தொற்று நோயைப் பரப்பும் தன்மை கொண்டது ஆந்த்ராக்ஸ். மூச்சுக்குழலை அடைத்து உடனடி மரணம் விளைவிக்கும். ஆரம்பத்திலேயே ஆன்டிபயாடிக்ஸ் மருந்து கொடுத்தால் மட்டுமே பலன் இருக்கும். ஆந்த்ராக்ஸ் அவதியைப் போக்க சிப்ரோ மாத்திரைகள் ஆயிரக்கணக்கில் பாஸ்டன் முதலிய நகரங்களின் மருந்துக் கடைகளில் விற்றுத் தீர்ந்துகொண்டிருக்கின்றன.

காலரா, அம்மை, பிளேக் போன்ற கொடிய நோய்களின் நோய்த் தொற்றுக் கிருமிகளையும், வைரஸ்களையும்கூட தாக்குதலுக்கான ஆயுதம் போலவே, பயங்கரவாதிகள் பயன்படுத்தக்கூடும் என்ற அச்சம்வேறு மக்களிடையே எழுந்திருக்கிறது. இது அத்தனை எளிதானது அல்ல என்றாலும் கூட, சாத்தியக் கூறுகளை மறுத்துவிடத் தயாராயில்லை. சாவு தண்ணீரில் வருமோ, காற்றில் வருமோ என்ற பயம் இருக்கிறது. 100 டாலர்களுக்குக் கிடைக்கும் நீர் சுத்தப் படுத்தும் கெமிகல் பொட்டலத்துக்கு ஏகக் கிராக்கி!

**சா**தாரண அமெரிக்கர்கள் தவிர, புலனாய்வு, உள்நாட்டுப் பாதுகாப்பு, விஞ்ஞானத் துறை, சட்டத்துறைகளில் பணியாற்றுவோர் இடையேகூட, கெமிகல் யுத்தம் பற்றி இரண்டு வகைக் கருத்துக்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் சில பயங்கரவாதிகள் கொடிய நோய்க் கிருமிகளைப் பரப்பியும், கெமிகல்களைத் தூவியும் முன்பே தாக்குதல்கள் நடத்தியிருப்பதால், அவர்கள் மறுபடி இந்த முறையை கையாள மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? என்று கேட்கிறார்கள்.

பில் பாட்ரிக் என்பவர் இதில் அனு



பவம் உள்ளவர். மைக்ரோபயாலஜிஸ்ட். சுமார் 35 வருடங்கள் அமெரிக்காவின் பயோ-வெப்பன்ஸ் புரோக்ராம் ஆய்வாளராக இருந்தவர். இப்போது, கிருமித் தொற்று எனப்படும் ஆயுதத்தைக் கொண்டு போர் தொடுக்கும் புதிய வகை தாக்குதல்கள் பற்றி நன்கு அறிந்த ஆலோசகர். (இவரது விசிட்டிங் கார்டில் போடப்பட்டிருக்கும் மண்டையோடும், எலும்புத் துண்டுகளும், நம்மூர் சூளைமேடு பில்லி சூனிய மந்திரவாதியை நினைவுபடுத்தும்!)





# புதுவகைத் தாக்குதல்கள்!

''உடனடியாக ஏதாவது செய்தால் ஒழிய, இது போன்ற தாக்குதல்களிலிருந்து தப்பிப் பிழைப்பது கடினம்'' என்கிறார் பில் பாட்ரிக்.

மேற்கொண்டு படிப்பவர்கள், மனசைக் கொஞ்சம் திடப்படுத்திக் கொள்ளுங்கள்.

செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து ஆந்த்ராக்ஸ் கிருமிகளையும் பொட்டூலினம் டாக்ஸின்களையும் ஒஸாமாவின் ஆட்கள் வாங்கி வைத்துக் கொண்டு பரிசோதனை செய்து பார்த்திருக்கிறார்களாம். ஜலாலாபாதிலுள்ள அவருடைய பயிற்சிக்கூடத்தைச் சுற்றி நிறைய முயல்களும், நாய்களும் இறந்து கிடந்ததை அமெரிக்க புலனாய்வு ஏஜென்சிகள் கண்டிருக்கின்றன.

# ஆந்த்ராக்ஸ் • • அபாயம் • இந்தியாவுக்கு • வருமா?

அமெரிக்காவை அடுத்து, பின்லேடனின் குறி இந்தியா என்று கூறப்படும் சூழ்நிலையில், இந்தியாவுக்கு ஆந்த்ராக்ஸ் அபாயம் வந்து விடுமா? என்ற கேள்விக்கு விடையளிக்கிறார் பயோடெக்னாலஜிஸ்ட் டாக்டர் ஜகன்னாதன்.

ஆந்த்ராக்ஸ் என்பது ஆபத்து நிறைந்த ஒரு நுண் உயிரிதான். இதனை உருவாக்குவதற்கு அதி நவீன சோதனைக் கூடங்கள் தேவையில்லை. வெகு சாதாரணமான வசதிகளே போதுமானது. மிகச் சுலபமாக, இந்த நுண் உயிரிகளை உருவாக்கி, பெருக்கி விட முடியும். அதன்பின் திட (பவுடர்) அல்லது திரவ உருவத்துக்கு மாற்றி, பாதிப்புகளை ஏற்படுத்த முடியும்.

ஆனால் ஒரு விஷயம். பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி மீடியா மூலமாக, இந்த விஷயம், அளவுக்கு அதிகமாகப் பெரிதுபடுத்தப்பட்டு, மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. பலரும் நினைப்பது போல், ஒரே நேரத்தில் பல்லாயிரம் பேரைக் கொல்லும்படியாக, ஆந்த்ராக்ஸைப் பயன்படுத்துவது சாத்தியமில்லை.

கொஞ்சம் விளக்கமாகவே சொல்லுகிறேன்.

ஆந்த்ராக்ஸ் மூன்று விதமாக மரணம் ஏற்படுத்தும். ஆந்த்ராக்ஸ் கலந்த பவுடர் அல்லது திரவத்தைத் தொடர்ந்து, பல நிமிடங்கள் நேரடியாக சுவாசித்தால் அது நுரையீரல்களைத் தாக்கி, மரணம் ஏற்படுத்தும். உடம்பில் வெட்டுக் காயம் ஏதுமிருந்து, நேரடியாக ஆந்த்ராக்ஸ் தொடர்ந்து பட்டுக்கொண்டே இருந்தால், பாதிப்பு ஏற்படும். மூன்றாவதாக, பூமியில் படிந்த ஆந்த்ராக்ஸ் பவுடர் அல்லது திரவம் உள்ள பகுதியில் உள்ள பிராணிகளின் மாமிசத்தை, சரியாக சமைக்காமல் சாப்பிட்டால் பாதிப்பு ஏற்படும். இரண்டாவது, மூன்றாவது ரக பாதிப்புகளில் உடல் நலம் குன்றி, சரியான ட்ரீட்மெண்ட் இல்லாது போனால், மரணம் நிகழுமே தவிர, உடனடி மரணம் நிகழாது!

ஆந்த்ராக்ஸ் தாக்குதலுக்குட்பட்டவர்களுக்கு அதிக வீரியமுள்ள ஆன்டிபயாடிக் மருந்துகளை உடனடியாகக் கொடுத்து, உயிர் பிழைக்க வைத்து விட முடியும். ஆந்த்ராக்ஸ் தாக்குதலுக்கு ஆளாகாமல் தப்பிக்க, தடுப்பு ஊசியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சரி, இந்திய சூழ்நிலைக்கு வருவோம். மேற்கத்திய நாடுகளில் மருத்துவ விஞ்ஞான முன்னேற்றம், சுகாதார சுற்றுச்சூழல், வாழ்க்கை முறை போன்ற

ஆனால் அமெரிக்க அதிகாரிகள் 'இதெல்லாம் கதை!' என்று மறுத்திருக்கிறார்கள். ஆனால் சி.ஐ.ஏ.வின் இயக்குநர், "பயங்கரவாதிகளுக்கு நாடாவது கொடியாவது! அவர்கள் யாருக்குப் பதில் சொல்ல வேண்டும்? கெமிகல், பயலாஜிகல் வகை ஆயுதங்களை அவர்கள் வைத்துத்தான் இருக்கிறார்கள்!" என்று அடித்துச் சொல்லிவிட்டார்.

பின்லேடனின் பயிற்சி முகாமில் ஆறு மாதம் இருந்துவிட்டுப் பிடிபட்ட அகமது ரெஸ்ஸாம், ஆபீஸ் கட்டடங்களில் சயனைட் விஷத்தை எப்படிப் பரப்புவது என்று சொல்லிக்கொடுத்தார்கள் என்ற உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறான். டாக்ஸிக் எனப்படும் நச்சுப் பொருளை, தாழ்வாகப் பறக்கும் விமானம் மூலம் தூவ, ஒஸாமா மிகுந்த ஆர்வம் காட்டுவதாகவும் சொல்லியிருக்கிறான்.

1984ல் ரஜனீஷின் ஆதரவாளர்கள் குடிநீரில் சால்மோனல்லா விஷத்தைக் கலக்கியதில் 751 பேர் வாந்தியும், மயக்கமும், தலைசுற்றலுமாக ஒரேகான் நகரில் பாதிக்கப்பட்டதாகவும் ஆனால் யாரும் இறக்கவில்லை என்றும் இதுவே அமெரிக்காவில் முதல் முதலாகக் கையாளப்பட்ட ரசாயனப் போரின் ஆரம்பம் என்றும் சொல்கிறார்கள். (இதன் பின்னணி பற்றிய தகவல்கள் இல்லை). இன்னொரு சம்பவம், டோக்கியோ தரையடி ரயில்வே ஸ்டேஷனில் ஓம் ஷின்ரிக்யோ பிரிவினர், நரம்புகளைப் பாதிக்கும் சரின் ரசாயனப் பொருளைப் பிளாஸ்டிக் பையில் அடைத்துக் கொண்டு போய், குடைக் கம்பியால் பையைக் குத்திக் கிழித்து,

காரணங்களால், அவர்கள் உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தி, இயற்கையிலேயே குறைவு. ஆனால், நமக்கு அப்படி இல்லை. நம்மைப் போன்ற வளரும் நாடுகளில் மக்களின் சுகாதாரமற்ற வாழ்க்கை முறை இயற்கையிலேயே, உடம்பில் அதிகமான நோய் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்துகிறது. அது மட்டுமின்றி, தினமும் ஆயிரக்கணக்கான நுண் உயிரிகள், நாம் அறியாமலேயே நம்மைத் தாக்கிக் கொண்டுதான் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை ஆபத்தில்லாதவை. ஆபத்தான ஒரு சிலவற்றால் ஏற்படும், பிரச்னைகளையும் நம் உடம்பில் இருக்கிற இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி, போரிட்டு, சமாளித்து விடுகிறது. அதையும் மீறி நோய் வருகிறபோது மருந்துகளின் உதவியுடன் சமாளிக்கிறோம். ஆகவே, ஆந்த்ராக்ஸ் தாக்குதல், பெரிய அளவில் மனிதர்களுக்குச் சேதம் ஏற்படுத்தும்படி இந்தியாவில் நடக்க வாய்ப்பு இல்லை. ஆனாலும், அந்த ஆபத்தை உதாசீனப் படுத்தி விடவும் முடியாது.''

— மௌலி



• ஜகன்னாதன்

தாக்குமளவுக்கு உருவாக்குவது கடினமான வேலை'' என்கிறார்கள் நிபுணர்கள்.

ஆனால், ''பாக்தாத் பல்கலைக் கழகத்துக்குச் சால்மோனல்லா விற்கப்பட்டதையும், ஈராக் வணிக அமைச்சகத்துக்கு ஆந்த்ராக்ஸ் முதலிய 'பாதோஜென்'கள் விற்கப்பட்டதையும், டோக்கியோ விபத்துக்கு முன் ஆந்த்ராக்ஸ் மற்றும் பொட்டுலினம் பரவ விட்டதையும் மறுப்பதற்கில்லையே'' என்கிறார் நியூயார்க் டைம்ஸ் நிருபர் ஒருவர்.

காலரா, பிளேக், வைசூரி அம்மை போன்றவற்றின் பாக்டீரியாக்களை இன்னும் பல நாடுகள் தங்கள் ஆராய்ச்சிக் கூடங்களில் பாதுகாப்பாக வைத்திருக்கக்கூடும். கஸகஸ்தானில், முந்தைய சோவியத் யூனியனின் ரசாயன புகையைப் பரப்பினார்களாம். பன்னிரண்டு பேர் இறந்து போனார்கள்!

'காஸ் டெர்ரரிஸம்' என்ற இந்த வகை ரசாயன, விஞ்ஞானத் தாக்குதல்கள் சாத்தியமே என்று இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் நிரூபிக்கின்றன.

ரொம்பவே பயந்துவிட்டவர்களுக்குக் கொஞ்சம் ஆறுதலான செய்தி :

''இதெல்லாம் அத்தனை எளிதல்ல. அதிலும் பெருமளவுக்கு அழிவை உருவாக்குகிற மாதிரியான 'பேதோஜன்'களை வாங்கி அவற்றை நாட்படப் பக்குவப்படுத்தி, ஆயுதம் என்கிற அளவுக்குப் பூதாகாரமாக வளர்த்து, எதிரிகளைத்

இந்த ரசாயனவகைப் போர் உண்மையிலேயே சாத்தியம்தானா? என்று ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி லெப்ட். கர்னல் பி.ஆர். கங்காதரனைக் கேட்டோம் :


''சாத்தியமில்லை என்று சொல்ல முடியாது. பயங்கரவாதிகள் இதற்கான வசதிகளை வைத்திருக்கிறார்கள். மெல்ல மெல்ல இதைச் செயல்படுத்துவார்கள்.

''பயலாஜிகல் சண்டைக்கான இட்டங்களை ஈராவில் ஒரு தொழிற்சாலையில் தயாரித்து வந்ததைப் பல நாடுகளும் அறிந்திருந்தன. குவெய்த்திடமும் இந்த வசதி இருந்தது. ஐ.நா. அதிகாரிகள் அங்கு சென்று அவற்றை அழித்தார்கள்.

''அதேபோல, சோவியத் நாட்டின் ப்ளூட்டோனியம் காணாமற் போனதாகச் சொல்லப்பட்டது. இது எங்கே போயிற்று? பயங்கரவாதிகள் கைகளுக்கு இவை கிடைக்காது என்று என்ன நிச்சயம்?

''நாம் இதை எல்லாம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போதே ஆந்த்ராக்ஸ் கிருமிகள் அபாயம் அமெரிக்காவில் பயத்தையும் பீதியையும் கிளப்பியிருக்கிறது. எந்தெந்த வகைகளில் ரசாயனப் போர் நடத்தலாம் என்று பயங்கரவாதிகள் திட்டமிடுவதை அமெரிக்கப் புலனாய்வுத்துறை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்!''





**ஆல் – இன் – கார்...**

ஐரோப்பிய நாட்டில் கார் வைத்திருப்பவர்கள் இது போன்ற (படம்) ஒன்றை உடன் எடுத்துச்செல்வார்கள். இதனுள் ஒரு டி.வி. வீடியோ மற்றும் ஒரு டி.வி.டி சிஸ்டமிருக்கும். தேவையானபோது, இந்த டி.வி திரையில் வரைபடங்களைப் பார்த்து, வழியைத் தெரிந்து கொண்டு பயணத்தைத் தொடர்வார்கள். ஓய்வு மற்றும் இரவு நேரத்தில் – இதன் மூலம் டி.வி மற்றும் சினிமாக்களைப் பார்ப்பார்கள். இதற்கான இயக்க சக்தி காரின் பேட்டரியிலிருந்து கிடைக்கிறது!

– பாரீஸ் பார்த்தசாரதி

ஆயுதக் கிடங்கில், பல்ப பது வகை ஆந்த்ராக்ஸ் கிருமிகளை தவிர, பிளேக், காலரா கிருமிகளும் வைத்திருக்கிறார்களாம். ஆனால் பலத்த, கடுமையான பாதுகாப்பு இவற்றுக்குப் போடப்பட்டுள்ளதாம். இதில் அச்சுறுத்துகிற விஷயம் என்னவென்றால், இவற்றில் வேலை பார்த்த பலர் இப்போது வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இன்னும் சில நிபுணர்கள் இராக்கிலும், ஈரானிலும் வேலைக்குச் சேர்ந்து விட்டார்கள். எனவே ரசாயன ஆயுதப் போர் என்று பேசப்படும்போது, இம்மாதிரியான நபர்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள். ஜாக்கிரதையாக இருக்கத்தான் வேண்டும் என்கிறார் இந்தப் பரிசோதனைக்கூட அதிகாரி.

செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு, அமெரிக்க அதிகாரிகள் மிகவும் விழிப்பாகவே இருக்கிறார்கள்.

மாமிச உணவு பதப்படுத்தும் கூடங்களில் கூடுதல் கண்காணிப்பு இருக்கிறது. சுற்றுச் சூழல் பாதுகாப்புத் துறையினர் நீர், குடிநீர் அமைப்பைக் கண்காணிக்கிறார்கள். பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் விஷயத்தில் சுகாதாரத் துறையின் மேற்பார்வை இருந்து வருகிறது. இதை மீறியும் அபாயம் அச்சுறுத்துகிறது!

வைசூரியைத் தடுக்க பன்னிரண்டு மில்லியன் டோஸ் வாக்ஸின் கையிருப்பு இருக்கிறது. சயனைட் விஷத்தை முறிக்க மருந்துகள் தயாராக இருக்கின்றன.

அல்-கய்தா பயங்கரவாதிகளுக்கு இந்த வகை ரசாயனத் தாக்குதல்களை நடத்தப் போதுமான விஞ்ஞான அடிப்படை இல்லை என்பது ஆறுதலான விஷயம். ஆனால் பயங்கரவாதிகள் சும்மா இருக்க மாட்டார்கள். கற்றுக் கொண்டுவிடுவார்கள், எப்பாடுபட்டாவது.

'அதனால் எதையும் எதிர்கொண்டு சமாளிக்க மன உறுதியோடு இருப்போம். இப்போதைக்கு இதுதான் முக்கியம்!' என்கிறது அமெரிக்கா!

தொகுப்பு : **சாருகேசி**

(நன்றி : 'நியூஸ்வீக்')

புதுயுக யோகா – 4

# விரட்டுங்க ஆஸ்துமாவை!

டாக்டர் ஏ.எஸ். அசோக்குமார்

**யோ**காசன விளக்கத் தொடர் ஆரம்பித்ததிலிருந்து ஏகப்பட்ட சந்தேகங்களுடன், தொலைபேசி அழைப்புகளும், கடிதங்களும் வருகின்றன. பெரும்பாலானோரின் சந்தேகம் என்ன தெரியுமா?

'யோகாசனம் செய்பவர்கள் கடைபிடிக்க வேண்டிய முக்கிய விதிகள் என்ன?' என்பதுதான்.

கட்டுரையின் ஆரம்பத்திலேயே சொல்ல வேண்டிய விஷயம்தான். ஆனால் வாசகர்களைத் தொடருக்குள் ஈர்த்துவிட்டு, விதிகள் பற்றி எழுதினால், சிரமமாக உணர மாட்டார்கள் என்ற காரணத்தினால் கொஞ்சம் வாய்தா வாங்கிக் கொண்டோம். இந்த வாரம் யோகாசனம் செய்பவர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விதிகளை முதலில் தெரிந்து கொண்டு, பின்பு ஆசனம் பயிலலாம்.



1) யோகாசனம் பயில காலை ஐந்திலிருந்து ஏழு மணி வரையிலும், மாலை ஐந்திலிருந்து ஏழு மணி வரையிலும் ஏற்ற நேரம்.
2) யோகாசனம் பயில ஆரம்பிக்கும்போதும், முடிக்கும் போதும் ஒரு நிமிடம் அமைதியாக பத்மாசனத்தில் அமர்ந்திருக்க வேண்டும்.
3) சிறுநீர், மலம் கழித்துவிட்டு, முகம், கை, கால் கழுவிவிட்டு, ஆசனங்களைப் பழகலாம். முடிந்தால் குளித்து விட்டுப் பழகலாம். ஆசனங்கள் செய்துவிட்டு குளிப்பதானால் இருபது நிமிடம் கழித்துக் குளிக்கலாம்.
4) இயற்கையான காற்றோட்ட வசதி உடைய இடத்தில், விரிப்பின் மீது பழக வேண்டும். மொட்டைமாடியில், திறந்த வெளியில் செய்வது மிகவும் உகந்தது. அந்த வசதியில்லாதவர்கள், மின்விசிறியைக் குறைந்த ஓட்டத்தில் வைத்துப் பழகலாம்.
5) பயிற்சியை முடித்து இருபது நிமிடங்கள் கழித்தே, உணவு அருந்த வேண்டும்.
6) இரவு கண் விழித்த மறுநாள் காலை, நீண்ட தூரம் பயணம் செய்த நாள், எண்ணெய் தேய்த்து தலை முழுகிய நாள், அதிக உடல் சோர்வு, ஜுரம், தலைவலி இருக்கும் நாட்களில் ஆசனங்கள் செய்யாமல் ஓய்வு எடுக்க வேண்டும்.
7) தினமும் குறைந்தது இருபது நிமிடம், அதிக பட்சம் நாற்பத்தைந்து நிமிடம் பயிற்சி செய்து வந்தாலே போதும். ஆச்சரியமான பலன்களை அடையலாம்.
8) அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் ஆசன நிபுணரின் ஆலோசனையுடன் ஆறுமாதம் கழித்து, பயிற்சி

செய்யலாம்.

9) உருளைக் கிழங்கு, வாழைக்காய், பால், தயிர், சர்க்கரை, முட்டை, பொரித்த உணவு போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது.

10) மன அமைதியுடன், பரபரப்பு இல்லாமல் குறிப்பிட்ட நேரம் வரையில் மட்டுமே ஆசன நிலையில் இருக்க வேண்டும்.

11) பயிற்சியின் போது மூச்சை மூக்கால் இழுத்து, மூக்கால் விட வேண்டும். வாய் மூடியபடி இருக்க வேண்டும்.

12) நீங்கள் பயிற்சி செய்வதை, மற்றவர்கள் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். 'அடுத்தவர் பார்க்கிறாரே!' என்ற எண்ணத்தில், உங்கள் மனோநிலை மாறக் கூடும். கவனம் சிதறும் வாய்ப்பு உண்டு.

**இந்த வார யோகா மொழி**

குரு இல்லாத வித்தை, குருட்டு வித்தை. தொட்டுக் காட்டாத வித்தைச் சுட்டு போட்டாலும் வராது.

## ஆஸ்துமாவை விரட்டும் மக்கராசனம்

மக்கரா – முதலை

நீரிலுள்ள முதலைகள், சில நேரங்களில் கரையோரம் ஒதுங்கி, அசையாமல் படுத்து ஓய்வெடுக்கும். இந்த ஆசனம் அந்த அமைப்பை ஒத்துள்ளதால் இந்தப் பெயர்.

## ஆஸ்துமா அவதிப்படுத்தும் நோய்!

ஆஸ்துமா இழுப்பின் போது மல்லாந்து படுக்க முடியாது. அப்படிப் படுத்திருந்தால், நெஞ்சுவலி அதிகமாகி மூச்சு இன்னும் அதிகமாய் முட்டும். அந்த நேரத்தில் 'மக்கராசனம்' மூச்சுக் கொடுக்கும்.

விரிப்பின் மீது படுத்து, 'மக்கராசனத்தில்' பத்து நிமிடம் இருந்தால் போதும், மூச்சு சீராகி, உடலும் ஓய்வு பெறும்.

புஜங்காசனம், சலபாசனம் செய்து முடித்ததும், நுரையீரலுக்கு அதிக பிராண சக்தி சென்று வரும். அப்போது சிறிது மூச்சு வாங்கும். அந்த சமயத்தில் மக்காராசனத்தில் இருந்தால், இரண்டே நிமிடத்தில், மூச்சு சாதாரண நிலைக்கு வந்துவிடும்.

### செய்முறை:

1) சலபாசனம் செய்து முடித்ததும் இரண்டு கைகளையும் முன்னால் கொண்டு வரவும்.

2) வலது கையை மடித்து, இடது தோள்பட்டை மீதும் இடது கையை மடித்து, வலது தோள் பட்டையின் கீழும் வைத்து, முகத்தை மடித்து கைகளின் இடையே வைத்து, நெற்றிப் பொட்டை, கைகளின் மீது அழுத்தி வைக்க வேண்டும்.

3) கால்களைப் பிரித்து, விலக்கி வைக்கவும். மூச்சை நன்கு ஆழமாக இழுத்து விடவேண்டும். கண்கள் மூடியிருக்க வேண்டும்.

4) சில விநாடிகளுக்குப் பிறகு, கால்களை ஒன்று சேர்த்து, கைகளைப் பிரித்து நீட்ட வேண்டும். வலது அல்லது இடது புறமாக புரண்டு, ஒருக்களித்து எழுந்து அமர வேண்டும்.

### பலன்கள் என்னென்ன?

1) ஆஸ்துமா, நுரையீரல் பிரச்னை உள்ளவர்களுக்கு அதிக பலனையும், நல்ல ஓய்வையும் தருகிறது.

2) படபடப்பு, தூக்கமின்மை, இருதய பலவீனம், அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குப் பலன் தரும்.

3) கண்வலி, கண் அயர்ச்சி போக்கும். 'வீஸிங்' வந்து விட்டால் திணறிப் போகும் அன்பர்கள், நம்பிக்கையுடன் செய்து பாருங்கள். மூச்சுப் பிரச்னைக்கு முடிவு ஏற்படும்.

அப்ப, அடுத்த வாரம்...

படம்: ஸ்ரீஹரி

**எச்சரிக்கை : இங்கே தரப்பட்டுள்ள யோகாசன பயிற்சி முறைகள் தகவலுக்காக மட்டுமே. இவை வழிகாட்டி முறைகள் அல்ல. யோகாசன நிபுணரின் நேரடி கண்காணிப்பில்தான் பயிற்சி தொடங்க வேண்டும்.**






# அன்பின் சின்னங்கள்

நவராத்திரி விழா பூக்களின் மென்மை குணம் கொண்டு அன்பின் காவியங்களாய் திகழும் பெண்மணிகளை போற்றிப் புகழும் விழா. ஆடலும், பாடலும் கொண்ட இனிய விழாக்காலத்தில் புத்தம் புதிய சீட்டுத்திட்டங்களோடு, பரிசுகளையும் அன்பின் சின்னங்களாக தந்து உங்கள் இல்லத்தையே... சந்தோஷத்தில் ஆழ்த்துகிறது ஸ்ரீராம் சிட்ஸ்.


**சந்தாதாரர் பரிசுகள்**

**அறிமுகப்படுத்துவோர் பரிசுகள்**













## ஸ்ரீராம் சீட்டுத்திட்டங்கள்:


உங்கள் அன்பின் சின்னமாய் திகழும் முதலீட்டு முறை.

ஸ்ரீராம் சிட்ஸ் வரலாறு ஒரு அன்பின் கதை. கடந்த 27 வருடங்களாக 30 லட்சம் குடும்பங்களின் பொருளாதார தேவைக்கு வழிகாட்டி வருகிறது. 16 லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். சீட்டுப் பணமாக இதுவரை ரூ.7,500 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து நீங்கள் தரும் ஆதரவால் இந்தியாவின் நம்பர் 1 நிதி நிறுவனமாக ஸ்ரீராம் சிட்ஸ் திகழ்கிறது. இவை யாவும் அன்பிற்கான உழைப்பு.









| சீட்டுமதிப்பு | சந்தாதாரர் பரிசுகள் |
|---|---|
| ரூ. 10,000 | ஸ்ரீபெட் கிட்சன் பேக் |
| ரூ. 15,000 | S.S.C.B. குக் பாட் |
| ரூ. 25,000 | S.S.C.B. கடாய் |
| ரூ. 30,000 | S.S.C.B. கடாய் |
| ரூ. 50,000 | செல்லோ ஸ்டோரேஜ் டிரம் |
| ரூ. 75,000 | S.S. கேனிஸ்டர் (3 செ.) |
| ரூ. 1,00,000 | ஃபினிக்ஸ் 2.25 லிட்டர் குக்கர் |
| ரூ. 1,50,000 | டிராவல் சூட்கேஸ் |
| ரூ. 2,00,000 | ஹாகின்ஸ் சாஸ் பேன் |
| ரூ. 3,00,000 | செல்லோ கிஃப்ட் பேக் (3 செ.) |
| ரூ. 5,00,000 | செயில் ப்ரேக்ஃபாஸ்ட் செட் |

- நுழைவுக் கட்டணம் தனி. • முன் அனுமதி பெறப்பட்டது
- நேரடியாக சீட்டில் சேருவோருக்கும் சந்தாதாரர் பரிசு உண்டு.

**15-26 அக்டோபர் 2001**

| சீட்டுமதிப்பு | அறிமுகப்படுத்துவோர் பரிசுகள் |
|---|---|
| ரூ. 10,000 | S.S. மிக்ஸ் பவுல் |
| ரூ. 15,000 | பிரைம் பவுல் |
| ரூ. 25,000 | பிரைம் புட் சேவர் 2 செட் |
| ரூ. 30,000 | பிரைம் புட் சேவர் 2 செட் |
| ரூ. 50,000 | மில்டன் ஃப்ரெஷ் க்ரன்ச் |
| ரூ. 75,000 | S.S. சிந்தாமணி டிஷ் |
| ரூ. 1,00,000 | பிரைம் கிட்சன் கன்டெய்னர் |
| ரூ. 1,50,000 | குடை |
| ரூ. 2,00,000 | பேக்கர்ஸ் பவுல் |
| ரூ. 3,00,000 | S.S. குக்-என்-சர்வ் பவுல் |
| ரூ. 5,00,000 | லா காப்புரா கிஃப்ட் செட் |


- அறிமுகப்படுத்துவோர் பரிசுகள் தற்போதைய சந்தாதாரர்களுக்கு மட்டுமே.

**ஸ்ரீராம் சிட்ஸ்**
தமிழ்நாடு (பி) லிமிடெட்
www.shriramchits.com
சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002. போன்: 8461833 - 39

**நவராத்திரி 2001**
அன்பு மழையால் வளமான செழிப்பு

# பெண் மனது

பானுமதி ராஜகோபாலன்



ஆபீஸ் வேலையில் மூழ்கியிருந்த வாகீசனை அழைத்தான் சங்கரன்.

''வாகீசா! உனக்கு ஃபோன்... யாரோ லேடி வாய்ஸ்...''

வாகீசன் யோசனையுடன் ஃபோனை எடுத்ததும், "நான்....நான்.... புஷ்பா பேசறேன்..." என்ற குரல் கேட்டு உடம்பு சிலிர்த்தது.

புஷ்பா... போனவாரம் பெண் பார்த்துப் பிடித்து, நிச்சயதார்த்தத்துக்கும் நாள் குறித்துவிட்ட நேரத்தில் அவளிடமிருந்து ஃபோன்.

''என்ன.... யார்னு யோசிக்கறீங்களா?''

"சே...சே.. அதெல்லாம் இல்லை. நீ ஃபோன் பண்ணுவேன்னு எதிர்ப்பார்க்கலை. அதான் அதிர்ச்சியாயிட்டேன்."

"உங்ககிட்டே முக்கியமா ஒரு விஷயம் பேசணும். எனக்குத் தியாகராய நகர்ல தான் ஆபீஸ். சாயங்காலம் ஆபீஸ் விட்டதும் நேரா ரங்கநாதன் தெரு முனைக்கு வந்துடறேன். நீங்களும் வாங்கோ... சாயங்காலம் ஆறு மணி வாக்கிலே..."

"கண்டிப்பா வரேன்."

''தாங்க்ஸ்'' ஃபோன் டொக்கென வைக்கப்பட்டு விட்டது.

வாகீசன் தன் இடத்தில் வந்து உட்கார்ந்து யோசித்தான். பெண் பார்க்கப் போன இடத்திலேயே எல்லாம் பேசி முடிவு செய்தாகிவிட்டதே. இப்போது ஏன்? 'நான் வேற ஒருத்தரை காதலித்தேன். அப்பா அம்மா கட்டாயத்துக்காக உங்களைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சேன்' என்று குண்டைத் தூக்கிப் போட்டு கண்ணீர்விடப் போகிறாளா?

மாலை ஆறு முப்பது மணி.

"ஸாரி.... டிராபிக் ஜாஸ்தி. இல்லாட்டா முன்னமேயே வந்திருப்பேன்" என்று கூறியபடி ஸ்கூட்டரைப் பார்க் பண்ணிவிட்டு வந்தான்.

"ஏதாவது ஹோட்டல்ல உட்கார்ந்து

பேசலாமா?''

"ம்.... போகலாம்.." என்றாள் புஷ்பா.

அந்த ஹோட்டலின் ஒதுக்குப்புறமான இடம் தேடி அமர்ந்தனர்.

"ஏதோ பேசணும்னு..." அவன் ஆரம்பித்தான்.

"அப்படியொண்ணும் பெரிய சஸ்பென்ஸ் இல்லை. நீங்க என்னைப் பெண் பார்க்க வந்தபோதே கேட்கணும்னு இருந்தேன். சந்தர்ப்பம் சரியா அமையலை. அதான் இப்ப வரச் சொன்னேன்..." புஷ்பா தயங்கினாள்.

வாகீசன் தோசையைச் சாப்பிட்டபடி அவளையே பார்த்தான்.

"உங்களுக்கு... சம்பளம் எவ்வளவு? கேட்கறேனேன்னு தப்பா நினைக்கக் கூடாது...."

"இதிலென்ன தப்பு இருக்கு? கல்யாணம் பண்ணிக்கப் போறவனுக்கு என்ன வருமானம்னு தெரிஞ்சுக்கறது நல்லது தானே.. மாசம் பதினையாயிரம் வரது. இரண்டு வருஷத்துக்கு ஒரு தரம் பிரமோஷன் உண்டு. சம்பளம் ஏறும்."

"எனக்கு எட்டாயிரம் வரது."

"அப்படியா? அப்ப நல்ல வசதியா வாழலாம்."

புஷ்பா குறுக்கிட்டாள்.

"கொஞ்சம் பொறுங்கோ... நான் சொல்ல வந்ததைச் சொல்லிடறேன். எங்க வீட்டு நிலைமை என்னன்னா.... அப்பா ரிடையர் ஆயிட்டார். வாங்கின சம்பளத்திலே பாதிக்கும் குறைவாதான் பென்ஷன் வரது. அக்கா கல்யாணமே அவரோட பி.எப். பணத்திலே தான் நடந்தது. தம்பி கடைசி வருஷம் என்ஜினியரிங் படிக்கிறான். இதுவரை நான் கொண்டு வந்த சம்பளம் குடும்பத்துக்கு ஒருபலமா இருந்தது. இப்ப நான் கல்யாணம் ஆகிப் போயிட்டா சுத்தமா நின்னுடும். தவிர என் கல்யாணச் செலவு வேறே. நகை, வெள்ளி, பாத்திரங்கள் எல்லாம் வாங்கி, மூணுவேளை டிபன், சாப்பாடு, ரிசப்ஷன்னு கணக்குப் போட்டா ரொம்ப சிக்கனமா செஞ்சாலும் இப்ப இருக்கற நிலவரத்துக்கு ரெண்டு லட்சம் ஆயிடும்."

வாகீசனுக்கு ஓரளவு புரிந்தது.

"உண்மைதான். எங் காத்திலேயும் ரெண்டு பெண்களுக்குக் கல்யாணம் பண்ணியிருக்கோமே. அந்தச் சிரமம் எனக்கும் தெரியும்."

"கல்யாணம் கூட எப்படியோ போட்டடிச்சுப் பண்ணிடுவார் எங்கப்பா.... அது பெரிய பிரச்னை இல்லை."

"அப்புறம் என்ன?"

"அதான் முதல்லேயே சொன்னேனே. கல்யாணத்துக்கு அப்புறம் என் பணம் நின்னு போயிடும் இல்லையா? அப்பாவும் ரிடை



யர் ஆயிட்டார். தம்பிக்கும் படிப்பு முடியலை. கொஞ்சம் திணறித்தானே போவார்.... அதனால..."

'அதுக்கு நாம என்ன செய்ய முடியும்?"

"அங்கே நிலைமை சீரடையற வரையிலும் என் சம்பளத்தை அப்படியே அப்பா கிட்டே கொடுக்கட்டுமா? தம்பி தலையெடுக்கற வரைதான். அப்புறம் வேண்டாம்..."

வாகீசன் யோசித்தான். அவனுக்கும் நிறைய கனவுகள் இருந்தன. அக்கா, தங்கை கல்யாணங்களுக்கு நிறைய செலவழித்திருந்தான். இப்பொழுது அவனுக்குச் சம்பளம் பதினையாயிரம். எட்டாயிரம் சம்பாதிக்கும் மனைவியும் வருகிறாள் என்ற போது அவனது கனவுகளுக்குப் புத்துயிர் வந்தது. இருக்கிற பழைய ஸ்கூட்டரை விற்றுவிட்டு ஹீரோ ஹோண்டா வாங்கலாம். கறுப்பு வெள்ளை டீவிக்குப் பதிலாக வி.சி.ஆருடன் கலர் டீவி, வாஷிங்மெஷின், இப்போ இருக்கிற சின்ன ஃப்ரிஜ் பழசாகி அடிக்கடி ரிப்பேர் ஆகிறது. தூக்கிப்போட்டுவிட்டு டபுள் டோர் ஃப்ரிஜ்.

எல்லாவற்றுக்கும் மேலாக பெரிய ஆசை... லோன் போட்டு ஒரு ஐந்நூறு அறுநூறு சதுர அடிக்குச் சொந்தமாக ஒரு ஃப்ளாட். சிங்கிள் பெட்ரூம் கூட போதும். ஒருவர் சம்பளத்தை முழுசாக லோன் கட்ட வேண்டி வரும். என்றாலும் சொந்த ஃப்ளாட் என்ற சந்தோஷம் இருக்கிறதே.

ஆனால் புஷ்பா கேட்ட இந்த ஒரு கேள்வியால் எல்லா கனவுகளும் மணல் வீடு மாதிரி மளமளவென சரிவதைப் போல உணர்ந்தான்.

"என்ன யோசிக்கிறீங்க? உங்களுக்குச் சம்மதமில்லையா?"

வாகீசன் சங்கடமாக நெளிந்தான்.

"அது வந்து.... பாவம்... உங்க அப்பாவும் உன்னை வளர்த்து, படிக்க வெச்சு கல்யாணமும் பண்ணி வைக்கறார். இதுகூட செய்யலேன்னா எப்படி?"

புஷ்பாவின் முகம் மலர்ந்தது.

"ரியலி நீங்க ரொம்ப கிரேட். அப்ப நான் கிளம்பட்டுமா? மணி ஏழுக்கு மேலே ஆயிட்டது." புஷ்பா எழுந்தாள்.

வாகீசன் பில்லைக் கொடுத்துவிட்டு வந்தான்.

"நான் வேணா உன்னை ஸ்கூட்டர்லே கொண்டு வந்து விடட்டுமா?"

புஷ்பா பதறினாள்.

"ஐயோ! நான் உங்களைச் சந்திச்சதே அப்பாவுக்குத் தெரியாமல்தான். நான் போய்க்குவேன். வரட்டுமா?" புஷ்பா ஜனத்திரளில் கலந்து மறைந்தாள்.

வாகீசன் பெருமூச்சுடன் ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

கல்யாணம் நல்லவிதமாக நடந்தது. லீவு முடிந்து இருவரும் ஆபீஸ் போகத் தொடங்கினார்கள்.

முதல் தேதி. சம்பளம் வாங்கும் நாள் வந்தது. அம்மா கேட்டாள்.

"வாகீசா! புஷ்பா சம்பளம் கொண்டு வந்தாளா?"

"எதுக்கும்மா கேட்கறே?" வாகீசன் பயந்தபடி கேட்டான். புஷ்பாவுக்குக் கொடுத்த வாக்குறுதி அப்பா, அம்மாவுக்குத் தெரியாது. நிலைமை ஏடாகூடமாகிவிடுமோ என்று கலக்கமாக இருந்தது அவனுக்கு.

"எதுக்குச் சொல்லறேன்னா... அதான் இரட்டைச் சம்பளம் வரதேன்னு தாம் தூம்னு செலவு செஞ்சுடாதே. பாவம் குழந்தை பஸ்ஸிலே இடிபட்டுண்டு போய் நாள் பூரா வேலை செஞ்சு கொண்டு வர சம்பளம். அதை அவபேர்லேயே அப்படியே போட்டுவை. பின்னாடி குழந்தை குட்டின்னு வந்தா பயன்படும்."

வாகீசனுக்குக் கண் கலங்கிவிட்டது. சொல்லிவிடலாமா என்று வாய் துடித்தது.

## பாடகர் உண்டு; பாடல்கள் இல்லை!

• படத்தில் ஜீவியுடன்...



கர்நாடக இசைக் கலைஞர் டி.என்.சேஷகோபாலன் 'தியாகய்யா' என்ற படத்தில் நடிக்கிறார். ஏற்கெனவே 'தோடி ராகம்' படத்தில் பாடகராக நடித்தவருக்கு இப்படத்தில் அரசியல்வாதி வேடமாம். வியாபார நோக்கமின்றி தயாரிக்கப்படும் இப்படத்தை இயக்கி இசையமைப்பவர் கே.வி. ரெட்டி, பாடகர் நடிக்கும் இந்தப் படத்தில் பாடல்கள் இல்லை!

- ஏக்

கொஞ்ச நாள் போகட்டும் என்று மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

**அ**ன்று வாசீசனும் புஷ்பாவும் மட்டும் வீட்டில் இருந்தார்கள். அப்பா அம்மா ஒரு கல்யாணத்துக்காக ஊருக்குப் போயிருந் தார்கள்.

வாசலில் டெம்போ வந்து நிற்கும் சப்தம் கேட்டு வெளியே வந்தான் வாசீசன்.

டெம்போ நிறைய கலர் டீ.வி., ஃப்ரிஜ், வாஷிங்மெஷின் என்று நிறைந்திருந்தது.

"எதுக்குப்பா இங்கே கொண்டு வந் திருக்கே?" என்று கேட்டான்.

"இந்த அட்ரஸ் தானே இது?" டிரைவர் துண்டுச் சீட்டை நீட்ட வாசீசன் வாங்கிப் பார்த்தான்.

"இந்த அட்ரஸ் தான். ஆனா நான் ஆர்டர் பண்ணவேயில்லையே...." திகைத் தான் வாசீசன்.

"ஏன்? நான் ஆர்டர் பண்ணக் கூடாதா?" புஷ்பா புன்னகையுடன் வெளியே வந்தாள்.

"நீயா?" வாசீசன் ஆச்சரியப்பட்டான்.

ஆட்கள் சாமான்களை இறக்கிவிட்டு புறப்பட்டார்கள்.

"என்ன? ஆச்சரியமா இருக்கா? கூடிய சீக்கிரமே உங்க லொடலொட ஸ்கூட்டரை வித்துட்டு, புதுசா ஹீரோ ஹோண்டா வாங் கப் போறோம். அடுத்த ப்ளான் என்ன தெரியுமா? புது ஃப்ளாட்..."

"என்ன பேசறே நீ? என் ஒருத்தன் சம்பளத்திலே இப்ப வந்திருக்கிறதுகளுக்கு லோன் கட்டியே தீராது. அதிலே ஹீரோ ஹோண்டா... ஃப்ளாட்னு எதாவது பேத் தாதே" அலுத்துக் கொண்டான் வாசீசன்.

"ஏன்? என் சம்பளமும் தான் இருக்கே. இப்ப வந்து இறங்கின சாமானெல்லாம் முழுப் பணம் கொடுத்து வாங்கினது. என் னோட நாலு மாச சம்பளத்தைச் சேர்த்து வெச்சு வாங்கினது. தெரியுமா?"

"அப்ப நீ உன் சம்பளத்தை உன் அப்பா கிட்டே கொடுக்கலையா?"

"இல்லவேயில்லே. அப்போ கல்யாணத் துக்கு முன்னாடி எங்க அப்பாவைப் பத்தி மாத்திரம் கவலைப்பட்டேன். இப்ப எனக் குன்னு கணவர், மாமியார், மாமனார்னு குடும்பம் வந்ததும், இதைக் கவனிக்கறது தான் முக்கியம்னு புரிஞ்சுபோச்சு. அதனாலே இனி என் சம்பாத்தியம் ஒவ்வொரு பைசா வும் நம்ம குடும்பத்துக்கு மட்டும்தான்."

"என்ன புஷ்பா இப்படி பண்ணிட்டே...



**"கவுன்சிலர் பதவிக்கு நிக்கற வேட்பாள ரோட பந்தாவ பாரு!"**

**"என்னவாம்?"**

**"நாற்காலி, மைக், பேப்பர்வெய்ட்களை மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் வீசி எறியும் ஆற்றல் மிக்க எனக்கே வாக்களியுங்கன்னு அறிவிச்சிருக்கார்!"**

**- அம்பை தேவா**

---

பாவம் உங்கப்பா திண்டாட மாட்டாரா?"

"எதுக்குத் திண்டாடணும்? எப்படியும் நான் கல்யாணமாகி போயிட்டா என் வரு மானம் நின்னுடும் என்கிறது ஏற்கெனவே தெரிஞ்ச விஷயம் தானே. எங்கக்காகூட வேலை பார்க்கறவதான். அவ கல்யாணமாகி போயிட்டதும் குடும்பம் அப்படியே தத் தளிச்சு போயிட்டதா என்ன? ரிடையர் ஆயிட்டாலும் அப்பா திடமாதான் இருக் கார். வேறே எங்காவது வேலை தேடிக் கலாம். அம்மா பி.எஸ்ஸி மேத்ஸ் படிச் சிருக்கா. கணக்கு டியூஷன் எடுத்தாலும் நிறைய வரும். இன்னும் ஆறு மாசத்திலே தம்பிக்குப் படிப்பு முடிஞ்சுடும். இப்பவே வெளி நாட்டு கம்பெனியிலே வேலைக்கு அப்ளிகேஷன் போட்டுத் தயாரா வைச் சிருக்கான். வேலை கிடைச்சா லட்சக் கணக்கிலே சம்பாதிப்பான். அப்புறமென்ன? இனி நான் நம்ம குடும்பத்தை தானே பார்க் கணும்? ஆச்சு... நமக்குக் குழந்தை பிறந் துட்டா அதோட எதிர்காலத்துக்குச் சேமிக்க வேண்டாமா? உங்கப்பாவை பாருங்கோ... ராத்திரி பூரா இருமல். அதோட பகல்லே, இந்த வயசிலேயும் வேலைக்கு போயிட்டு வரார். அம்மா தன்னாலே முடிஞ்சதுன்னு குழந்தைகளுக்குப் பாட்டு சொல்லிக் கொடுத்து சம்பாதிக்கறா. இனிமேலும் இந்த மாதிரி கஷ்டப்படாமே அவாளை நல்ல படியா வெச்சுக்க வேண்டாமா?"

வாசீசன் மலைத்துப்போய் நின்றான். பெண்களின் மனத்தில் கூட தி.மு., தி.பி உண்டு. அதாவது திருமணத்துக்கு முன், திரு மணத்துக்கு பின் உண்டு போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான். ○

சென்னை மாநகருக்கு மிகஅருகில்

## சிறந்த வீட்டு மனைகள்

## பிரதான அமைவிடம், வேகமான வளர்ச்சி.

**MMDA** அப்ரூவ்டு மனைகள். நியாயமான விலை.



# சக்தி கார்டன்ஸ்

(பூந்தமல்லி பை-பாஸ் NH-4)

(சவிதா பல் மருத்துவக் கல்லூரி சமீபம்)

## சென்னை - 600 056

- இண்டி, கோடம்பாக்கம் மற்றும் கோயம்பேட்டிலிருந்து வசதியான அகலமான சாலைகள்
- சென்னையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பஸ் வசதி
- கோயம்பேட்டில் திறக்கப்படவுள்ள பிரமாண்ட பஸ் நிலையம்
- தேசிய நெடுஞ்சாலைக்கு அருகாமையில்
- சுவையான குடிநீர் 20 அடி ஆழத்தில்
- அருகில் வீடுகள்
- வீடு கட்டவோ அல்லது முதலீடு செய்ய சரியான தேர்வு
- சுத்தமான பத்திரம்
- நம்பகமான நிறுவனம்
- 5 வருட மனை பாதுகாப்பு சேவை.

☆ சுந்தரம் ஹோம் பைனான்ஸ் லிட் மூலமாக நிதி உதவியும் உண்டு.

Free site visit. With pick-up facility from home/office.

Ph : 4357721/31 Fax.4353183 . Cell : 98400-44018 E-mail: blbestmail@vsnl.net http://business.vsnl.com/blbestates

## BLB Estates (P) Ltd.

S-3,"Ramana Flats" 27, Rathna Nagar, Off Anna Salai,
(Behind Apollo Cancer Hospital), Teynampet, Chennai - 18.

நன் மதிப்பல் முதலீடு




## வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
42. காமாக்ஷி ஜோஸியர் தெரு. கும்பகோணம் - 612 001.

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866

Website : www-Kumbakonamonline.com/vedapadasala

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 457 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 171 மாணவர்களுக்கு 14 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். *புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.*

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு

| திட்ட விபரங்கள் | ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time) | நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund' |
|---|---|---|
| ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை) | Rs. 500 | Rs. 5000 |
| அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) த்வாதசி ஸமாராதனைக்கு | Rs. 1,500 | Rs.15,000 |
| பௌர்ணமி ஆயுஷ்ய ஹோமம் | Rs. 1,000 | Rs.10,000 |
| ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/- | Rs. 12,000 P.A | Rs. 1 Lakh |

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

# சிவகாமியின் சபதம்

இருபத்து ஐந்தாம் அத்தியாயம்

## கடல் தந்த குழந்தை

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் காஞ்சி ராஜ்யத்தின் புராதன ராஜவம்சம் சந்ததியில்லாமல் முடிவடைந்தது.

''மன்னன் இல்லாத மண்டலம் பாழாய்ப் போய்விடுமே! அரசன் இல்லாத நாட்டில் குடிகள் எல்லையற்ற துன்பங்களுக்கு உள்ளாவார்களே!'' என்று தேசத்தின் பெரியோர்கள் ஏங்கினார்கள்.

அப்போது அருளாளரான ஒரு மகான் மக்களைப் பார்த்து, ''கவலை வேண்டாம்; காஞ்சி ராஜ்யத்துக்கு ஒரு மன்னனைக் கடல் கொடுக்கும்! இதை நான் கனவிலே கண்டேன்!'' என்றார்.


அது முதல் அந்நாட்டில் கடற்கரையோரத்தில் காவல் போட்டு வைத்திருந்தார்கள்.

ஒருநாள் கடற்கரையோரமாகக் கப்பல் ஒன்று வந்தது. அது எந்த நாட்டுக் கப்பலோ, எங்கிருந்து வந்ததோ தெரியாது.

கரையில் இருந்தவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையிலே திடீரென்று கொடிய புயற்காற்று வீசுகிறது. ஊழிக் காலம் வந்து விட்டதோ என்று தோன்றும்படி கடல் கொந்தளிக்கிறது. கரையோரமாக வந்த கப்பல் அப்படியும் இப்படியுமாக ஆடுகிறது! கப்பலின் கொடி மரங்கள் சின்னாபின்னமாகின்றன.

ஆ! என்ன பயங்கரம்! தயிரைக்

அமரர் கல்கி



கடையும் மத்தைப் போலக் கப்பல் சுழலுகிறதே! சுழன்று சுழன்று, அடடா, அதோ கவிழ்ந்துவிட்டதே! புயற்காற்றின் கோரமான ஊளைச் சப்தத்துடன், கப்பலிலுள்ளோர் அழுகுரலும் கலக்கின்றதே!

கப்பல் கவிழ்ந்து கடலுக்குள் முழுகிற்றோ, இல்லையோ, சொல்லி வைத்தாற்போல், காற்றும் நிற்கிறது. அதுவரை கரையிலே நின்று செயலற்றுப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் இப்போது பரபரப்பு அடைகிறார்கள். படகுகளும் கட்டு மரங்களும் கடலில் விரைவாகத் தள்ளப் படுகின்றன. கப்பலில் இருந்தவர் யாராவது தெய்வாதீனமாக



உயிருடன் கடலில் மிதந்தால், அவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்ப்பதற்காகப் படகுகளும் கட்டுமரங்களும் விரைந்து செல்லுகின்றன; படகோட்டிகளும் மீன் பிடிக்கும் வலைஞர்களும் பாய்ந்து செல்கிறார்கள்.

அத்தனை படகோட்டிகளிலும், வலைஞர்களிலும் அதிர்ஷ்டசாலி ஒருவன் இருக்கிறான். அதிர்ஷ்டம் அவனைத் தேடிக்கொண்டு வருகிறது. ஆனால், அவனுக்கு மட்டும் வந்த அதிர்ஷ்டமல்ல; நாட்டுக்கே வந்த அதிர்ஷ்டம்! நாட்டு மக்கள் செய்த நல்வினையினால் வந்த அதிர்ஷ்டம்!

நீலக் கடலின் அலைமேல் சூரியன் மிதக்கிறானா என்ன? இல்லை, சூரியன் இல்லை; சின்னஞ் சிறு குழந்தை அது! பலகையிலே சேர்த்துப் பீதாம்பரத்தினால் கட்டப்பட்டிருக்கிறது. அக்குழந்தையின் முகத்திலே அவ்வளவு பிரகாசம்! அத்தனை தேஜஸ்!

ஆனால், குழந்தைக்கு உயிர் இருக்கிறதா? ஒருவேளை...? ஆகா! இருக்கிறது; உயிர் இருக்கிறது! புயலுக்குப் பின் அமைதியடைந்த கடலில் இலேசாகக் கிளம்பி விழும் இளம் அலைகளின் நீர்த் துளிகள் குழந்தையின் முகத்தில் விழும் போது, அது 'களுக்' என்று சிரிக்கிறது.

படகோட்டி அடங்காத ஆர்வத்துடன் அந்தப் பலகையின் அருகில் படகைச் செலுத்துகிறான். குழந்தையைத் தாவி எடுத்துக் கட்டை அவிழ்த்து மார்போடு அணைத்து மகிழ்கிறான். அவனுடைய மார்பின் ரோமங்கள் குத்திய காரணத்தினால் குழந்தை அழுகிறது.

படகோட்டி, படகுக்குள்ளே பார்க்கிறான். அங்கே கப்பலிலிருந்து இறக்கும் பண்டங்களைக் கட்டுவதற்காக அவன் அன்று காலையில் கொண்டு வந்து போட்ட தொண்டைக் கொடிகள் கிடக்கின்றன.

அக் கொடிகளை இலைகளோடு ஒன்று சேர்த்துக் குவித்துப் படுக்கையாக அமைக்கிறான். கொடிகளின் நுனியிலிருந்த இளந்தளிர்களைப் பிய்த்து எடுத்து மேலே தூவிப்பரப்புகிறான். அந்த இளந்தளிர்ப் படுக்கையின் மீது குழந்தையைக் கிடத்துகிறான்.

குழந்தை படகோட்டியைப் பார்த்துக் குறுநகை புரிகிறது!

படகு கரையை நோக்கி விரைந்து செல்லுகிறது.

கரையை நெருங்கும்போது படகோட்டி கூச்சலிட்டுக் குதூகலிப்பதைக் கண்டு, அந்தப் படகில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று கரையிலே நின்றவர்கள் அறிந்துகொள்ளுகிறார்கள்.

படகு கரையோரத்தை அடைகிறது; கரையில் நின்ற ஜனங்கள் திரண்டு வந்து படகைச் சூழ்கிறார்கள்.

தீர்க்க தரிசனம் கூறிய மகானும் வருகிறார். வந்து, குழந்தையைப் பார்க்கிறார்! பார்த்துவிட்டு, "நான் கனவிலே கண்ட புதிய காஞ்சி மன்னன் இவன்தான்! இவனுடைய சந்ததியார் காஞ்சி சிம்மாசனத்தில் வீற்றிருந்து ஆயிரம் ஆண்டு அரசாளப் போகின்றனர்" என்று கூறுகிறார். ஜனங்கள் ஆரவாரிக்கிறார்கள்.

திரைகடல் அளித்த தெய்வக் குழந்தைக்கு அப் பெரியவர், 'இளந்திரையன்' என்று பெயர் இடுகிறார். "தொண்டைக் கொடியின் மீது கண் வளர்ந்தபடியால், தொண்டைமான் என்ற பெயரும் இவனுக்குப் பொருந்தும். இவனால் இனிக் காஞ்சி ராஜ்யத்துக்குத் தொண்டை மண்டலம் என்ற பெயர் வழங்கும்" என்னும் தீர்க்கதரிசனமும் அவர் அருள்வாக்கிலிருந்து வெளி வருகிறது.

வடமொழிப் புலவர் ஒருவர், இளந்தளிர்களின் மீது கிடக்கும் குழந்தையைப் பார்த்துவிட்டு, அதற்குப் 'பல்லவ

ராயன்' என்று நாமகரணம் செய்கிறார்.

அதைத் தமிழ்ப் புலவர் ஒருவர் 'போத்தரையன்' என்று பெயர்த்துக் கூறுகிறார்.

கவிஞர்கள் வருகிறார்கள். கடல் தந்த குழந்தையைப் பற்றி அழகான கற்பனைகளுடன் கவிதைகள் புனைகிறார்கள்.

"இந்தத் திரைகடல் ஏன் இப்படி ஆர்ப்பரிக்கிறது, தெரியுமா? 'திரையனை நான் பயந்தேன்' என்ற பெருமிதத்தினாலேதான்!" என்று ஒரு கவிராயர் கூறியபோது, ஆர்கலியானது தன் அலைக்கைகள் ஆயிரத்தையும் கொட்டி ஆரவாரத்துடன் ஆமோதிக்கிறது.

பிற்காலத்தில் வந்த தமிழ்ப் புலவர்களுக்குப் பல்லவ குலத்தைக் கடல் தந்ததாகக் கூறிவிட்டுவிட, மனம் வரவில்லை. "கடல் தந்த குழந்தை உண்மையில் தமிழகத்தின் அநாதியான சோழ வம்சத்துக் குழந்தைதான்! சோழ குலத்து ராஜகுமாரன் ஒருவன், கடற்பிரயாணம் செய்வதற்காகச் சென்று மணி பல்லவம் என்னும் தீவையடைந்து, அந்நாட்டு அரசன் மகள் பீலிவளையைக் காதலித்து மணந்து கொண்டான். அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. அந்த அரசிளங்குமரன் தன் மனைவியோடும் குழந்தையோடும் தாய்நாட்டுக்குத் திரும்பி வந்த போது கப்பலுக்கு விபத்து நேர்ந்தது. விபத்தில் தப்பிப் பிழைத்து வந்த குழந்தைதான் பல்லவ குலத்தைத் தோற்றுவித்த தொண்டைமான் இளந்திரையன்!" என்று கற்பனை செய்து கூறுகிறார்கள்.

வடமொழிப் புலவர்களோ, "பாண்டவர்களின் குருவாகிய துரோணருடைய புதல்வர் அசுவத்தாமாவின் வழி வந்தவர்கள் பல்லவர்கள்!" என்று கூறி, அதற்கு ஒரு கதை சிருஷ்டிக்கிறார்கள். *

பல்லவ குலத்தின் உற்பத்தியைப் பற்றிய மேற்கூறிய வரலாறுகளில் எவ்வளவு வரையில் உண்மை, எவ்வளவு தூரம் கற்பனை என்பதை இந்நாளில் நாம் நிச்சயித்துச் சொல்வதற்கில்லை. அந்நாளில் அந்தக் குலத்தில் பிறந்தவர்களுக்குக் கூட அதன் உண்மை நன்றாகத் தெரிந்திருக்கவில்லை.

ஆனால், ஒன்று நிச்சயமாய்த் தெரிந்திருந்தது; அதாவது பல்லவ குலத்தில் தோன்றியவர்களுக்கெல்லாம் கடற் பிரயாணத்தில் ஆசை அபரிமிதமாயிருந்தது. அந்த ஆசை அவர்களுடைய இரத்தத்தோடு ஒன்றிப் போயிருந்தது.

கீழ்த் திசையில் கடல்களுக்கப்பால் இருந்த எத்தனையோ தீப தீபாந்தரங்களில், பல்லவர்களின் ஆதி பூர்வீக ரிஷபக் கொடியும் பிற்காலத்துச் சிங்கக் கொடியும் கம்பீரமாகப் பறந்தன.

பல்லவர் ஆட்சி நடந்த காலத்தில் தமிழகத்துக்கும் வெளி நாடுகளுக்கும் கடல் வாணிகம் அபரிமிதமாக நடந்து

* கடைசியாக, சமீப காலத்தில் இந்திய சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஐரோப்பியப் புலவர்கள், பல்லவர்களைத் தந்த பெருமையைத் தென்னிந்தியாவுக்கோ வட இந்தியாவுக்கோ தருவதற்கு விருப்பமில்லாதவர்களாய், இந்தியாவுக்கு வடமேற்கிலிருந்து வந்த அந்நியர்களாகிய சகர்தான் காஞ்சிபுரத்தைத் தேடி வந்து பல்லவர்கள் ஆனார்கள் என்று எழுதி, அதைப் புத்தகங்களிலும் அச்சுப் போட்டார்கள். நம் பழம் புலவர்களின் கதைகளையெல்லாம் கற்பனையென்று தள்ளிய நம்மவர்களோ, மேற்படி நவீன ஐரோப்பியப் புலவர்களின் வாக்கை வேத வாக்காக ஒப்புக்கொண்டு 'பல்லவர்கள் அந்நியர்களே' என்று சத்தியம் செய்தார்கள். தமிழகத்துக்குப் பல்வகையிலும் பெருமை தந்த காஞ்சிப் பல்லவர்களை அந்நியர்கள் என்று சொல்வதைப் போன்ற கட்டுக்கதை உலகச் சரித்திரத்தில் வேறு கிடையாது என்றே சொல்லலாம்.

வந்தது. கப்பல்கள் வந்து நிற்பதற்கும், பண்டங்களை இறக்கி ஏற்றிக் கொள்வதற்கும் கீழ்க் கடற்கரையோரமாகப் பல துறைமுகங்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றுள் முதன்மையானது மாமல்ல புரத்துத் துறைமுகமாகும்.

மாமல்லபுரத்துக்கு வடபுறத்தில் கடலானது பூமிக்குள் புகுந்து தென் திசையை நோக்கி வளைந்து சென்று மாமல்லபுரத்தை ஏறக்குறைய ஒரு தீவாகச் செய்திருந்தது.

இவ்விதம் காஞ்சி நகருக்கு அருகில் ஏற்பட்டிருந்த இயற்கைத் துறைமுகமானது ஏக காலத்தில் நூற்றுக்கணக்கான கப்பல்கள் வந்து நிற்பதற்கும், பண்டங்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் வெகு வசதியாக அமைந்திருந்தது.

மகேந்திரர் காலத்துக்கு முன்னால் அத்துறைமுகத் தீவில் பெரும்பாலும் வர்த்தகர்களின் பண்டக சாலைகளும், சுங்க மண்டபங்களும் மட்டுமே இருந்தன. பட கோட்டிகளும் மீன் வலைஞருந்தான் அங்கே அதிகமாக வாசம் செய்து வந்தார்கள்.

மகேந்திர பல்லவர் அங்கே பல அரசாங்க அதிகாரிகளையும் சிற்பிகளையும் குடியேற்றினார். அரச குடும்பத்தினர் தங்குவதற்கு அழகிய கடற்கரை அரண்மனையைக் கட்டி வைத்தார். அத்துறைமுகத்தில் சிற்ப வேலை தொடங்குவதற்குக் காரணமாயிருந்த தமது செல்வப் புதல்வரின் பட்டப் பெயரையும் அப்புதிய பட்டினத்துக்கு அளித்தார்.

முதன்முதலில் அத்துறைமுகத்தில் சிற்ப வேலைகள் தொடங்க வேண்டும் என்று தந்தையும் குமாரரும் சேர்ந்து எந்த இடத்தில் தீர்மானித்தார்களோ அதே இடத்தில், சென்ற அத்தியாயங்களில் கூறிய சம்பவங்கள் நடந்த தினத்துக்கு மறுநாள் பிற்பகலில் சக்கரவர்த்தியும் மாமல்லரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

## இருபத்து ஆறாம் அத்தியாயம்

# கற்கோயில்கள்

கடல்மல்லைத் தீவின் தென் பகுதியில் விஸ்தாரமான வெட்ட வெளிப் பிரதேசத்தில் வரிசையாக ஐந்து சிறுகுன்றுகள் நின்றன.

அவற்றில் மூன்று குன்றுகளில் நூற்றுக் கணக்கான சிற்பிகள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு குன்றையும் குடைந்து கோயில் வடிவமாக அமைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு கோயிலில் முன் மண்டபத்துத் தூண்கள் வேலையாகிக்கொண்டிருந்தன. இன்னொரு கோயிலில் மேல் விமான வேலை நடந்துகொண்டிருந்தது. மூன்றாவது குன்றை அப்போது தான் குடைய ஆரம்பித்திருந்தார்கள்.

சிற்பிகளும் பணியாட்களும் தங்குவதற்கான சிறுகொட்டகைகள் நெடுகிலும் காணப்பட்டன.

ஆயனரின் அரணிய வீட்டைச் சுற்றி நாம் பார்த்தது போன்ற நெடிதுயர்ந்த மரங்களோ, அடர்ந்த செடி கொடிகளோ அந்தப் பிரதேசத்தில் காணப்படவில்லை. வடக்கே வெகுதூரம் மணற் பாங்காயிருந்தது. அதற்கப்பால் கடல் அலைகள் வெண்ணுரையுடன் அவ்வப்போது மேலெழும் காட்சி தோன்றியது. தெற்கிலும் மேற்கிலும் சிறுசிறு பாறைகளும் அவற்றை விடக் குட்டையான புதர்களும் வெகு



தூரத்துக்குக் காணப்பட்டன.

ஆனால், வடக்கேயும் வடமேற்கேயும் பார்த்தால் முற்றும் மாறான காட்சி தென்பட்டது. வானளாவிய பெரிய கட்டடங்களும் அவற்றின் இடையிடையே, நெடிய தென்னை மரங்களும் காட்சியளித்தன. இன்னும் அப்பால் நூற்றுக்கணக்கான கப்பல்களின் பாய்மரத்து உச்சிகளிலே வரிசை வரிசையாக ரிஷபக் கொடிகள் காற்றிலே அசைந்தாடிக்கொண்டிருந்தன.

சிற்ப வேலை நடந்து கொண்டிருந்த குன்றுகளுக்கு மத்தியில் ஒரு கல்யானை கம்பீரமாக நின்றது. அதன்பின்னால் இன்னும் கம்பீரமாக அலங்கரிக்கப்பட்ட பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டத்து யானை நின்றது.

யானை மீது வந்த சக்கரவர்த்தியும் அவருடைய குமாரரும் கீழே இறங்கிக் கல் யானையின் அருகில் நின்றார்கள். அவர்கள் மீது வெயில் படாமல் ஒரு விசாலமான வெண்குடையைப் பணியாட்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

இதே இடத்தில் ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் மகேந்திர சக்கரவர்த்தியும் அவருடைய குமாரரும் வந்து இதே விதமாக நின்றதுண்டு. ஆனால், அங்கு நின்ற குன்றுகளும் பாறைகளும் அப்போது மொட்டைக் குன்றுகளாகவும், மொட்டைப் பாறைகளாகவும் இருந்தன.

"அப்பா! அந்தப் பாறையின் நிழலைப் பாருங்கள்! அது யானையைப் போல் இல்லையா?" என்றான் பல்லவ குலந்தழைக்க வந்த நரசிம்மவர்மன்.

அவன் சுட்டிக் காட்டிய நிழலைச் சக்கரவர்த்தி பார்த்தார்.

"ஆஹா!" என்று அவர் வாயிலிருந்து புறப்பட்ட வியப்பொலியில் விவரிக்க முடியாத பல உணர்ச்சிகள் தொனித்தன.

சற்று நேரம் மகேந்திரர் சிந்தனையில் ஆழ்ந்து வெளி உலகப் பிரக்ஞையே இல்லாதவராய் நின்றார். பிறகு நரசிம்மனைத் தழுவிக் கொண்டு, "குழந்தாய்! எப்பேர்ப்பட்ட அதிசயமான உண்மையை நீ கண்டுபிடித்துக் கூறினாய்! நீ கூறிய வார்த்தையின் மகிமை முழுவதும் உனக்கே தெரிந்திராது!" என்றார்.

பன்னிரண்டு பிராயத்துச் சிறுவனான நரசிம்மன் மேலும் உற்சாகத்துடன், "அப்பா! அதோ, அந்தக் குன்றின் நிழலைப் பாருங்கள்! கோயில் மாதிரி இல்லையா?" என்றான்.

"ஆமாம். நரசிம்மா! ஆமாம்! அந்தக் குன்றின் நிழல் கோயில் மாதிரிதான் இருக்கிறது. அதைக் கோயிலாகவே செய்து விடுவோம். இந்த ஐந்து குன்றுகளையும் ஐந்து கோயில்களாக்குவோம். இன்னும் இங்குள்ள சிறு பாறைகளை யானையாகவும் சிங்கமாகவும் நந்தியாகவும் ஆக்குவோம். இந்தத் துறைமுகத்தைச் சொப்பன லோகமாக்குவோம். ஆயிரம் ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு இந்தத் துறைமுகத்துக்கு வருகிறவர்கள் எல்லாரும் பார்த்துப் பிரமிக்கும்படியாகச் செய்வோம்!" என்றார்.

சீக்கிரத்திலேயே அந்தப் பிரதேசத்துக்குச் சிற்பிகள் பலர் சிற்றுளிகளுடன் வந்து சேர்ந்தார்கள். குன்றுகளிலும் பாறைகளிலும் வேலை செய்யத் தொடங்கினார்கள். நேற்றுவரை அமைதி குடி கொண்டிருந்த இடத்தில் நூற்றுக்கணக்கான சிற்றுளிகள் சப்தம் 'கல்கல்' என்று கேட்க ஆரம்பித்தது.

புதர்களில் வாழ்ந்திருந்த சிறு முயல்கள் திடீரென்று எழுந்த 'கல்கல்' சப்தத்தைக் கேட்டு வெளியே வந்தன. காதுகளைத் தூக்கிக்கொண்டு ஒரு நிமிஷம் வியப்புடன் கவனித்தன. பின்னர் அந்த இடத்திலிருந்து ஓட்டம் பிடித்தன.



அன்று தொடங்கிய சிற்பப் பணி இன்றைக்கும் அங்கே தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. சக்கரவர்த்தியும் மாமல்லரும் அன்றைக்கு நின்ற அதே இடத்தில் இப்போது யானையாகவும் சிங்கமாகவும் ரிஷபமாகவும் உருவெடுத்த பாறைகளுக்கு அருகில் நின்றுகொண்டிருந்தார்கள்.

"நரசிம்மா! இந்த யுத்தம் இப்போது வந்ததில் எனக்குப் பலவகையில் சந்தோஷந்தான். ஆனால், இந்தக் கற்கோயில்களின் வேலை ஒருவேளை தடைபட்டு விடுமோ, என் காலத்தில் இந்தத் திருப்பணி பூர்த்தியாகமற் போகுமோ என்று மட்டும் கவலையாக இருக்கிறது. வடக்கே கன்யாகுப்ஜத்தில் ஹர்ஷவர்த்தனர் வருஷந்தோறும் நடத்தும் உற்சவத்தைப் பற்றித் தெரியுமல்லவா நரசிம்மா?"

"தெரியும், அப்பா! சிவபெருமானுக்கும், சூரிய நாராயண மூர்த்திக்கும், புத்தர் பெருமானுக்கும் அவர் மூன்று கோயில்கள் எடுத்திருக்கிறார். அந்த மூன்று கோயில்களிலும் வருஷந்தோறும் உற்சவம் நடத்துகிறார்; மூன்று மதத்தைச் சேர்ந்த பிரஜைகளும் வந்து ஒரே சமயத்தில் உற்சவம் கொண்டாடுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

"மாமல்லா! ஹர்ஷவர்த்தனர் இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தைக் காட்டிலும் எவ்வளவோ பெரிய சாம்ராஜ்யத்தை ஆளுகிறார். அவருடைய செல்வமோ நம்முடையதைவிட பன்மடங்கு அதிகமானது. அவருடைய புகழ் இன்றைக்கு உலகமெல்லாம் பரவியிருக்கிறது. ஆனால், என்னுடைய உத்தேசம் மட்டும் நிறைவேறுமானால், ஹர்ஷர் மட்டுமல்ல; இந்தப் பாரத வர்ஷத்தில் இதுவரையில் எந்த அரசரும் சக்கரவர்த்தியும் அடையாத கீர்த்தியைப் பல்லவ குலம் அடையும். ஹர்ஷர் நிர்மாணித்திருக்கும் கோயில்கள் செங்கல்லினாலும் மரத்தினாலும் ஆனவை. நூறு வருஷத்தில் அவை சிதைந்து மறைந்து போய்விடும். ஆனால் இந்தக் கற்கோயில்களுக்கு அழிவென்பதே கிடையாதல்லவா...?"

"இக் கோயில்களில் எந்தத் தெய்வங்களை எழுந்தருளச் செய்யப் போகிறீர்கள், அப்பா? சிவபெருமான், பார்வதி தேவி, விநாயகர், சுப்பிரமணியம், சண்டிகேசுவரர் ஆகிய பஞ்ச மூர்த்திகளுக்குத்தான் இந்த ஐந்து கோயில்களும் அல்லவா?"

"இல்லை, நரசிம்மா! ஹர்ஷவர்த்தனரைக் காட்டிலும் அதிகமாக ஒரு காரியம் செய்யப்போகிறேன். இந்தத் தமிழகத்தில் பரவியுள்ள நாலு பெரிய சமயங்களுக்கும் நாலு கோயில்களை அர்ப்பணம் செய்யப் போகிறேன். ஒரு கோயிலில் சிவபெருமானும் பார்வதி தேவியும் வீற்றிருப்பார்கள். இரண்டாவது கோயிலில் திருமாலும் திருமகளும் குடிகொள்ளுவார்கள். மூன்றாவது கோயிலைப் புத்தர் பெருமானின் பெரிய விக்கிரகம் அலங்கரிக்கும். நாலாவது கோயிலில் சமண சமயத்தை ஸ்தாபித்த வர்த்தமான மகா வீரர் எழுந்தருளுவார்...!"

"ஹா!" என்று பெருவியப்புடனும் பெருமிதத்துடனும் மாமல்லர் கூறினார்.

"ஆம்; நரசிம்மா! உண்மையில் நான் சமண சமயத்திலிருந்து விலகிச் சைவத்தைத் தழுவியதே நமது ராஜ்யத்தில் இத்தகைய சமய சமரசத்தை நிலைநாட்டுவதற்காகத்தான். சைவ சமயமானது மற்ற சமயங்களையும் சம உயர்வுடன் கருதிப் போற்ற இடந் தருகிறது. மற்றச் சமயங்களோ அவ்விதம் இடங் கொடுப்பதில்லை. இதை முன்னிட்டே சைவத்தை மேற்கொண்டேன். நமது சாம்ராஜ்யத்திலுள்ள நாலு பெரிய சமயங்களுக்கும் சமமான கௌரவம் கொடுத்துப் போற்ற எண்ணினேன். இதையெல்லாம், வெளியிடுவதற்கு என் மேல் புத்தர்களும் சமணர்களும் கொண்டுள்ள கோபம் தணியும் காலத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன். அதற்குள்ளே சமண முனிவர்கள் அவசரப்பட்டு எல்லாக் காரியத்

தையும் கெடுத்து விட்டார்கள்...''

''சமண முனிவர்கள் கெடுத்து விட்டார்களா...!''

''ஆமாம் அவர்களால் வந்ததுதான் இந்த யுத்தம். சமண காஞ்சியிலிருந்து நாற் புறங்களுக்கும் புறப்பட்டுச் சென்ற சமண முனிவர்கள் சும்மா இருந்து விடவில்லை. நம் நெடுநாளைய சிநேகிதர்களைக்கூட நம் விரோதிகளாக்கி விட்டார்கள். இந்தக் கங்கை பாடித் துர்விநீதனுடைய தந்தைக்கு முடிசூட்டியது யார் தெரியுமா? உன் பாட்டனார் சிம்மவிஷ்ணு மகாராஜாதான். அந்தத் துர்விநீதன் இப்போது நமது பரம்பரை விரோதியான சளுக்க மன்னனுடன் சேர்ந்துகொண்டிருக்கிறான். புலிகேசியின் படை வீட்டில் ஜைன மகாகவி ரவிகீர்த்தியும், துர்விநீதனுடைய குரு பூஜ்யபாதரும் இருக்கிறார்களாம். சைனியத்துடன் சேர்ந்து அவர்களும் வந்துகொண்டிருக்கிறார்களாம். உலகப் பற்றற்ற முனிவர்கள், அதிலும் கொல்லாமை விரதங்கொண்ட சமண குருக்கள், போர்க்களத்துக்கு வருவது என்றால், ஆகா! அவர்களுக்கு என்மேல் எவ்வளவு துவேஷம் ஏற்பட்டிருக்க வேண்டும்?''

''அதைப் பற்றி என்ன கவலை! அப்பா? சமண முனிவர்கள், புத்த பிக்ஷுக்கள் எல்லோரும் நம் விரோதிகளுடன் சேரட்டும். திரிநேத்திரதாரியான சிவபெருமான் அருளாலும்; சக்கராயுதத்தை ஏந்திய திருமாலின் கிருபையினாலும் நாம் வெற்றி கொள்ளுவோம்.''

''வெற்றி தோல்வியைப் பற்றி நான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. என்னுடைய நோக்கத்துக்கு இடையூறு நேர்ந்துவிட்டதே என்றுதான் வருத்தப்படுகிறேன்'' என்று சக்கரவர்த்தி கூறியபோது, அவருடைய குரலில் துயரம் தொனித்தது.

மாமல்லர் சற்று மௌனமாயிருந்து விட்டு, ''ஐந்தாவது கோயிலை எந்தத் தெய்வத்துக்கு அர்ப்பணம் செய்ய எண்ணியிருந்தீர்கள், அப்பா?'' என்று கேட்டார்.

''மேலை நாடுகளில் சில காலமாகப் புதிதாக ஒரு மதம் ஸ்தாபனமாகியிருக்கிறதாம். அதை ஸ்தாபித்த அவதார புருஷரின் பெயர் ஏசு கிறிஸ்து என்று சொல்கிறார்கள். அந்தப் புதிய மதத்தைப் பற்றிய விவரங்கள் இன்னும் எனக்குத் தெரியவில்லை. தெரிந்தவுடனே அந்தப் புதிய மதத்தின் தெய்வம் எதுவோ அதை அந்த ஐந்தாவது கோயிலில் எழுந்தருளச் செய்ய எண்ணியிருந்தேன். ஆனால், அதெல்லாம் பகற்கனவாகப் போய்விடும் போலிருக்கிறதே?''

மகேந்திரரின் யோசனைகளைக் கேட்டுப் பிரமித்த மாமல்லர், ''ஏன் பகற்கனவாகப் போக வேண்டும்? யுத்தத்தினால் இந்தச் சிறப்புப் பணி ஏன் தடைப்பட வேண்டும்?'' என்று கேட்டார்.

''தடைப்படாமலிருக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. யுத்தம் முடிவதற்குள்ளே இந்த ஐந்து கோயில்களும் பூர்த்தியாக வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்காகவே ஆயனரை இன்றைக்கு இங்கே வரச் சொல்லியிருக்கிறேன். அவர் நடுக்காட்டில் போய் உட்கார்ந்திருப்பதால் வேலை நிதானமாக நடக்கிறது. அவரை இங்கேயே தங்கி வேலையைத் துரிதமாக முடிக்கும்படி சொல்லப் போகிறேன்... அதோ, ஆயனரும் வந்துவிட்டார்...!''

நரசிம்மர் ஆவலுடன் திரும்பிப் பார்த்தார். அவருடைய ஆவல் பூர்த்தியாயிற்று. சற்றுத் தூரத்தில் வந்து கொண்டிருந்த சிவிகையில் ஒரு பக்கத்தில் ஆயனர் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். மற்றொரு பக்கம், பட்டப் பகலில் பூரணச் சந்திரன் பிரகாசிப்பது போல் ஒரு காட்சி தென்பட்டது. அந்தப் பூரண சந்திரன் சிவகாமியின் வதன சந்திரன்தான் என்று சொல்லவும் வேண்டுமா?

(தொடரும்)

# Joyful சிங்கப்பூர்; Colourful மலேஷியா!

• ஹரிகிருஷ்ணன்

நள்ளிரவு 12.30 மணி. சென்னை ஏர்போர்ட். செக்கிங் முடிந்து மனத்தில் கனவும் குதூகலமும் மிதக்க, விரிந்து கம்பீரமாக நின்ற அந்த இயந்திரப் பறவையின் உள் செல்கிறேன். இடையிடையே தொடையைக் கிள்ளி நிஜம்தானா? என்றும் பார்த்துக்கொள்கிறேன். நீண்ட நாள் விமானப் பயணக் கனவு நனவாகப் போகிறதே!

ஓடு பாதையில் ஓடி விமானம் வானில் பறக்கத் தொடங்க, என் மனமும் இறக்கைக் கட்டிக்கொள்கிறது. படங்களிலும் பத்திரிகைகளிலும் இதுவரைப் பார்த்திருந்த மலேஷியா, சிங்கப்பூரின் அழகழகான கட்டடங்களும், 'பளிச்' தெருக்களும் கடலும் நெஞ்சில் வந்து நிற்க... இதோ வந்து விடப் போகிறது மலேஷியா...!

மூன்று புத்தகங்களைப் புரட்டிப் போட்ட அடுத்த சில நிமிடங்களிலேயே, 'மலேஷிய தலைநகரான கோலாலம்பூருக்கு வந்துவிட்டோம்; இன்னும் சில நொடிகளில் விமானம் தரையிறங்கப் போகிறது' என்று அறிவிக்கப்பட்டதும் உள்ளம் குளிர்ந்தது. மூன்று மணி நேர பயணத்தில் மலேஷியாவா? வியந்தேன்.

இப்போது என் கால்கள் கோலாலம்பூரின் ஏர்போர்ட்டில் பதிந்து எனக்குள் நானே சிரித்துக்கொள்கிறேன். ஆனந்த சிரிப்பு.





இந்த ஆனந்தத்திற்கு முதலில் கல்கிக்கும் டயானா வேர்ல்டு டிராவல்ஸ் நிறுவனத்துக்கும்தான் நன்றி சொல்ல வேண்டும். அவர்கள் நடத்திய குவிஸ் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றதால்தானே இந்தப் பயணம்!

ஏர்போட்டில் கால் வைத்ததுமே தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்கிறார் போல பளபளப்பு. அவ்வளவு சுத்தம். சத்தம், இரைச்சல், மூச்!

வழுவழு தரைகளும் குளு குளு க்ளைமேட்டும் 'ஜில்'லிட வைக்க, பெயர்ப் பலகையோடு எனக்காக காத்திருந்தவரை அணுகினேன். சிரித்துக் கொண்டே வரவேற்ற அந்த மனிதர் காரில் (ஏ.ஸி. காருங்க!) அழைத்துச் சென்றார். ஒரு மணி நேர பயணத்துக்குப் பிறகு ''லெஜண்ட்' ஹோட்டலை வந்தடைந்தேன். முப்பத்து மூன்று மாடிகள் கொண்ட குட்டிப் பெட்ரோனாஸ் டவர் அது. அண்ணாந்துப் பார்த்து தலை வலிக்க, 'யப்பா!' என்றதும் டிரைவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். ''இவ்ளோ பெரிய



## கல்கி
## டயானா வேர்ல்டு டிராவல்ஸ்

இணைந்து வழங்கிய 'அழைக்கிறது அமெரிக்கா' குவிஸ் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றவரின் பயணக் கட்டுரை.

—ஹரிகிருஷ்ணன்

பில்டிங்கெல்லாம் படத்துல பார்த்ததுதான், இப்பதான் நேர்ல'' என்று வழிந்துவிட்டு உள்ளே சென்றேன். எனக்கான அறை உள்ளிட்ட விஷயங்களை டயானா வேர்ல்டு டிராவல்ஸ் நிறுவனம் ஏற்கெனவே பந்தாவாக செய்திருந்தது.

நான் குளித்து, கொஞ்சூண்டு ரெஸ்ட் எடுத்துவிட்டு நகரத்தைச் சுற்றிப் பார்க்க ரெடியானேன். முதலில் சென்றது 'craft complex' எனப்பட்ட கலைப்பொருட்கள் காட்சியகம். இங்கு பட்டிக் எனும் வேலைப்பாடுகள் மிக்க துணிகள், அலங்கார நகைகள், அசத்தல் சித்திரங்கள் என்று கலக்கியது அது. ஒவ்வொன்றையும் மணிக்கணக்கில் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல. அவ்வளவு கலை நேர்த்தி. எப்படி செய்யப்பட்டது? எதில் செய்யப்பட்டது என்ற விளக்கமும் அளிக்கப்பட்டது.

அருகிலேயே பேப்பலின் பூச்சிகள் மற்றும் தேள்கள் அருங்காட்சியகம். வரவேற்பறையில் அரைகுறையாய்ப் போர்டைப் பார்த்துவிட்டு இதுகளுக்கு 'அருங்காட்சியமா?' என்று தேள் கொட்டினாற்போல உள்ளே சென்றால்... ப்ச்!

பல வண்ணங்களிலான வண்ணத்துப் பூச்சிகள், தேள்கள், பல்வேறு வகை பூச்சிகள் போன்றவற்றை (இறந்தது) பாடம் செய்து பார்வைக்கும் விற்பனைக்கும் வைத்திருந்தனர். துணிந்துக் கையில் எடுத்தேன் இரண்டு தேள்களை! விலையைப் பார்த்தபோது தேள் கொட்டிவிட்டது! அவசரமாக, எடுத்த இடத்திலேயே வைத்தேன்.

**ப**ட்டிக் தயாரிக்கும் இடத்திற்குச் சென்றோம். பட்டு அல்லது பருத்தித் துணியில் மெழுகு கொண்டு தேவையான டிசைன்கள் வரைந்து கொள்கின்றனர். பிறகு இயற்கைச் சாயங்கள் பூசி, ஒட்டியிருந்த மெழுகை நீக்கி விடுகிறார்கள். மெழுகு இருந்த இடத்தில் மட்டும் வெள்ளை 'டிசைன்' தெரிகிறது. புடைவை, ஷர்ட், ஸ்கார்ப் போன்றவற்றில் இதைச் செய்கிறார்கள்.

'இந்தப் பட்டிக்கைப் பார்த்து முடித்ததும் பட்டு குகைகளுக்குப் போகிறோம்' என்றார்கள். சினிமாவில் பார்த்த குகைகள் கண்ணுக்குள் வந்து ஒரு பயத்தை ஏற்படுத்த, போய்ப் பார்த்தால்தான் தெரிகிறது. அட அது நம்ம முருகன் கோயிலென்று!

அழகான குகைகளைக் கொண்ட இக் கோயிலுக்குச் செல்ல 272 படிகள் ஏற வேண்டும். (பெரிசுங்க பாடு திண்டாட்டம்தான். பத்து, பத்துப் படிகளாக அமர்ந்து குடும்ப கதை பேசிச் செல்பவர்களும் உண்டு) கோவிலில் சிற்ப வேலைப்பாடுகள் எதுவுமில்லை. தைப்பூசத்தில் நம்மூரைப் போலவே காவடி எடுத்தும், அலகு குத்தியும் வணங்குகிறார்கள். இங்கு வந்ததும் ஏதோ நம்மூரில் இருப்பது மாதிரியான திருப்தி. பேசுபவர்களெல்லாம் தமிழர்களாக இருக்கிறார்களே!



**ம**றுநாள் காலை இரண்டு மணி நேர பயணத்திற்குப் பிறகு 'ஜென்டிங் ஐலாண்ட்ஸ்' சென்றோம். இரண்டாயிரம் அடி மலை மீது உள்ள இதற்கு கேபிள் கார் மூலம்தான் பயணம்! (இந்த கேபிள் கார் உலகிலேயே வேகமானது!)

புறா கூண்டு மாதிரியான இந்தக் கேபிள் காரில் அமர்ந்ததும் ஈரக்குலை நடுங்குகிறது. பின்னே உச்சியிலிருந்து கீழே பார்த்தால் தலை 'கிர்'ரென்கிறது. சின்னதாய் மனிதர்கள் செல்வதைப் பார்த்தும் ஒரு பயம்! கீழே அறுந்து விழுந்தால் (நம்ம புத்தி மாறாதே!) என்ற 'திக்' வேறு மனத்தில் 'லப் டப்'பைக் கூட்ட, உடன் பயணித்த இளம் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்து தைரியத்தை வரவழைத்தேன்.

இந்த ஜென்டிங் ஐலான்ட்ஸில் கேளிக்கை அரங்கும் (Casino) இருக்கிறது. கேளிக்கை அரங்கில் உள் அரங்கு, வெளி அரங்கு என்று இரண்டு பிரிவு. பறக்கும் டிராகன், டைனோசர் உலகம், கோகார்டிங், போட்டிங், சைபர் வேர்ல்ட், வீடியோ கேம்ஸ் போன்ற பல இருக்கிறது. இளசும் பெரிசுமாய்க் குவிகிறார்கள் மனிதர்கள் இங்கே.

இங்கிருக்கும் 'மோஷன் மாஸ்டர்' சிறிசுகளிலிருந்து எல்லாரையும் கொள்ளை கொள்கிறது. திரையில் இருபத்து நான்காம் நூற்றாண்டில் நடப்பது போன்று 3D ல் 'ஸ்டார்வார்ஸ்' போல படம் காட்டுகிறார்கள். நாம் அமர்ந்திருக்கும் இருக்கையை வலமும் புறமும், ஏன் உங்கள் இஷ்டப்படி நெளிந்து படத்தினுள் நாமே பாதாளங்கள், குகைகள் நெருப்பு கோளங்கள் ஆகியவற்றை ஒரு வெறியுடன் (?!) கடந்து டிராகனுடன் சண்டை போட வேண்டும். தமிழ் சினிமா பார்ப்பவர்களுக்குச் சண்டை பற்றி சொல்லியா தர வேண்டும்? ஸாரி டைவ்தான் சரியாக அடிக்கமுடியவில்லை. இறுதியில் வழக்கம் போல் டிராகன் ஹீரோவால் (நாம்தான்) சாகடிக்கப் படுகிறார். இதைத் தத்ரூபமாக அமைத்திருக்கிறார்கள்.


**க**டைசியாக கேஸினோவுக்கு அழைத்துச் சென்றார்கள். இந்த கேஸினோ பலவித அழகான நியான் (Neon) விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. நம்மூர் மங்காத்தா முதல் சமீபத்திய கம்ப்யூட்டர் சூதாட்டங்கள் வரை இங்கே அனைத்தும் உண்டு. ஒருமுறை உள்ளே சென்று ட்ரை பண்ணிப் பார்ப்போமே என்று

நுழைந்து பர்ஸைக் காலி பண்ணிவிட்டு 'பெப்பே' என்று முழிப்பவர்கள் அதிகம். கேஸினோவைக் கட்டியவர் சீனர். அதனால் தானோ என்னவோ சீனர்கள்தான் இங்கு அதிகமாக சூதாடுகிறார்கள். புது வருட பிறப்பு என்றால் நாமெல்லாம் கோயிலுக்குப் போவோம். ஆனால் சீன புது வருட பிறப்பன்று ஏராளமான சீனர்கள் லைனில் நின்று இங்கே சூதாடுவார்களாம்! ஒரு கொசுறு செய்தி: இந்த கேஸினோவுக்குள் வர மலேஷிய முஸ்லிம்களுக்கு அனுமதி நஹி!





அடுத்த நாள் சிங்கப்பூர். இங்கு கால் வைத்ததுமே 'ஜாய்ஃபுல் சிங்கப்பூர்' கலர்ஃபுல் மலேஷியா' என்று எம்.ஜி.ஆர் பாடிய பாடல் நினைவுக்கு வந்தது. என்னவென்று தெரியவில்லை. ஆனால் பாருங்கள். தெருக்களையும், நகரங்களையும் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது. ஒரே இடத்தில் நின்றுகொண்டு சதா வீதியையும் மனிதர்களையும் பார்த்துக் கொண்டிருந்தால் 'பார்ட்டி ஒரு மாதிரி' என யாரும் நினைத்து விடக் கூடாதே' என்று அங்கிருந்து ஜூட் ஆனேன்.



'லிட்டில் இந்தியா' என்ற நகரின் ஒரு பகுதி அது. இங்கு வந்ததும் நம்மூரில் இருப்பது போலவே உணர்வு ஏற்பட்டது.

இந்தியர்களின் கலாசாரத்தைப் பறைசாற்றும் கைவினைப் பொருட்கள், உணவுப் பொருட்கள் முதலியவற்றை அழகாக அடுக்கி வைத்திருந்தனர்.


குங்குமம், கோலம், மெட்டி, மருதாணி போன்றவற்றின் அருமை பெருமைகளை அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தெளிவாக விளக்கிக் கூறுகின்றனர் (நம்மூர் பொருட்கள் பற்றி எனக்கே தெரியாத விஷயங்களை இங்கு வந்து தெரிந்துகொண்டு இதுல இவ்ளோ விஷயமிருக்கா? என்று வாய்பிளந்தது வேறு விஷயம்!)

இது முடிந்ததும் சைனா டவுனில் உள்ள மாரியம்மன் கோவில்.

ஒரு காலத்தில் இந்தப் பகுதியில் மட்டும்தான் தண்ணீர் இருந்ததால் தமிழர்கள் அரசு அனுமதி வாங்கி ஆத்தாவுக்குக் கோயில் கட்டிவிட்டனர். நம்மூர் கோவில்களைப் போலவே இந்தக் கோயிலும்.

விநாயகர், விஸ்வநாதர், விசாலாட்சி போன்ற சந்நிதிகளும், திரௌபதியம்மன், பஞ்ச பாண்டவர்கள், அரவான் போன்றோருக்கு வண்ணமயமான உருவச் சிலைகளும் வைத்துள்ளனர். இந்தக் கோயிலில் தீமிதியும் உண்டு. இதற்காக தனியாக ஒரு இடமும் இருக்கிறது. "இங்கிருக்கும் தமிழர்கள் கொடை நாட்களில் விரதமிருந்து அருளோடு தீ மிதித்துச் செல்வது கண்கொள்ளாக் காட்சி" என்று சொன்னார் கோயிலுக்கு வந்த தமிழர் ஒருவர்.

சிங்கப்பூரின் தெருக்களைப் போல கோயில்களும் ரொம்ப சுத்தமாக 'பளிச்'சென்று இருக்கின்றன. இந்தக் கோயிலில் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில், வீரமாகாளியம்மன் என்று மேலும் பல கோயில்கள் இருக்கின்றன. எல்லா சுவாமிகளையும் பெரிதாக கும்பிட்டு விட்டுச் சென்றது



**''காணாமல் போயிருந்த போலீஸ் ஜீப்பை ஒரே வாரத்துல மீட்டுட்டீங்களா...! எப்படி சார்?''**

**''ஹி...ஹி... பிக்பாக்கெட் பக்கிரிதான் குடும்பத்தோடு பிக்னிக் போகணும்னு இன்ஸ்பெக்டர்கிட்ட சொல்லிட்டு எடுத்துட்டுப் போயிருந்தானாம்...!**

**— சீர்காழி ரேவதி**

'பொட்டானிக் கார்டன்ஸ்'க்கு.

இந்த கார்டனிலுள்ள 'ஆர்க்கிட் மலர்' தோட்டம் உலகின் மிகப் பெரிய தோட்டமாகும். பல்வேறு கலர்களிலும் வடிவங்களிலும் நம்மைப் புல்லரிக்க வைக்கின்றன இந்த ஆர்க்கிட்கள். அன்றைய பொழுது மலர்களிடையே கரைய, மறுநாள் சென்டோஸா தீவுக்குப் பயணம்!

கேபிள் கார் மூலம் இந்தத் தீவுக்குள் சென்றோம். இங்குதான் ஆசியாவின் மிகப் பெரிய ஆழ்கடல் உலகமான 'அண்டர் வாட்டர் வேர்ல்ட்' இருக்கிறது. கடலுக்கு அடியில் இருப்பது பற்றி ஆங்கிலப் படங்களில் பார்த்தது ஞாபகத்துக்கு வந்து நின்றது. அதே போல்தான் இங்கும். கடலுக்கு அடியில் கண்ணாடியால் ஒரு சுரங்கப்பாதை. இந்தக் கண்ணாடி வழியாக ஆழ்கடல் உயிரினங்களான கடல் பசு, கடல் டிராகன், பல்வகை சுறாக்கள், அழகழகான கலர் மீன்கள் எல்லாவற்றையும் காண்கிறோம். இயற்கையின் அதிசயம், நெஞ்சைக் கிள்ளிப் பார்த்துக் கொள்ள வைக்கிறது. இங்கிருந்து திரும்பும்போது ஆழ்கடலுக்குள் நனையாமல் சென்று வந்தது போல் ஓர் உணர்வு. இதை எப்படி வடிவமைத்தார்கள் என்று ஆச்சரியம் மேல் ஆச்சரியமாக இருக்கிறது.

அடுத்த பயணம் இங்கிருக்கும் மியூஸிக்கல் பவுண்டேஷனுக்கு.

மாலை வேளையில் மெர்லையின் சிலையைப் பின்புறமாக வைத்து பல்வேறு நாட்டு இசைக்கு ஏற்ப நீரூற்றுகளை டான்ஸ் ஆட வைக்கிறார்கள். (தண்ணீருக்காக லாரியின் பின்னால் குடத்தைத் தூக்கிக் கொண்டு சென்னையில் ஓடியது நினைவுக்கு வர, ஒரு சின்ன பெருமூச்சு)

லேசர் ஒளிமூலம் தாஜ்மஹால், ஈஃபில் டவர், அழகான பெண்கள் போன்ற பலவற்றை உயிரோவியமாக்கி ஜ(ா)லவித்தை காட்டுகிறார்கள்.

இரவு வரை இந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்துக் கண் சொக்கிப் போனேன்.

மறுநாள் ஜுராங் பறவைகள் காட்சியகத்துக்குச் சென்றேன். ஏதோ ஒரு சின்ன காட்டுக்குள் வந்துவிட்டது போலிருந்தது. சுற்றிலும் பச்சை மயம். மரம் புற்கள் என்று!

இங்கு தென்கிழக்கு ஆசிய பறவைகளை வளர்க்கிறார்கள். ஈஸ்ட்மென் கலர்களில் கிளிகள், அன்னங்கள், நாரைகள், புறாக்கள், பாடும் பறவைகள் என எட்டாயிரம் பறவைகள் (அறுநூறு வகை) இருக்கின்றன.

இந்தப் பறவைகளைக் கொண்டு பல நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். ஆஸ்திரேலிய பஞ்சவர்ணக் கிளிகளுக்கிடையே சைக்கிள் ரேஸ், வளையத்துக்குள் வேகமாகப் பறக்கும் போட்டி. ஹமிங்கோ என்ற ஆஸ்திரேலிய பாடும் பறவை, ஒன்று முதல் பத்து எண்களை சீன மொழியிலும், ஆங்கிலத்திலும் சொல்லி நம்மை ஆச்சரியப்பட வைக்கின்றது. மலாய் மொழியில் பாட்டு வேறு பாடுகிறது இந்தக் குயில், ஸாரி... ஹமிங்கோ.

அறைக்கு வந்ததும் இந்தப் பறவை பாடிய பாடல் மனத்தை வந்து தைத்துக் கொண்டிருக்க, ராகம் புரிந்தது; பாடல் புரியாதது வருத்தம்!


விடிந்ததும் சென்னைக்குக் கிளம்ப வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள் டயானா வேர்ல்டு டிராவல்ஸ் நிறுவனத்தினர். படுத்துக்கொண்டே மலேஷியா - சிங்கப்பூரில் பார்த்தவற்றை அசை போட்டவாறே, அறை ஜன்னல் வழியே வேடிக்கைப் பார்த்தேன் நகரத்தை. அவ்வளவுதான், விடிந்துவிட்டது.

சிங்கப்பூருக்கு ஒரு சலாம் போட்டுவிட்டு விமானமேறினேன். மனசு முழுக்க இனம் புரியாத குஷி. சென்னை விமான நிலையத்திலிருந்து கிண்டிக்கு ஆட்டோவில் வந்தேன். பையிலிருந்த சிங்கப்பூர் வெள்ளியை அந்த ஆட்டோ டிரைவர் கொள்ளையடிக்காத குறையாய் என்னிடம் பறித்ததும் நம்மூர் சகஜம் என்னைக் கவ்விக் கொண்டது. ○

## செல்லப் பிள்ளை!

பெல்ஜியம் நாட்டின் தலைநகரமான பிரஸ்ஸல்ஸ் நகரத்தின் பிரதானமான இடத்தில் ஒரு சிறுவனின் வெண்கலச் சிலை உள்ளது. அச் சிறுவன் அம்மணமாக நின்று கொண்டு சிறுநீர் கழிப்பது போல் அமைந்துள்ள இந்தச் சிலையை அந்நாட்டவர் 'மேனகின் பிஸ்' என்று அழைக்கிறார்கள். இச் சிலை அந்நாட்டின் தேசியச் சின்னமாகக் கருதப்படுவது விசேஷம். இந்தப் பதினேழாம் நூற்றாண்டுச் சிலையில் வடிக்கப்பட்ட சிறுவன் ஒரு பிரபுவின் மகன் என்று கருதப்படுகிறது. இச்சிலை 1745ம் ஆண்டு ஆங்கிலேயர்களால் திருடப்பட்டு, பிறகு 1777ம் ஆண்டு பிரெஞ்சுக்காரர்களால் திருடப்பட்டு, பின்பு 1817ம் ஆண்டு பிரெஞ்சுக் கைதி ஒருவரால் நொறுக்கப்பட்டது. அதற்கு மீண்டும் உருவமளித்து வைத்துள்ளனர் பெல்ஜியம் நாட்டினர்.

– சித்ரா நாராயணன், அபுதாபி



## ஒட்டகப் பயிர்!

சோளத்திற்குத் தான் இந்தப் பெயர். ஆப்பிரிக்காவிலிருந்து பத்தாம் நூற்றாண்டில்தான் இந்தியாவிற்கு அறிமுகமானது. இது வறண்ட நிலங்களில் நன்கு விளையும் என்பதால் ''ஒட்டகப் பயிர்'' என்றும் இது அழைக்கப்படுகிறது.

– ப. சந்திர ஜோதி

**தேன் கூடு**

## சனி நீர் ஆடு!

இத்தொடர் எண்ணெய் நீராடலைக் குறிப்பிடுவதாகக் கருதலாகாது. சனி நீர் என்றால் குளிர் நீர் என்பது பொருள். 'சனிநீர்' என்பது தெலுங்கில் 'சந்நீளு' என வழங்கப்படுகிறது. சனி என்ற சொல்லுக்குக் குளிர் என்னும் பொருளுக்கு ஆதாரமாகச் 'சன்னி' என்ற சொல்லுக்குச் 'சீதம்' என்று வீரமாமுனிவர் தம் சதுரகராதியில் குறிப்பிட்டுள்ளார். எனவே 'குளிர் நீரில் குளி' என்று பொருள் கொள்வோமாக. எண்ணெய் நீராடலைப் பழந்தமிழ் இலக்கியம் 'நெய்யாடல்' என்று குறிக்கும்.

- வே. நாராயணசாமி





## மூக்குக் கண்ணாடியே வேண்டாம்



• நாயுடு

சர் எம். விசுவேசுவரய்யா எழுதிய ''என் பதவிக்கால நினைவுகள்' என்னும் நூலுக்கு வழங்கிய முன்னுரையில் தொழில் மேதை ஜி.டி. நாயுடு இவ்வாறு கூறுகிறார்:

''நாங்கள் எல்லோரும் மூக்குக் கண்ணாடியை அணிந்தபடி படிப்பதை விசுவேசுவரய்யா கவனித்து, தாமும் ஒரு பத்திரிகையை எடுத்துக் கண்ணாடியின் உதவியின்றிப் படிக்க ஆரம்பித்தார்.

''கண் பார்வையைச் சரிவரப் பாதுகாப்பதற்கு, தினமும் விழிகளை இடதுபுறமும் வலது புறமும் 70 தடவைகளும், மேலும் கீழும் 40 தடவைகளும் அசைத்து, பிறகு கண் இமைகளை விரல்களினால் சில வினாடிகள் இலேசாக அழுத்திவிட வேண்டும்'' என்ற ஓர் எளிய பயிற்சியை எனக்குச் சொல்லிக் கொடுத்தார். இந்த முறையை விடாமல் அனுசரித்தால் கண்ணாடியின் உதவியில்லாமல் படிப்பதற்கு உங்கள் கண்கள் எப்பொழுதும் தயாராக இருக்கும். மேலும் தேவையான அளவிற்கு மட்டுமே சாப்பிட்டு, நல்ல ஓய்வும் தூக்கமும் பெற வேண்டும். தினமும் சில மைல் தூரமாவது விறுவிறுப்பாக நடந்தால் உறக்கம் தன்னால் வந்து விடும்'' என்றும் அந்தப் பெரியவர் சொன்னார்.

– உஷா

## நய்பாலுக்கு எச்சரிக்கை!

1913ம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூர் பரிசு மொத்தத்தையும் ஒரு வங்கியில் போட்டார். சில நாளில் அந்த வங்கி திவாலாகிவிட்டது!


1930ல் நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி.இராமன் பெங்களூரில் ஒரு வங்கியில் அந்தப் பணத்தை 'டிபாசிட்' செய்தார். அந்த வங்கியும் திவாலாகி விட்டது! இப்போது நோபல் பரிசு பெற்றிருக்கும் நய்பால் ஜாக்ரதையாக இருக்க வேண்டும் இந்த விஷயத்தில்.

தகவல்: ப. இராம்முருகன்
சிவகங்கை

## 145 வருடம் கழித்து வந்த புத்தகம்!

அமெரிக்க நாட்டின் Cincinatti Medical Library யிலிருந்து 1823ம் ஆண்டு எடுத்துச் செல்லப்பட்ட "Febrile diseases" என்ற புத்தகத்தை, அந்த மனிதருடைய கொள்ளுப் பேரன் 1968-ம் ஆண்டில் நூலகத்துக்குத் திருப்பித் தந்தார். அவர் செலுத்த வேண்டியிருந்த அபராதத் தொகையான 2264 டாலர் தள்ளுபடி செய்யப்பட்டது.

-கே. அரவிந்தா



## காதல் கோபுரம்!

பர்மாவிலுள்ள அமரபுரி கோயில் அலாதியான அமைப்புடன் கூடியது. இதன் கோபுரத்தின் வெளிப்புறம் ஏராளமான பிறைகள் இருக்கும். அவை ஒவ்வொன்றிலும் ஒரு சிறிய புத்தர் சிலை இருக்கும். இக்கோயில் போதவ்பாயா என்ற அரசனால் 1783ல் கட்டப்பட்டது. அரசனுடைய காதலி அம்மை நோய்வாய்ப்பட்டாள். அதிலிருந்து மீண்டு அவள் பிழைத்து விட்ட போதிலும் அம்மைத் தழும்புகள் அவளுடைய அழகிய முகத்தைக் கோரமாகச் செய்து விட்டன. அதன் காரணமாகக் காதலியிடம் தமக்குள்ள அன்பு குறைந்து விடவில்லை என்பதைக் காட்டிக் கொள்ளவே இப்படிப்பட்ட அமைப்பில் அவன் ஆலயம் எழுப்பினான்.

அதிசய உண்மைகள் என்ற நூலிலிருந்து : ஔவை ஏ.எஸ். யோகானந்தம்.

# VIJAYADASAMI SPECIAL OFFER

OM SAI

# SRI LAXMI MUTHU MAALIGAI

RAM

## EXCLUSIVE DESIGNER PEARLS & KUNDAN JEWELLERY

Thousands of Unique designs in Collection from all over India

Once in a Year Heavy Discount on all varities

UPTO 30% OFF


**SURPRISE OFFER!**

On Every Purchase Rs.2000/- & Above, Get One Pair Bangles Free of Cost (One Gram Gold)

SALE! SALE!

## இன்றை நவநாகரிக பெண்களுக்கான அணிகலன்கள்

**DEALERS IN :** ஐதராபாத் முத்துக்கள் (Black, Pink, White, Round, Mikimoto, Ovel, Button, Rice) **REAL ITALIAN CORELS** (Round, Ovel, Pink, Thali, Flowers, Tube) **CHINA JADE MALAS, REAL RUBY, EMERALD, SAFFIRE, CUT AND ROUND MALAS,** நவரத்தின கற்கள் மற்றும் மாலைகள், பிறந்த நாள் ராசி கற்கள், **AMERICAN DIAMOND SILVER JEWELLERY** (Bangles, Tops, Rings, Necklace Sets, Pendant Sets, Choker, Brace Lets, Ranihar Sets, Shajahaw Sets, Long Harams), **GOLD RUBY, EMERALD NECKLACE SETS, ONE GRAM AND TWO GRAMS GOLD BANGLES, ANTIQUE IMPORTED 40 COLOUR BEEDS, PEARLS AND GEM WATCHES, SEMI-PRECIOUS STONE MALAS** (Garnet, Jade)



**(FREE ASTROLOGE ADVICE)**

*★ Bring this paper visit our showroom collect one real pearl at free of cost without Purchase ★*

**8 & 9, KASI ARCADE**
**(Next to GRT Grand Days Hotel)**
**116, PONDY BAZAAR, T. NAGAR, CHENNAI - 17.**
**PHONE : 8220856, 8229020**

Shop Open on all Sundays — All Credit Cards Accepted

அந்த உருவத்தினைத் தெளிவாக உணர்வதற்குப் போதுமான வெளிச்சமிருந்த போதிலும் சரவணனும், கிருஷ்ணவேணியும் கணிசமான தூரம் தள்ளியே நின்றிருந்தனர். எனவே இங்கிருந்து பார்க்கிறபோது அது ஒரு உருவம் என்பது மட்டுமே புலப்பட்டது. அசைவுகளையும், உடையையும் வைத்து ஆண் என ஊகிக்க முடிந்தது. மற்றபடி அந்த உருவத்தைப் 'பேய்' என்று நினைத்துக் கொள்ளக் கூடிய நேரம், இடம் எல்லாம் அப்போது வாய்த்திருந்தது.

"யாரு அது? பேயா?" என்று வாய்க்குள்ளாகச் சொன்னான் சரவணன்.

"இல்லை... எவனோ திருடன்" என்றாள் கிருஷ்ணவேணி. அவள் குரலில் மருந்துக்குக் கூட பயமில்லாதது சரவணனை ஆச்சர்யப்படுத்தியது. 'சரிதான்! இத்தனை மணிக்குச் சுவரேறிக் குதித்து வந்து என்னுடன் மரத்தடி இருட்டில் தனியே மறைந்து நெருக்கமாக நிற்கிறாள். 'இவள் பயப்படாததில் ஒரு ஆச்சர்யமுமில்லை' என்றெண்ணிக் கொண்டான் சரவணன்.

ஆனால் இருவரையும் ஒரு பரபரப்புத் தொற்றிக் கொண்டது. இருவருமே ஒருவர் மற்றவரது கையை இறுக்கமாகப் பற்றிக் கொண்டனர். அந்த இறுக்கத்தில் அவர்களது பரஸ்பர பதற்றத்தைப் பரிமாறிக் கொண்டனர்.

"இப்ப என்ன செய்யலாம்" என்றான் சரவணன். "சப்தம் போடலாமா?"



# 13

"ஹூஸ்", சப்தம் போட்டா, இப்ப நாம ரெண்டு பேரும் மாட்டிக்கிற மாட்டமா?" என்று கேட்டாள் கிருஷ்ணவேணி. பிடரியில் தட்டிக் கொண்டான் சரவணன். பெரும்பாலான சமயத்தில் ஆண்கள் மக்காகவும், பெண்கள் கூர்மையானவர்களாகவும் இருந்து விடுகின்றனர்.

"ஆமாமா... இப்ப என்னதான் பண்றது... பேசாம வேடிக்கைப் பாக்குறதா?"




"ஆமா" என்றாள் கிருஷ்ணவேணி... கிசுகிசுப்பாக.

"முதல்ல அவன் என்ன பண்றான்னு பாப்போம்" என்றாள்.

"பாத்து...? அப்புறம்?"

"ஸ்... கொஞ்ச நேரம் நீ கம்மாயிரு" என்றாள் கிருஷ்ணவேணி.

அந்த உருவம் வீட்டின் பின்புறத்தையடைந்தது.... குட்டையான சுற்றுச் சுவரை எளிதாகத் தாண்டி உள்ளிறங்கியது.

பூவரசமரத்தின் நிழல் படர்ந்த பகுதிக்குள் நுழைந்த பின் அந்த உருவத்தைப் பார்க்க முடியவில்லை.

"போய்ப் பாப்பமா?" என்றான் சரவணன்.

"வேண்டாம்."

"ஆமா... என்ன நீ இப்படியிருக்க? உங்க வீட்ல ஒருத்தன் நுழையுறான்... நீ பாட்டுக்கு மண்ணு மாதிரி நிக்கிற. ஓடிப் போய் 'திருடன், திருடன்'னு கத்து..."

"கொஞ்சம் பொறு" என்றாள் வேணி....

"எங்க வீட்ல திருடறதுக்கு என்னா இருக்கு?"

"எவனாவது உள்ள போயி உங்கக்கா, தங்கச்சியைக் கைவச்சுட்டான்னா?"

"வீட்ல அவங்கள்லாம் இல்லை."

"என்னது?" என்றான் சரவணன் ஆச்சர்யமாக.

"வீட்ல நானும் அழகும் மட்டுந்தான் இருந்தோம். அம்மா, அக்கா, தங்கச்சியெல்லாம் மதியம்தான் ஊருக்குப் போனாங்க..."

"எதுக்கு?"

"தூரத்து சொந்தக்காரரு ஒருத்தரு மண்டையைப் போட்டுட்டாரு."

"பச்."

"அதை விடு..." என்றவள் ஒரு முடிவுக்கு வந்தவளாக சரவணனைப் பார்த்துச் சொன்னாள்.

"நான் வீட்டுக்கிட்டே ஓடிப் போய்த் திருடன் திருடன்னு கத்துறேன். நீ இங்கேயே இரு."

"நானும் உங்கூட வர்றேன் வேணி!"

"என்ன பைத்தியம் மாதிரி உளறிக்கிட்டு? இந்த நேரத்துல நீ இங்க வர்றதுக்கு என்ன காரணம்? அழகு விவரமானது... கண்டு புடிச்சிரும்."

"அப்படியா!"

"ஆமா, அதனால.... நான் போயி சப்தம் போடுறேன். நானும் அழகுமா சேந்து அவனைப் புடிக்கப் பாக்குறோம்... நீ 'சட்'டுனு இங்கிருந்து கௌம்பிடு."

"இல்ல நான் இங்கனயே இருக்கேன்.... ஒரு வேளை அவன் இங்கிட்டு வந்தான்னா புடிச்சிரட்டுமா?"

"புடிச்சிருவியா!" என்றாள் கேலியாக...

"பாப்போம்... ட்ரை பண்றேன்... ஆனா புடிச்சிட்டேன்னு வை... அப்ப





மாத்திரம் நான் இங்க எதுக்கு வந்தேன்னு சந்தேகம் வராதா?'' வேணி இகழ்ச்சியாக, "மொதல்ல நீ புடி பாப்போம்...'' என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கி ஓசை பண்ணாமல் நுனிக்காலால் விரைந்தாள்.

சரவணன் மனதுக்குள் பரபரவென்று மின்சாரம் ஏற பதற்றத்துடன் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பூவரசவீட்டுக்குப் பின்புறமிருந்த மரத்தடி இருளில் சரவணன் இருக்க, பூவரச வீட்டின் முன்புறமாக கணிசமான தூரம் தள்ளி மண்பானை சுடுகிற ஆறுமுகம் வீடு... அதில் வெளியூரிலிருந்து வந்திருந்த ஆறுமுகத்தின் சொந்தக்காரர்கள் இரண்டு பேரோடு ஆறுமுகமும், அவன் பொஞ்சாதியும் உட்கார்ந்து வீட்டுக்கு வெளியே நிலவொளியில் வெற்றிலை போட்டபடியே 'பொரணி' பேசிக் கொண்டிருந்தார்கள்.

அழகு தூக்கத்திலிருந்து 'சட்'டென்று விழித்தான். அவன் காதுக்குள் அந்த ஓசை கேட்டது. யாரோ நடமாடுகிற சப்தம். விழித்தவன் 'சட்'டென்று எழாமல் படுத்துக்கிடந்தபடியே காதுகளைத் தீட்டி சப்தத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

உள்ளே பட்டா சாலை என்றழைக்கப்படும் ஹாலில் தான் அரவம் கேட்கிறது. அழகு படுத்திருந்தது வராண்டாவில். வராண்டாவின் முன்புறம் வாசல் கதவு. இந்தப் புறம் ஹாலுக்குச் செல்கிற நிலைக் கதவு. நிலைக் கதவைத் திறந்தால் ஹால் தென்படும்.

படுத்தவாறே ஊர்ந்து நிலைக்கதவை அடைந்த அழகு அதனைத் தள்ளினான். திறக்கவில்லை. சற்று பலம் கொடுத்துத் தள்ளினான். ம்ஹூம்... அது உட்புறம் பூட்டப்பட்டிருக்க வேண்டும். எழுந்து நின்று சாவித்துவாரத்தின் வழியே சிறிது நேரம் பார்த்த அழகு ஏதோ தோன்ற, வாசல் கதவைப் போய்ப் பார்த்தான். இவன் படுக்கும் முன்பு போட்டிருந்த உள் தாழ்ப்பாளை விலக்கி கதவைத் திறக்க முயன்றான். முடியவில்லை. வாசல் கதவு வெளிப்புறம் தாழிடப்பட்டிருந்தது.

அட! வாசல் கதவை வெளிப்பக்கம் பூட்டி, ஹால் கதவை உட்பக்கம் பூட்டி வராண்டாவில் தன்னைச் சிறைப்படுத்தி இருக்கிறார்கள்.

அழகுக்குப் பயம் கிளர்ந்தது. பின் பக்கம் சமையலறையருகே வேணி படுத்திருந்தது நினைவுக்கு வந்தது. நிலைக் கதவை அடைந்து சாவித்துவாரத்தின் வழியே ஹாலைக் கவனித்தான் அழகு. பிறகு நிதானமாக உரத்த குரலெடுத்துக் கத்தினான். ''வேணி... வேணி...''

வேணி பின்புறமாகக் குதித்து பூவரச மரத்தடியை அடைந்ததும் அழகின் குரல் கேட்டது. பதிலுக்கு வேணியும் கத்தினாள்.

"அழகண்ணே....: திருடன்... வீட்டுக்குள்ள திருடன் புகுந்துட்டாண்ணே..."

பானை செய்கிற ஆறுமுகத்துக்கும், அவனது பந்துக்களுக்கும் அழகு, வேணியின் குரல் கலபமாக, தெளிவாகக் கேட்டது. 'விருட்'டென்று எழுந்தார்கள். ஆறுமுகம் அனிச்சையாக கையில் ஒரு கம்பை எடுக்க.... விருந்தாளிகளும் வந்த இடத்தில் தமது வீரத்தை நிரூபிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததில் கிளர்ச்சியுற்று வேட்டியை மடித்துக் கட்டினார்கள்.

"ஏய் எவண்டாவன்?" எனும் சங்கநாதம் அவர்கள் வரும் முன்பே பூவரச வீட்டை எட்டியது. துணைக்கு ஆள் வருவதை உணர்ந்த அழகுவின் குரல் முன்னிலும் உயர்ந்தது.

வேணி வீட்டின் பின்புறம் கிணற்றருகே நில்லாமல் முன் வாசல் கதவுக்குத் திருடன் திருடன் என்று கத்தியபடி ஓடி வந்தாள். இப்போது அழகு கத்துவதுடன் நில்லாது வாசல் கதவையும் படபடவென்று உலுக்கினான். வேணியின் குரல் வாசலருகே கேட்பதை உணர்ந்து கத்தினான்.

''வேணி கதவைத் திற; வெளிய பூட்டி இருக்கு.''

வேணி கதவைத் திறக்க,

அழகு வெளியே வந்தான். அதற்குள் ஆறுமுகம் குழுவினருடன் அங்கே வந்து சேர்ந்தான்.

"எங்க.... எங்க... களவாணி?"

"வீட்டுக்குள்ளதான் இருக்கான்."

"சுத்தி வளைங்கடா."

இவர்களில் மூவர் வீட்டின் பின்புறம் ஓடினார்கள். அந்த உருவம் அப்போது பின் வாசல் வழியே வெளியேறி பூவரச மரத்தையொட்டி, சுற்றுச் சுவரைத் தாண்டிக் குதித்து வீட்டின் பின்புறமாக ஓடியது.

"ஓடுறாண்டா... புடிறா."

"ஏய் நில்றா... நில்றா..."

அந்த உருவம் மிக வேகத்துடன் ஓடியது. ஆறுமுகமும் உடன் வந்தவர்களும் சற்று முட்டாள்தனமாகத் தாமதித்து வேணியையும் அழகுவையும் தேடினார்கள்....

"ஏந்தம்பி ஒருத்தந்தானா, வேற எவனும் உள்ள இருக்கானா?"

வேணி எரிச்சலாகி, "ஓடுறவனைப் புடிங்க" என்று கத்தியதும் சுதாரித்து அவர்களும் சுவரைத் தாண்டி ஓடினார்கள்.

உருவம் கண் பார்வையிலிருந்து இப்போது விலகியிருந்தது. ஆனாலும் மச மசவென்ற வெளிச்சத்தில் தேடியபடி அவர்கள் ஓடினார்கள்.

சற்றுத் தள்ளியிருந்த மரங்களின் அடியிலிருந்து அந்த உருவம் ஓடியது....

"ஏய் நில்றா.... டேய்... மாப்ளை... புடிறா."

ஆக்ரோஷமாக ஓடிச் சென்று அந்த உருவத்தினை சுலபமாக வளைத்தனர் ஆறுமுகம் உறவின் முறையினர்.

அதற்குள் டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு அழகுவும், வேணியும் அங்கே ஓடி வந்தனர்.

"களவாணிப் பயலை இன்னிக்குக் காலை எடுத்துரணும்." வளைத்துப் பிடித்து அவர்கள் அந்த உருவத்தினை சாத்த ஆரம்பித்தனர்.

ஓடி வந்த அழகு டார்ச் லைட்டை உருவத்தின் மூஞ்சியில் அடித்தான்.

மாட்டிக் கொண்டிருந்தவன் சரவணன்.

(தொடரும்)

## ஒரு இருண்ட பகுதி!

**தா**கூருக்குப் பிறகு இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெற்றிருக்கும் இந்தியர் வித்யாதர் சூரஜ் பிரசாத் நைப்பால்.

நைப்பாலின் தாத்தா, இந்தியாவிலிருந்து மேற்கிந்திய தீவுகளுக்குக் காண்ட்டிராக்ட் பணியாளராகப் போனவர். அப்பா, பத்திரிகையாளர். அதனால் நைப்பாலுக்குச் சிறுவயதிலிருந்தே இலக்கியங்களில் ரொம்ப ஆர்வம். கல்லூரிப் படிப்புக்காக லண்டன் வந்தார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் ராயல் கல்லூரியில் பி.ஏ. முடித்தார்.



• நய்பால்

தொடர்ந்து சுதந்திரமான பத்திரிகையாளராக பி.பி.சி., 'கரிபியன் குரல்கள்' என்ற மே.இ.தீவு குறித்த நிகழ்ச்சிகளை வழங்கினார்.

1955ல், பட்ரீஷியா ஆன் ஹேல் என்கிற ஆங்கிலப் பெண்மணியை திருமணம் செய்து கொண்டார். அதன்பின் லண்டனில் இருந்தார் என்றாலும், உலகம் முழுவதும் பயணித்துக் கொண்டே இருந்தார். பயண இலக்கியங்கள் எழுதினார். கட்டுரைகள், நாவல்கள், சிறு கதைகள் என்று ஏராளமாக எழுதிக் குவித்தார்.

1996ல் இவரது மனைவி இறந்துவிட, கொஞ்ச நாள் கழித்து, நதீரா என்கிற பாகிஸ்தானி பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் நைப்பால்.!

'திரு. பிஸ்வாஸின் வீடு'– இதுதான் நைப்பால் எழுதிய முதல் நாவல். தமது தாத்தா இந்தியாவிலிருந்து புலம் பெயராமல் இருந்திருந்தால் தமது தந்தையின் வாழ்க்கையும், தமது இளமைப் பருவமும் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து, உருவாக்கப்பட்டதுதான் அந்த நாவல்.

சில ஆண்டுகளுக்குப்பின், தன் வாழ்நாளில் முதல் தடவையாக இந்தியாவுக்கு வந்தார் நைப்பால். அவர் கற்பனை செய்து, நாவலில் சித்திரித்திருந்தவை எல்லாம், அவர் நேரில் கண்ட இந்தியாவுக்குச் சற்றும் பொருத்தமில்லாதவை என்று நேரடியாகவே புரிந்து கொண்டார். காலனி ஆதிக்க காலகட்டம், இந்தியாவின் பாரம்பரியமான பல விஷயங்களை, கபளீகரம் செய்திருப்பது கண்டு, மனம் வெறுத்து, தன் உணர்வுகளையே இன்னொரு நாவலாக்கி விட்டார். தலைப்பு: 'ஒரு இருண்ட பகுதி!'

இவரது எழுத்துக்கு, சாமர்செட் மாம் விருது, புக்கர் பரிசு என்று பல கௌரவங்கள் ஏற்கெனவே கிடைத்து விட்டன.

– கௌதம்

# பக்கத்துல வந்தாச்!

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வீட்டருகே இப்போதைய முதல்வர் பன்னீர்செல்வத்தின் வீடும் ரெடி! இவர்களும் பக்கத்துப் பக்கத்து வீட்டில் குடி வந்தால் எப்படி இருக்கும்?...




- எக்ஜி

படம் : சேகர்



கனவுக்கன்னி.... நானா

## ஆம்... அது மைசூர் சாண்டல் செய்யும் மாயாஜாலம்.

மைசூர் சாண்டல் சோப் மனங்கவரும் நறுமணம் மற்றும் இயற்கையான நற்குணங்கள் நிறைந்து தலைமுறைதலைமுறையாக உலகையே வசீகரித்து வந்துள்ளது. தூய்மையான சந்தன எண்ணெய் கொண்ட ஒரே சோப். உங்களது தினசரிக் குளியலை ஒரு அழகுப் பராமரிப்பாகவே செய்யும். உங்களுக்குப் புத்துணர்வும், புது நறுமணமும் அளித்து காலை முதல் மாலைவரை உங்களைப் பெருமிதம் கொள்ளச் செய்யும்.

மைசூர் சாண்டல் சோப்

மேனியின் முழுப் பராமரிப்புக்காக 1918லிருந்து




டிரையோ பேக்கும் கிடைக்கும்

கர்நாடகா சோப்ஸ் & டிடெர்ஜெண்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்.

இணையதளம் : www.mysoresandal.com

MCA/KSADL/109 Tam

காதில் விழுந்தவை



# கோபத்தில் ராமதாஸ்!

● டான்ஸி வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பு எதிர்பார்க்கப்படும் இந்தச் சமயத்தில் ஒரு சுவையான விவகாரம் பற்றி வழக்கறிஞர்களிடையே பேசப்பட்டு வருகிறது. தனிக் கோர்ட்டில் தண்டனை பெற்ற டான்ஸி பொதுமேலாளர் டி.ஆர். ஸ்ரீநிவாசனும் மேல் முறையீடு செய்துள்ளார். அவருக்காக தனிக் கோர்ட்டில் தினகரன் என்ற வழக்கறிஞர் ஆஜரானார். டான்ஸி வழக்கின் முக்கிய அம்சங்களில் ஒன்று, அந்தக் குறிப்பிட்ட நிலத்தை விற்கும் முடிவை எடுத்தது அரசா, டான்ஸியா என்பதுதான். "அந்த முடிவை டான்ஸி எடுக்கவில்லை. அரசுதான் எடுத்தது" என்று வாதத்தை வைத்து சீனிவாசனைக் காப்பாற்ற முயன்றார் வழக்கறிஞர் தினகரன். ஆத்திரமுற்ற ஜெ. ஒருமுறை தனிக்கோர்ட்டுக்கு வரும்போது "You have done your job excellently" என்று கோபம் கலந்த கிண்டலுடன் தினகரனைப் பார்த்துச் சொல்லி விட்டுச் சென்றார்.

இப்போது உயர்நீதிமன்றத்தில் அதே தினகரன், சீனிவாசனுக்காக ஆஜர் ஆகவில்லை. அ.தி.மு.கவினரின் மிரட்டல் காரணமாகத் தான் அவர் ஆஜராகாமல் தமது ஜூனியர் சத்திய நாராயணாவை அனுப்பி வைத்துவிட்டார்' என்று பேச்சு.

● "அடுத்தமுறை அமைச்சரவை விரிவாக்கத்தின்போது பா.ம.கவுக்குக் கண்டிப்பாக வாய்ப்பு கொடுக்கப்படும்" என்று பா.ஜ.க தரப்பிலிருந்து சொல்லப்பட்டது. பா.ம.க சார்பில் ஏற்கெனவே அமைச்சர்களாக இருந்த சண்முகமும் பொன்னுசாமியும் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர். இவர்களைத் தவிர ஏ.கே. மூர்த்தியும் எதிர்பார்த்துக் காத்திருந்தார். இதற்காக ஆங்கிலமும் கற்று வந்தாராம், மூர்த்தி. ஆனால் இந்த முறை பா.ம.க, திரிணாமுல் இரண்டையும் பிரதமர் கண்டுகொள்ளவில்லை. ஆத்திரமுற்ற டாக்டர், ஜார்ஜ் பெர்னான்டஸிடம் கடுமையாக முறையிட்டாராம். அவரோ



"கொஞ்சம் பொறுங்கள்" என்று ஆறுதல் சொல்லியிருக்கிறாராம். இந்த அமைச்சரவை விவகாரம் தவிர உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் பற்றியும் டாக்டர் மிகுந்த கவலையோடு இருக்கிறாராம். பல இடங்களில் பா.ம.க.வுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் தி.மு.க அதிருப்தியாளர்கள் போட்டியிட்டார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தி.மு.க தயங்குவது குறித்து டாக்டருக்கு மிக்க எரிச்சல். டாக்டருக்கு எதிராக வன்னியர்களைத் திரட்டும் வீர வன்னியர் பேரவை நிர்வாகிகள் பா.ம.க.வை எதிர்த்து முழு மூச்சாக வேலை செய்ததும் டாக்டருக்குக் கோபத்தை அளித்திருக்கிறது.



● உள்ளாட்சித் தேர்தல் பிரசாரத்துக்கு ஜெ. செல்லாததற்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லப்பட்டது. நிஜமாகவே உடல்நிலை அவருக்குச் சரியில்லையாம். விரைவில் அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படலாம் என்று போயஸ் தோட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

— சஞ்சயன்

உ

சிவமயம்



குடவாசல் வட்டம் கருவேலியில் எழுந்தருளி இருக்கும்

**ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரி ஸமேத ஸ்ரீ ஸற்குணேஸ்வர ஸ்வாமிக்கு**

**31.10.2001 புதன் கிழமை அன்று**

# மஹா அன்னாபிஷேகம்

அப்பர் சுவாமிகளால் பாடல் பெற்ற ஸ்தலம் கருவிலி என்ற கருவேலி. ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரி ஸமேத ஸ்ரீ ஸற்குணேஸ்வர ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் இத்தலம் கோனேரிராஜபுரம் திருவீழிமிழலை ஸ்ரீவாஞ்சியம் திருநறையூர் ஆகிய க்ஷேத்திரங்களுக்கு மத்தியில் அமைந்த மிகப் பெரிய க்ஷேத்திரம். இந்திரன் பூஜை செய்து பேறுபெற்ற ஸ்தலம். ஸ்ரீ உருத்திரகணங்கள் பூஜித்து பெயர் பெற்ற ஸ்தலம்.

**இந்த ஆலயத்தில் ஸ்ரீ ஸற்குணேஸ்வரப் பெருமாளுக்கு மஹா அன்னாபிஷேகம் நிகழும் விஷு வருஷம் ஐப்பசி மாதம் 14ம் தேதி (31.10.2001) புதன்கிழமை நடக்கிறது. அன்று பிற்பகல் 3 மணிக்கு மஹான்யாஸ ருத்ர பாராயணங்களுடன் அபிஷேகம் ஆரம்பமாகிறது. மாலை 6 மணிக்கு மஹா தீபாராதனை. 6.30 மணிக்கு விசேஷ பௌர்ணமி பூஜை– ஸ்ரீலலிதா த்ரிசதி அர்ச்சனை. 8 மணிக்கு மஹா தீபாராதனை. ஆஸ்திக மெய்யன்பர்கள் மேற்படி விழாக்களில் கலந்து கொண்டு ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரி ஸமேத ஸ்ரீ ஸற்குணேஸ்வர ஸ்வாமியின் அருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

பரம்பரை தர்மகர்த்தா
**Dr. V. கிருஷ்ணமூர்த்தி**

இப்படிக்கு
**ஸ்ரீ ஸற்குணேஸ்வரர் கைங்கர்ய ஸபா நிர்வாகிகள்**

கும்பகோணம், பூந்தோட்டம் மார்க்கத்தில் கருவேலி திருத்தலத்திற்கு பஸ் வசதி உண்டு.



## கல்கி & B.M. சில்க் சாரீஸ் சென்னை

இணைந்து வழங்கும்

## தீபாவளி நல்வாழ்த்துக்கள்

*மக்களின் ரசனை காலத்திற்கு ஏற்றவாறு மாறி வருவதை அறிந்து, உடுத்தும் ஆடைகளிலும் (சேலைகளிலும்) பல* **புதிய மாற்றங்களை** *செய்து தரம் குறையாமலும், திட்டமான விலைகளிலும், அனைவரும் பயன்பெறும் வகையிலும்,*

*இந்தத்* **தீபாவளி திருநாளை** *ஆனந்தமயமாக்க,* **பிரிண்டெட் பட்டு நூல், ஜரிகை** *வேலைப்பாடுகள் செய்த ரகங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

**இந்த வருடம் தீபாவளிக்கு கல்கி வாசகர்களுக்கு பிரத்யேக சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.**

BMSS

# B.M. சில்க் சாரீஸ்,

5. வடக்கு மாட வீதி, மைலாப்பூர்,

சென்னை – 600 004. ☎ (044)–494 0291

(அனைத்து கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்)

# பொம்மலாட்டம்

'முந்தி முந்தி வினாயகரே...
முப்பத்து முக்கோடி தேவர்களே...'

பிள்ளையார் வணக்கத்தோடு பொம்மலாட்டம் ஆரம்பித்திருந்தது. பிள்ளையாருக்குப் பிருத்விராஜா பூஜை செய்து கொண்டிருந்தான்.


மேடைக்கருகே முன் வரிசையில் சின்னத்தாயி கிழவி, பேரன் சத்தியை மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். தை மாத பின்பனி சிலுசிலுவென இறங்கியது. வெத்தலை போட்டால் பரவாயில்லை என்று தோன்றியது கிழவிக்கு. சுருக்குப்பையை எடுத்து சத்தியின் மடியில் வைத்துப் பிரித்தாள். 'புள்ளையார் கூட எலி எதுக்கு இருக்குப் பாட்டி?' வெத்தலைக் காம்பைக் கிள்ளி சத்தியின் வாயில் திணித்தாள். 'புள்ளையாரு சிநேகிதக்காரண்டா அது.' கதை ஆரம்பித்ததும் கூட்டத்தின் சலசலப்பு நின்றுபோனது.

'தைப்பூசத் தேர்திருவிழாவை முன்னிட்டு பாப்பாரப்பட்டிப் பழைய சுப்பிரமணியசுவாமி கோயிலில் 'நங்கவள்ளி பாக்கியம் குழுவினரின்' பொம்மலாட்டம் தினமும் இரவு பத்து மணிக்கு நான்கு நாட்கள் நடைபெறும்.

சீதா கல்யாணம், லவகுசா, அரிச்சந்திரா, பிருத்திவிராஜா...

நாலாம் வகுப்பு படிக்கும் பேத்தி முத்தம்மா திக்கித் திணறி படித்துக் காட்டியபோதே கிழவி பொம்மலாட்டம் பார்க்க முடிவு செய்துவிட்டாள். அதுவும் பிருத்திவிராஜா கதையென்றால்...

பத்தாண்டுகளுக்கு மேலாகியிருக்கும் கிழவி பொம்மலாட்டம் பார்த்து. தைத்தேருக்கு முன்பெல்லாம் பொம்மலாட்டம்தான் போடுவார்கள். இப்போது அந்த இடத்தைப் பாட்டுக் கச்சேரி பிடித்துக் கொண்டுவிட்டது. புதுக் கோவிலில் இந்த வருஷம் பாட்டுக்கச்சேரிதான். பழைய கோயிலில் பாட்டுக்கச்சேரிகாரர்களுக்குப்



பணம் பத்தவில்லை என்றுதான் பொம்ம லாட்டம் போட்டிருக்கிறார்கள். இரண்டாம் வகுப்பு படிக்கும் பேரன் சத்திவேலுவை யும்கூட கூட்டிப்போக நினைத்தாள் கிழவி.

"பொம்மலாட்டம்னா என்னா பாட்டி?"

"பொம்மைங்கல்லாம் பாட்டு பாடி டான்ஸ் ஆடும்டா பேராண்டி; இன்னிக்குப் பிருத்விராஜா கதடா, அதுல குதிரையெல்லாம் வரும்." சத்திவேலுவை எப்படி சம்மதிக்க வைப்பது என்று கிழவிக்குத் தெரியும்.

"குதிரையா?"

"வாயேன்; எங்கூட வந்து பாரேன்."

குதிரை என்றால் சத்திவேலுக்கு ரொம்ப இஷ்டம். ஒரு முறை சத்திக்கும், முத்தம்மாவுக்கும் அம்மை போட்டபோது அவர்கள் 'கயிணி'(விளைநிலம்)க்கு மேற்கில்

**ராஜ்செந்தில் ராகவன்**



தொலைவிலிருந்த மாதேஹள்ளி காளியம்மா கோயிலுக்கு நேர்ந்துக் கொண்டாள் கிழவி.

அடர்ந்த புளியந்தோப்புக்குள் இருக்கும் காளியம்மாகோயில் ரொம்ப சின்ன கோயில். ஆனால் கோயிலுக்கு முன்னால் இரண்டு பெரிய குதிரை சிலைகள் நிற்கும். அவற்றைப் பிடித்துக் கொண்டு சிவப்புத் தொப்பியும், டவுசரும்போட்ட அந்த காலத்து இரு போலீஸ்கார சிலைகள் நின்றிருக்கும்.

அந்தக் கோயிலில்தான் சத்திக்கும், அவன் அக்காவுக்கும் மொட்டையடித்து காது குத்தினார்கள். அன்று வலிதாங்காமல் ஓயாமல் அழுது கொண்டிருந்தான் சத்தி. சமாதானப்படுத்த முருகன் சித்தப்பா தூக்கி அந்த குதிரைச் சிலைகளுள் ஒன்றின்மீது உட்கார வைத்தார். 'டக் டக்' 'டக் டக்' என்று குதிரை குளம்படி போல் சப்தமெழுப்பி விளையாட்டுக் காட்டினார்.

சத்திவேலுவின் அழுகை சட்டென நின்றது. குதிரை மேலிருந்து பார்ப்பதற்கு எல்லோரும் சிறிதாய்த் தெரிந்தார்கள் சத்திவேலுக்கு. எல்லோரும் அவனுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் என்பது மாதிரியான ஒரு வினோதமான மகிழ்ச்சி ஏற்பட்டது. "சத்தி... சத்தி" என்று கூப்பிட்டுக் கொண்டு வந்த கிழவியைக் கம்பீரமாய், அலட்சியமாய்ப் பார்த்தான் அவன். "அடேயப்பா! மதுர வீரா! எங்கண்ணே பட்டுடும் போலிருக்கே" கிழவி தொட்டுத் தழுவி நெட்டி முறித்தாள். சத்திக்கு ரொம்ப சந்தோஷமாய் இருந்தது. நெஞ்சை நிமிர்த்தி இறுமாப்புடன் சுற்று முற்றும் பார்த்தான்.

அவன் இறங்கியதும் அடம்பிடித்து மேலேறினாள் முத்தம்மா. "அய்யோ! பயமா இருக்கு சித்தப்பா இறக்கிவிடுங்க" சித்தப்பா இறக்கி விட்டு விட்டார். பொங்கல் வைத்துக் கொண்டிருந்த அம்மாவிடம் ஓடிப் போனாள் முத்தம்மா.

பொங்கல் வைக்க பொறுக்கி வந்த சுள்ளிகளைத் தலையில் வைத்துக் கொண்டு அங்குவந்த காளியம்மா கோயில் பைத்தியம் பாடிக் கொண்டே ஆடிக் காண்பித்தது.

"செங்கோலி செங்கோலி குருத போவுது பார் போவுது பார் மருத..."

"செங்கோலி குதிரயை இவன் இன்னும் மறக்கலயா?" கிழவி சித்தப்பாவிடம் சொல்லி பெருமூச்சுவிட்டாள்.

"ஏ... பைத்தியம்" என்று கத்திய முத்தம்மாவின் வாயிலேயே சுள்ளியால் ஒன்று போட்டாள் அம்மா, "அவன் மாமன் மாதிரிடி உனக்கு, அவனைப் பைத்தியம்னு இன்னொரு தடவ கூப்பிட்டினா வாய் மேலேயே சூடு வெச்சிருவேன்" என்றவள் திரும்பி, முருகன் சித்தப்பாவிடம் கோபமாய்க் கத்தினாள், "அப்பா, சாமி! நான் அனுபவிக்கிறது பத்தாது, இப்ப எம் புள்ளக்கியும் கத்துக்குடுங்க.. இறக்கி உடுறா அவனை."

சத்தியும் முத்தம்மாவும் காளியம்மா கோயில் புளியந்தோப்பைச் சுற்றிக் கொண்டுதான் பள்ளிக்குப் போவார்கள். அந்த வழியே போகும்போதெல்லாம் அந்தக் குதிரைகளின் மேலேறி ஆடிவிட்டு வர வேண்டும் என்ற ஆவல் சத்தியை உந்தும். ஆனால் யாரும் பகலில்கூட அங்குபோக பயப்படுவார்கள். காரணம் இருண்ட தோப்பும், எப்போதும் அங்கேயே கிடக்கும் அந்த காளியம்மா கோயில் பைத்தியமும்தான்.

ஆனால் ஒருமுறை தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உள்ளே போனான் சத்தி. அப்புறம் பயம் தெளிந்து அவ்வப்போது போய் ஆடிவிட்டு வருவது வழக்கமாகிவிட்டது. ஒருநாள் முத்தம்மா அம்மாவிடம் சொல்லிவிட்டாள்.


"அம்மா தினமும் சத்தி ஸ்கூலு வுட்டதும் காளியம்மா கோயிலுக்குப் போய் குதிர ஆட்டம் ஆடறாம்மா."

"என்னடி சொல்ற? அவன் எப்பிடி குதிரமேலே ஏறுவான்?"

"அந்தக் கிறுக்கு மாமாதா ஏத்திவுடுது."

கோபத்தில் அம்மா வெளுத்து வாங்கி விட்டாள். "இனிமே அங்க போவாதடா சத்தி!" அழுதாள். "உன்னையும் அந்த கிறுக்கன் கொன்னாலும் கொன்னுடுவான்." அப்புறம், பள்ளி விடும்வரை காத்திருந்து இருவரையும் வீட்டிற்கு அழைத்துப் போவது அம்மாவுக்குப் பழக்கமாகிவிட்டது. இருந்தாலும் அம்மாவுக்குத் தெரியாமல் விடுமுறைகளில் எப்போதாவது ஆடிவிட்டு வருவான்.

பாப்பாரப்பட்டி சுற்று வட்டாரத்தில் யாரிடமும் உயிருள்ள பெரிய குதிரை கிடையாது என்று சத்தி நினைத்துக்



ஆகாய வாசலில்
விண்மீன் புள்ளிகள்
அவசரத்தில் கோலம்
போட்டது மின்னல்
- வானவில் மூர்த்தி


கொண்டிருந்தான். ஆனால் போனவாரம் 'லக்ஷ்மி விலாஸ்' ஓட்டல் கடை வெங்கிட்டு ஐயர் மஞ்சுவிரட்டுக்கு மாடுகளோடு தன் குதிரையையும் சிங்காரித்து அழைத்து வந்தபோது அந்த வெள்ளைக்குதிரையின் அழகில் மயங்கிப் போய், அந்தக் குதிரை போகுமிடங்களிலெல்லாம் சுற்றித் திரிந்தான். ஆனால் மறுநாள் குதிரையைச் சஞ்சீவ ராயன் மலை மடுவுக்கருகிலிருக்கும் ஐயரின் தோட்டத்துக்குக் கொண்டு சென்றுவிட்டார்கள். சத்திக்கு ஏமாற்றம்; இருந்தாலும் ஐயரின் மெத்தை வீடைத் தாண்டிப் போகும் போதெல்லாம் அவன் கண்கள் கொட்டிலில் குதிரை இருக்கிறதா? என்று தேடின.

பிருத்விராஜாவின் குதிரை குள்ள பப்பூனை துரத்திக் கொண்டிருந்தது. 'மஞ்சள்வானம்... அய்யய்யோ ... அய்யோ எங்கே மணத்தைக் காணம்' என்று அலறிக் கொண்டு மேடை பூராவும் ஓடிக் கொண்டிருந்தான் குள்ள பப்பூன். சத்தி விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தான். வாய் மணக்க சத்தியை முத்தமிட்ட கிழவி சேலைத் தலைப்பை போர்த்தி இறுக்கிக் கொண்டாள். கதகதப்பாக இருந்தது சத்திக்கு. இலேசாய்த் தூக்கம் வருவதுபோல் இருந்தது.

*சுயம்வரத்துக்கு அரச சபைக்கு வந்த*
*சம்யுக்தையை*
*ஹாஹ்... (ஹாஹ்)*
*மறைந்திருந்த நம்மவீராதி வீரன் சூராதி*
*சூரன்*
*குதிரக்காரன் பிருத்விராஜா*
*ஹாஹ்.... (ஹாஹ்)*
*தூக்கி தோளுல போட்டுக்கிட்டு*
*ஹாஹ்... (ஹாஹ்)*
*உதைச்ச கிளம்பினான் பாரு அவன்*
*குதிரையை..*

''பறந்ததே பறந்ததே, நம்ம பிருத்வி குதிரை பறந்ததே'' ''சளங்சக்''... ''சளங்சக்''... சளங்சக்''... ''சளங்சக்''.. மிருதங்கம் தொம் தொம்மென அதிர்ந்தது. கட்டை பொம்மைகள் மேடைப் பலகையில் மோதும் ஓசையும், திரைக்குப் பின்னால் பொம்மைகளை இயக்குபவர்கள் குதித்தாடும் ஓசையும் சேர்ந்துகொண்டு தூங்க முயன்ற சத்தியை எழுப்பின.

நிமிர்ந்து உட்கார்ந்த சத்தி கிழவியிடம் கேட்டான். ''குதிர பறக்குமா பாட்டி?'' கிழவி



**''என்னது '12B கட் சர்வீஸ்'னு ஒரு படம் எடுக்கறீங்களா?''**

**''ஆமாம். '12B'ன்னு ஏற்கெனவே ஒரு படம் வந்திடுச்சே! அதான்!''**

***- யமுனா ரெங்கநாதன்***

---

புன்னகைத் செய்தான், ''உங்கம்மாவைக் கேளு, சொல்லுவா!'' கொஞ்ச நேரத்தில் சத்தி தூங்கிப் போனான்.

பொம்மலாட்டம் முடிந்து தூங்கும் சத்தியை இடுப்பில் வைத்துக் கொண்டு கிழவி கொட்டாய்க்கு நடந்தாள். மாதே ஹள்ளி ரோடு பிரியுமிடத்தில் உடன் வந்த ஒன்றிரண்டு பேரும் நேராய்ப் போய்விட்டனர். கிழவி தனியே நடந்தாள். சின்னகண்ணன் குட்டையை ஒட்டிப் போட்டிருந்த ஒற்றை சோடியம் விளக்கு மாதேஹள்ளி ரோட்டை வினோத வண்ணத்தில் காண்பித்துக் கொண்டிருந்தது. கிழவிக்குக் கண் கசகசவென தெரிந்தது. நாலு மணி பால் வண்டிக்குப் பால் ஊத்தப் போகும் யாரோ ஒரு சைக்கிள்காரன் 'கிணி கிணி' என்று மணியடித்துக் கொண்டே கிழவியைக் கடந்து போனான்.

சரவணா டூரிங் டாக்கீஸ் பின்னால், ஓடை பள்ளத்தில் இறங்கி காளியம்மா கோயிலைச் சுற்றிக் கொண்டுதான் கொட்டாய்க்குப் போக வேண்டும். பள்ளத்தில் இறங்குகையில் சத்திக்கு இலேசாய் முழிப்பு வந்தது. மேட்டிலிருந்து பார்க்கையில் நில வொளியில் காளியம்மன் கோயில் மங்கலாய்த் தெரிந்தது. அந்த கிறுக்குமாமா குதிரை காலடியில் உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டிருந்தது சத்திக்குத் தெரிந்தது. சிவப்புப் புள்ளி தெரிந்து தெரிந்து மறைந்தது.

''பாட்டி!''

''ம்...''

''அந்த கிறுக்கு மாமா யாரு பாட்டி?''

''உங்கப்பன் வளத்துப் பையன்டா, உங்கப்பனுக்கு உன்ன மாதிரியே குதிரைங்கன்னா ரொம்ப இஷ்டம். அந்தியூரு சந்தைக்குக் குதிரை வாங்கப் போனான் உங்கப்பன்.

அங்கதான் செங்கோலி குதிரையைப் புடிச்சிட்டு வந்தான். முன்னாடி அந்தக் குதிரை வளந்த ஊட்டுல அந்த கிறுக்கன் இருந்தாம் போல. குதிரைகூடயே அவனும் வந்துட்டான், அவந்தான் குதிரைய புல்லு, கொள்ளு போட்டு பாத்துக்குவான்."

"அப்பா குதிரை மேலே ஒக்காந்து ஓட்டுமா? வண்டியில கட்டி ஓட்டுமா?"

"ராஜா மாதிரி மேல ஏறி வருவான்டா, உங்க தாத்தா உங்கம்மாவை உங்கப்பனுக்குக் கட்டிக் குடுக்கமாட்டேனுட்டான், ராத்திரியோட ராத்திரியா குதிரையிலயே தூக்கிப் போட்டுக்கிட்டுப் போய்க் கஞ்சமலையிலே கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்துட்டான்."


"அந்த செங்கோலி குதிரை எங்கப்பாட்டி?"

"ம்.... உங்கப்பன் குதிரைமேலே ஏறி வரத பாத்தா அப்படியே ஊரே ஆ"ன்னு பாக்கும். அது எவனுக்கோ புடிக்கல போல. மருந்து வெச்சிட்டாங்க. செங்கோலிக்குக் கிறுக்குப் புடிச்சி உங்கப்பனைக் கீழே தள்ளி மெதிச்சிடுச்சி. கழுத்து ஒடஞ்சி எம்மவராசா தூங்குறமாதிரியே செத்துப் போனான். அந்த கிறுக்கு மாமனுக்கு இது பொறுக்கல. காளியம்மா கோயில் சூலத்தை உருவி செங்கோலி குதிரயைக் குத்து குத்துன்னு குத்திக் கொன்னுட்டான், அப்பநீ அம்மா வயத்துல நாலு மாசம்."

கிழவி பெருமூச்சு விட்டாள். "சத்தி .... டே பய்யா..." சத்திவேலு தூங்கிப் போயிருந்தான்.

## தக்காளி குளியல்!

**ஸ்**பெயின் நாட்டில் "வாலன்ஸ்" என்னுமிடத்தில் முப்பதாயிரத்திலிருந்து ஐம்பதாயிரம் பேர் வரை கூடித் தக்காளி பழங்களை - ஒருவர் மேல் இனனொருவர் பிழிந்து எறிவதை விழா



வாகக் கொண்டாடுகின்றனர். இதற்காகச் சுமார் ஒன்றரை லட்சம் கிலோ தக்காளிகள் வீணடிக்கப்படுகின்றன!

- *பார்த்தசாரதி*

**கொ**ட்டாய்க்குக் கிழவி போய்ச் சேரும்போது வெள்ளி முளைத்திருந்தது. "பாட்டியும் பேரனும் அவங்கப்பன் குதிரைகாரன் கதையைப் பார்க்கப் போனீங்களாக்கும், பால்வண்டி 'வரவரைக்கும் அப்பிடி என்னா ஆட்டம்!" சத்திக்கு இலேசாக முழிப்பு வந்தது. சித்தப்பா கிரீடம் வைத்துக் கொண்டு ஒரு கையில் வாளுடனும், மற்றொரு கையில் கயிற்றில் பிணைத்த ஒரு பெரிய குதிரையையும் ஒரு சின்ன குதிரையையும் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார்.

"பாட்டி!"

"ம்..."

"சின்ன குதிரை எனக்குத்தானே?"

"ஆ... ஆ..."

சித்தப்பாவுக்குக் கோபம் வந்தது "அந்த செங்கோலி குதிரையைப் புதைச்சப்போவே கூடவே அந்த சேணத்தையும் போட்டு புதைச்சிருன்னு சொன்னேன், கேட்டியா? இப்ப அதுதான் உம் பேரனைப் புடிச்சுக் கிட்டு ஆட்டுது."

"எம்பேரன் சொத்துடா அது. காலைல போயி பால கறப்பியா? வந்துட்டான் வம்பு பேச..."

கிழவி சத்தியைத் திண்ணையில் கிடத்தினாள். தலையிலிருந்த உருமாலைக் கழற்றி விரித்து, சத்தியின் மேல் போர்த்தினார் சித்தப்பா.

**கா**லையில் அம்மா குளிப்பதற்கு எழுப்பியபோது சத்தி வேகமாக ஓடிப் போய், கொட்டிலில் பார்த்தான். அங்கு குதிரைகள் இல்லை. லட்சுமி மாடு வைக்கோல் மென்று கொண்டிருந்தது. எறும்புப் புற்றைக் காலால் நோண்டி நோண்டி விளையாடிக் கொண்டிருந்தது அதன் கன்று. சத்திக்கு ஏமாற்றமாக இருந்தது. அம்மாவிடம் ஓடினான்.


"அம்மா எங்கம்மா குதிரைங்களை காணம்?"

"என்னா குதிரைடா?"

"சித்தப்பா காலையிலே புடிச்சுட்டு வந்தாரே, ஒரு குட்டி குதிரை, ஒரு பெரிய குதிரை."

சத்தியின் அம்மாவுக்கு அழுகையாக வந்தது.

"எம் புருஷன்கூட என்னையும் கொண்டு போயிருக்கக்கூடாதா? எம்மா! ஏஞ்சாமி காளியம்மா! எம் பையனையாவது மீதி வுட்டுரும்மா." சத்தியைக் கட்டிக் கொண்டு அழுதாள் அம்மா. குதிரையைக் கேட்டதற்கு ஏன் அம்மா அழ வேண்டும்? என்று சத்திக்குப் புரியவில்லை.



# வைர மனிதர்!



• வித்யாராஜ்

உலகிலேயே மிகப் பெரிய விலைமதிப்பற்ற வைரங்கள் உங்களிடம் இருந்தால் என்ன செய்வீர்கள்? வாழ்நாள் முழுவதும் எந்தவிதமான தொல்லையுமின்றி ஆனந்தமாக இருந்துவிடலாமென்று நினைப்பீர்களல்லவா? பெங்களூர் பசவன்குடியில் உள்ள வித்யாராஜ் என்ற வழக்கறிஞரின் சிந்தனை சற்று வித்தியாசமானது. இவற்றை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகையைத் தர்ம காரியங்களுக்குக் கொடுத்துதவ நினைக்கிறார்.

விஜய நகரத்தை அரசாண்ட கிருஷ்ண தேவராய மன்னரின் நேரடி வாரிசான இவரிடம் உள்ள வைரங்களின் மதிப்பைக் கணக்கிட்டபோது, புருனே சுல்தானைப் பின்னுக்குத் தள்ளிவிட்டார் என்ற எண்ணமே மேலோங்கியது. முதலில் இவரிடம் உள்ள வைரங்கள், அவற்றின் மதிப்பைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

**நீலாஞ்சலி** : 1370 காரட் எடை. 12 பட்டைகள் கொண்ட ஒரிஜினல் பர்மிய நட்சத்திர நீலக்கல்லாலான இதன் மதிப்பு 200 மில்லியன் அமெரிக்க டாலர்கள். கின்னஸ் புத்தகத்தில் பதிவு பெற்றது. **ராஜாரத்னா** : இதனுடைய மதிப்பு 500 மில்லியன் டாலர். **ரவிரத்னா** : உலகிலேயே மிகப் பெரிய நட்சத்திர சிவப்புக்கல் என கருதப்படும் இந்த வைரம் ஆறு பட்டைகளைக் கொண்டது. மதிப்பு ஒரு பில்லியன் டாலர்.

மேலும் **பர்மா வைரங்கள்** நான்கு. டிரான்ஸ்பரண்ட் வைரங்கள் இவை. முக்கோண வடிவமுள்ள இவற்றின் மதிப்பு காரட் ஒன்றுக்கு 75,000 டாலர். மொத்த மதிப்பு 1.2 மில்லியன் டாலர். வைரங்களில் மிக அரிதாகக் கிடைக்கக்கூடிய **பர்மீஸ் ரூபி**. இதன் எடை 79 காரட். முறையே 55 காரட், 4 காரட், 2 காரட் எடையுள்ள **'அலெக்ஸாண்ட்ரைட்'** வைரங்கள் மூன்று - இவை பகல் நேரத்தில் பச்சை நிறமாகவும் இரவு நேரத்தில் சிவப்பாகவும் மாறக் கூடிய அபூர்வமான வைரங்கள். 7.5 காரட் எடையுள்ள **ஆல்மோன்டைன் கார்னெட்**, 11.2 காரட் எடையுள்ள **ஸ்பைனல் ரூபி**, 16.5 காரட் எடையுள்ள மாதுளம்பழ நிறமுற்ற டிரான்ஸ்பரண்ட் பர்மா ரூபி. இவையனைத்தும் தற்போது வித்யாராஜிடம் உள்ள வைரங்கள்.

இந்த வைரங்களெல்லாம் வித்யாராஜுக்கு எப்படி கிடைத்தன?

கி.பி.1300 முதல் 1600ஆம் ஆண்டுவரை அரசாண்டு வந்த விஜயநகர சாம்ராஜ்யம், ஐரோப்பா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் வர்த்தகத் துறையில் முன்னணியில் இருந்தபோது வைர வியாபாரம் பிரதானமாக இருந்தது. 1565 ஆம் ஆண்டு தலைக்காடு யுத்தத்திற்குப் பிறகு ராஜ்யத்தை இழந்து வெளியேறிய கிருஷ்ண தேவராயர் சந்ததியினர் பெங்களூர் அருகே உள்ள கெஜ்ஜெகரா குப்பே என்ற சிற்றூரில் குடியேறினார்கள். வித்யாராஜின் பெற்றோர்கள் சாதாரண விவசாயிகள் தான். வித்யாராஜ் பெங்களூர் வந்து சட்டம் படித்து இங்கேயே தங்கிவிட்டார்.

1983ஆம் ஆண்டு ஒரு முறை தம்முடைய கெஜ்ஜகராகுப்பே கிராமத்துக்குச் சென்றவர், வீட்டுப் பரண் மீது பல ஆண்டு காலமாக வைக்கப்பட்டிருந்த பெரிய மரப் பெட்டி

யொன்றைத் திறந்து பார்த்தபோது பழங்கால பொருட்கள் இருப்பதைக் கண்டார். அவற்றை பெங்களூர் வீட்டுக்குக் கொண்டு வந்து வைத்தவர் மீண்டும் 1986ஆம் ஆண்டு கிராமத்து வீட்டிற்குச் சென்றார். அப்போது வீட்டு மூலையில் சிறிய விநாயகர் சிலையொன்றையும் அதன் கீழ் புதைக்கப்பட்டிருந்த பேழையொன்றையும் கண்டெடுத்தார். திறந்து பார்த்த போது 9 கிலோ எடையுள்ள 45,000 காரட் சிவப்புக்கல் இருந்தது. ஆனால் அப்போது அதன் மதிப்பு இவருக்குத் தெரிந்திருக்கவில்லை. கிடைத்த பொருட்களை அலமாரியில் போட்டு வைத்திருந்தார்.

இவருடைய மனைவி இந்துமதி ஒருமுறை அனைத்தையும் எடுத்து சுத்தம் செய்து பார்த்த போது அவை வைரம் என்பது தெரிய வந்தது. உடனே பிரபல ஜெம்மாலஜிஸ்ட் உதவியுடன் பரிசோதித்து உண்மையான மதிப்பை அறிந்து கொண்டார். பிறகு சில வைரங்களைப் பற்றிய விவரங்களை கின்னஸிற்குத் தெரிவித்துப் பதிவு செய்தார். தம்முடைய முன்னோர்களின் சேகரிப்பு பற்றியும், தமது கண்டெடுப்பு பற்றியும் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார். பேட்டிகள் கொடுத்தார். ஆனால் உண்மையான வைரங்களைப் பாதுகாப்பு கருதி நேரடியாகப் பத்திரிகையாளர்களுக்குக் கூட காட்டவில்லை.




தம்முடைய ஒரே மகனும் மூன்று மகள்களும் அமெரிக்காவில் செட்டிலாகி விட்டாதல் தமக்குப் பிறகு குடும்பத்தினர் யாருக்குமே இவ்வளவு பெரிய சொத்து தேவையில்லை. தம்முடைய வருமானமும், மகன் அனுப்பும் பணமும் மட்டுமே போதுமென்று நினைக்கிறார் வித்யாராஜ்.

சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இவருக்குத் தற்போது 72 வயது. இனியும் இதைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது இயலாது. பஹாமாவில் இவற்றை விற்பனை செய்வதன் மூலம் வரிப் பிரச்னை இருக்காது என்றும் முடிவு செய்துள்ளார். மேலும் இவற்றை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகையை அங்கேயே உள்ள 'பஹாமா ஐலண்ட் ட்ரஸ்ட்' மூலமாக எய்ட்ஸ் மற்றும் புற்றுநோய் நிவாரணப் பணிகளுக்கும் உடல் ஊனமுற்றோர், வயதானோர் நலனுக்கும் கொடுத்துதவ முடிவு செய்திருக்கிறார் வித்யாராஜ்.

**- அ. குமார்**

## மனித ரோபோட்...

ஒரு மீட்டர் 20 செ.மீ. உயரம் 43 கிலோ எடை கொண்ட ரோபோட் மனிதன் விலைக்கு கிடைக்கிறான், ஜப்பானில்.

கதவைத் திறக்க, மூட, இயந்திரங்களை இயக்க, விருந்தினர்களை உபசரிக்க, தரை கழுவ, ஆள் இல்லாத சமயத்தில் விளக்கு போட என அனைத்து வேலைகளையும் நீங்கள் புரோகிராம் செய்து வைத்தால் முடித்து கொடுப்பான் இந்த ரோபோட் மனிதன். ஹோண்டா நிறுவனத் தலைவருடன் கை குலுக்கும் இதன் விலை ஐம்பது லட்சம் ரூபாய்!




**- பாரீஸ் பார்த்தசாரதி**

# ஏன் கடவுளுக்கு நைவேத்தியம் காட்டி சாப்பிட வேண்டும்?



- ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஜீவனுண்டு. அதையறுத்து சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது. அவைகளை கடவுளுக்கு ஆராதனைசெய்து சாப்பிட்டால் அந்த தோஷம் நிவாரணையாகும்.
- யஞ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், சந்தோஷ மடைந்து இஷ்ட்டமான போகங்களைக் கொடுப்பார்கள். ஆதலால் நீங்கள் சாப்பிடுவதற்குமுன் அன்னமும் பதார்த்தங்களும் கடவுளுக்கு காட்டி ஆராதனை செய்து அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும்.
- இந்திராதி தேவதைகளும் ஜனங்களுக்கு ஜீவனார்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்கு மழையைப் பெய்விக்கப் பகவானால் நியகிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அவர்களால் விளைவித்துக் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்வதனால் அவர்களை சந்தோஷித்து மறுபடியும் பிரதி வருஷங்களிலும் மழையை விருத்து செய்து கொண்டே வருவார்கள். அதனால் ஜனங்கள் க்ஷேமமாய் விருத்தியடைவார்கள்.

*ஆதாரம்: ஜீவப்ரஹ்மைத்ய வேதாந்த ரஹஸ்யம்*

---

ஆகையால் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.

---

**திருமண வைபவங்களுக்கு** சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால் அப்பம் முதலியவை வழங்கப்படும்.

---

# தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20. போன்: 4915662, 4914213

# இளைஞர்கள் கனவு காண வேண்டுமாமே?

● அ. சங்கர், பெங்களூர் - 16

*? கந்தஹாரோடு இன்று காபூலும் தாக்குதலில் சிக்கி தத்தளிப்பதன் காரணமே கந்தஹார் புத்தனின் கோபம் என்று எடுத்துக் கொள்ளலாமா?*

! ஸாரி, ஜெயலலிதா பதவி ரத்து செய்யப்பட்டதற்கும் சென்னை பூகம்பத்திற்கும் முடிச்சு போட்டதைப் போல் தான் உங்கள் கேள்வியும்.

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

*? விமானப் பயணம் அதிகரித்துள்ளதா?*

! கிண்டலா!


● ஆர். லட்சுமி, மதுரை - 16

*? 'அ.தி.மு.க. உட்கட்சி சண்டையால் விரைவில் தமிழக சட்டசபை தேர்தல்' என்று இளங்கோவன் கூறுகிறாரே?*

! மனக்கோட்டையெல்லாம் இருக்கட்டும். ஐந்தாண்டு இறுதியில் ஐந்து சீட்டு ஜெயிக்கிற அளவுக்குக் கட்சியைப் பலப்படுத்துகிற வழியைப் பார்க்கட்டும்.



* முதலைக் கண்ணீர்!



* ஜெயித்தாலும் பிரச்னை!



* பாராமுகத் தலைவலி!

● ப. இராம் முருகன், சிவகங்கை

*? மெத்தனாலை வாயில் வைக்க முடியாத அளவுக்குக் கசப்புத்தன்மை சேர்க்க வேண்டும் என தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது பற்றி..?*

! நல்லது. ஆனால், காவல் துறை, மதுவிலக்குத் துறையில் நிலவும் ஊழல்கள் பற்றிய கசப்பான உண்மைகளையும் சந்தித்துச் சீர்செய்ய வேண்டும்.

● கார்த்திக் அமர்த்யா, மயிலாடுதுறை

*? உள்ளாட்சித் தேர்தல் களத்தில் சாதாரண வார்டு கவுன்சிலர்கூட ஏராளமான அளவில் விளம்பரங்களுக்குச் செலவு செய்வதுபோன்று தெரிகிறதே... தேர்தல் கமிஷனிடம் குளிர்விட்டுப் போய்விட்டதா?*

! உள்ளாட்சித் தேர்தலிலும் கட்சி அரசியலைப் புகுத்தி பிஸினஸ் ஆக்கிவிட்டார்கள், அதான். தேர்தல் கமிஷனிடம் பயப்பட இன்னொரு சேஷன் வர வேண்டும்.

● தென்றல்நாசர், சங்ககிரி

*? உலகில் தீவிரவாதம் தலைவிரித்தாடுவதை ஒடுக்க அஹிம்சை வழியை நாடுவதை விட்டுவிட்டு, ஹிம்சை வழியைத் தேர்ந்தெடுப்பதால் அப்பாவி மக்களும் பாதிக்கப்படுகிறார்களே... இதற்கு எந்த தீர்வு சரியானது...?*

! நீங்களே சொல்லிவிட்டீர்களே நாசர்! அஹிம்சைதான்!

● எஸ்.ஏ.யூசுப், அதிராம்பட்டினம்

*? அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு மு.க.ஸ்டாலின் சுதந்திரமாகச் செயல்பட முடியாமல் போயிற்று. மீண்டும் அவர் ஜெயித்து வந்தாலும் இதே நிலைதானே ஏற்படும்.*

! ஜெயித்து வந்தால் நியாயமான ஜனநாயக மரபுப்படி, அவருக்கு மக்களின் ஆதரவு இருப்பதைப் புரிந்து கொண்டு அதி.மு.க. அரசு தன் எதிர்ப்பைப் பதப்படுத்தி ஆதரவு கரத்தை நீட்ட வேண்டும். ஆனால், ஜெ. ஆட்சியில் அத்தகைய தர்ம நியாயங்களை எதிர்பார்க்கவா முடியும்? நீங்கள் குறிப்பிடுவதுபோல் முட்டுக்கட்டைகள்தான் இன்னும் அதிகரிக்கும்.

● மா. உலகநாதன், திருநீலக்குடி. ★

? நிஜமாகவே அ.தி.மு.க. ஆட்சியில் பணப்புழக்கம் இருக்கிறதா..?

! ஆட்சி என்பது நடைபெறவே ஆரம்பிக்கவில்லை. சட்டச் சிக்கல்கள் சமாளிப்புத்தான் நடக்கிறது. ஜெ. உறுதியளித்த பணப்புழக்கம் அதிகரிக்காததற்குக்



* இதற்கு வழியுண்டா!



* வெற்றிகரத் தோல்வி!



* கனவு கோரிக்கை!

காரணம் இதுதான்.

● எம். அசோக்ராஜா, திருச்சி - 15

? பத்திரிகைகளால் 'பாண்டவர் பூமி'யைக் காப்பாற்ற முடியவில்லையே...?

! வருந்தத்தக்கதுதான்; ஒரு 'பாரதி'க்கும் ஒரு 'தண்ணீர் தண்ணீ'ருக்கும் பத்திரிகைகள் ஆதரவு உதவி புரிந்தது போல பாண்டவர் பூமிக்கு உதவ முடியாமல் போனது ஏமாற்றம்தான்.

● பஞ்சவண்ண மகன், கருப்பம்புலம்

? நோபல் பரிசு பெறும் நய்பால் நம்ம ஊராமே..?

! நம்ம நாட்டுக்காரர் என்பதில் நாம் பெருமைப் படுவதுபோல நம் நாட்டைப்பற்றி அவர் பெருமைப்படக் காணோமே! அடிக்கடி உளறிக் கொட்டித் தமக்குத் தாமே இழுக்கு தேடிக் கொள்கிறார்.

● டி.எஸ். பாலு, வெளவிவாக்கம்

? 'இளைஞர்கள் கனவு காண வேண்டும்' என்று அப்துல்கலாம் கூறியுள்ளாரே?

! கலாம் சொல்வது சினிமாவில் வருகிற கலர் கனவு அல்ல. அது இந்தியாவுக்கான சாதனை கனவு என்று ஞாபகம் வைத்துக் கொண்டு, இரவுபகலாகக் காணலாம்.

● டி. அழகர், மதுரை

? 'காவிரி நீர்ப் பங்கீடு பேச்சு வார்த்தையை

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
மா. உலகநாதன்,
252, திருநீலக்குடி - 612 108
(கும்பகோணம் வழி)

❒ ரூ. 100 பரிசு பெறுபவர் :
எஸ்.ஏ.யூசுப்,
40/29, புதுத் தெரு,
அதிராம்பட்டினம் - 614 701

வெற்றிகரமாக முடித்து விட்டு டில்லியிலிருந்து திரும்புவேன்' என்று சொல்லிச் சென்றுள்ளாரே புதிய முதல்வர் பன்னீர்செல்வம்?

! வெற்றிகரமான படுதோல்வியில் முடித்துக் கொண்டு திரும்பிவிட்டார்.

● கே. தெய்வசிகாமணி, சென்னை - 30

? 'எனது முதல்வர் பதவி பறிபோனதால் வேதனையில் துடித்து உயிரை மாய்த்துக் கொண்ட இருபது பேருக்கு நியாயம் வழங்க, அ.தி.மு.க. கூட்டணிக்கு வோட்டுப் போடுங்கள்' என ஜெயா டீ.வி.யில் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்தது பற்றி...?

! ஆடு நனைகிறதே என்று முதலைக் கண்ணீர் வடிப்பது போல் இருக்கிறது. பாவம், வாக்காளப் பெருமக்கள்!

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1

? திராவிட கட்சிகளின் துணையை உதறிவிட்ட காங்கிரசின் செயலை வரவேற்கிறீர்களா?

! சுயச்சார்பு, சொந்தக்காலில் நிற்பது ஆகிய நோக்கங்கள் சரியானவைதான். ஆனால், காலம் கனிய வேண்டும். கனியச் செய்வதற்குச் சாணக்கியம் வேண்டும். சோனியா அம்மையார் சில விஷயங்களில் இறுகக் கண்களைக் கட்டிக் கொண்டிருக்கும்வரை கனியாது.

● எஸ்.கந்தர், திருநெல்வேலி - 7

? அதிகாலை எழுந்தவுடன் நீங்கள் ஆவலாக எதிர்பார்ப்பது என்ன...?

! சுத்தமான, சூடான ஃபில்டர் காபி! அதற்கு முன்... பல் துலக்க தண்ணீர்!

**மேஷம்** : புதன், ராகு சஞ்சாரம் ஓ.கே! ராசிநாதன் 10ல் உலவுவதால் டபுள் ஓ.கே! அப்போ இந்த வாரம் பிரச்னையில்லாம, படு ஸ்மூத்தா ஓடிப் போயிடும். நிர்வாகத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வளர்ச்சி தெரியும். வெளிநாட்டுத் தொடர்பு பயனுள்ளதா இருக்கும். அரசாங்க விவகாரங்கள்ல அப்படியொன்னும் அனுகூலமிருக்காது. குருபலம் குறைஞ்சிருக்கிறதனாலே, பொருளாதார நிலை படு சுமார்!

**ரிஷபம்** : 'முடிவு உங்கள் கையில்' டீ.வி. தொடர் நேயர்களின் கருத்துப்படி தொடர்வது போல, உங்கள் எதிர்காலமும் கிரக சஞ்சார அமைப்புப்படிச் செல்கிறது. உங்க அதிர்ஷ்டம், குரு 2ல் உலவுவதால் சிறப்பான விஷயங்கள்தான் நடக்கப் போகுது. வர வேண்டிய பணம் வசூலாகும். உடல் நலம் சீராகும். தொழில் பிரச்னைகள் குறையும். முக்கியமானவர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் உழைப்பும் திறமையும் வீண் போகாது. சனி, ராகு, கேது ஆகியோர் கொஞ்சம் பிரச்னைக்குரிய இடங்களில் முகாமிட்டிருப்பதால் பயணம் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** : ஸாரி, மிதுன ராசி நண்பர்களே. மெச்சிக்கிற மாதிரி கிரக சஞ்சாரம் இல்லை. எந்தக் காரியத்தையும் 'இது சரிதானா?' என்று பலமுறை யோசித்து விட்டு செயல்படவும். இல்லை என்றால், தபாலில் வரும் 'ஆந்த்ராக்ஸ்' போல தொல்லைகள் எல்லையில்லாமல் வரும். தீயவர்களை இனம் கண்டு கொண்டு விலகி விடுவது அவசியம். பயணம் தவிர்ப்பது படு அவசியம். ஆனாலும் பாருங்க, புதன் வக்கிர நிவர்த்தி என்பதால், கொஞ்சம் பெருமூச்சு விட்டுக்கலாம்.

**கடகம்** : நல்ல வாரம்தான். கொண்டாடிவிட வேண்டியதுதான். சனி, கேது இரண்டு பேரும் நல்ல ஃபெவிஃபாண்டில் இருப்பதால், அறிவாற்றல் 'ஹாலோஜன்' போட்டதுபோல பளிச்சிடும். வழக்கு, வியாஜ்ஜியம் விஷயங்களில் திடீர் திருப்பம் ஏற்படும். கடல் வாணிபம் காசு நிறைக்கும். தகவல் துறையில் உள்ளவர்களுக்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். வாழ்க்கைத் துணையால் வளம் பெறுவது உறுதி. கூட்டுத் தொழில் லாபம் காட்டும். ஆனால் புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம்.

**சிம்மம்** : குரு, சுக்ரன், செவ்வாய், ராகு ஆகியோரது 'டீம்' படு ஸ்ட்ராங்காக இருப்பதே நல்ல அம்சம் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது "நானும் இருக்கேனே, 3ம் இடத்தில், அதுவும் குரு பார்வையோடு' என்று சூரியன் ஆஜர் ஆவது எவ்வளவு சந்தோஷமான விஷயம் தெரியுமா? கௌரவம், அந்தஸ்து உயரும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களில் வருவாய் கிடைக்கும். மக்கள் நலம் சீராக இருக்கும். கலைஞர்கள் உயர்வு பெறுவார்கள். சுப நிகழ்ச்சிகள் மங்களம் பொங்கும்.

**கன்னி** : கன்னி ராசி அன்பர்களே, இந்த வாரம் விசேஷமான பலன்கள் சொல்ல முடியாமல் போனதற்காக, வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம். மனத்தில் சஞ்சலம், வீண் குழப்பம், அலைச்சல், பணம் பற்றாக்குறை என அரை டஜன் துன்பங்கள் அலைக்கழிக்கும். அதற்காக மனம் கனங்க வேண்டாம். தெய்வ பலத்தால் எதை எதையோ சமாளித்த உங்களால், இந்த ஏழு நாட்களைச் சமாளிக்க முடியாதா என்ன? புதன் வக்கிர நிவர்த்தி என்பதால், எழுத்துத் துறை, விற்பனைப் பிரதிநிதிகள் ஆகியோர் வளர்ச்சி காண்பார்கள்.

# நடக்குமென்பார்; நடக்கும்!

**அக்னிசர்மா பக்கம்**

**அக்டோபர் 24 முதல் 30 வரை**

**துலாம் :** துணிவோடும், புத்திசாலித் தனத்தோடும் நீங்க செய்யப்போற காரியங்களைப் பார்த்து ஊரே மெச்சப் போகுது. ஏன்னா, குரு, கேது காம்பினேஷன் அப்படி. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அடுத்தடுத்து வரும். அசத்துங்க. உடன் பிறந்தவர்களால் நலம் காண சந்தர்ப்பம் வரும். சந்தோஷப் படுங்க. எதிரிகள் ஓடிப் போவாங்க. புனிதப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். செவ்வாய் 4ல் என்பதால் தாய் நலனில் கவனம் செலுத்த வேண்டி வரும். திருமணம் ஆகாதவர்களுக்குக் கெட்டி மேள ராசி கூடி வரும். மாணவர்களின் நோக்கம் நிறைவேறும்.

**விருச்சிகம் :** 'அளவோடு பெற்று வளமோடு வாழ்க!' என்று வாழ்த்தி சுமாரான பலன்களைத் தரும் சாதாரண வாரம் என அறிவுறுத்துகிறோம். நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பேச்சில் கடுமையே கூடாது. பண விஷயம், கொடுக்கல் வாங்கலா? ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும். அலுவலகப் பணியாளர்களுக்குச் சோதனையான காலம். எதிர் நீச்சல் போட்டுப் பழகுங்க. சட்டம், இராணுவம், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயர்வார்கள். உடன் பிறந்தவர்களால் ஓரளவு அனுகூலம் பெறலாம். கடவுளை நம்புங்கள்! அமைதி கிடைக்கும்.

**தனுசு :** தனுசு ராசிக்காரர்கள், இந்த வார ராசிப் பலனைப் படிக்க வேண்டிய அவசியமே இல்லை. இந்த ஒரு வார்த்தையே போதும். 'சூப்பர்!' ராசிநாதன் 7ல் இருந்து உங்கள் ராசியையும், 3 மற்றும் 11ம் இடத்தைப் பார்ப்பதும், 11ல் உலவும் கிரகங்கள் அனுகூலமாக இருப்பதும் நன்மைக்கே. பதவி உயர்வு, பெயர், புகழ், தொழில் வளர்ச்சி, நல்ல தேக ஆரோக்கியம், கணவன் - மனைவி சீரான உறவு என எல்லாமே அபிவிருத்தி நோக்கியே அமைந்துள்ளது. வெற்றி நடை போடுங்கள், ஜாலியாக.



**பாப் பாடகர் கருணாஸ்'க்கு (சிம்மம்) வருமானம் பலவழிகளில் வரப் போகுதாம்!**

**மகரம் :** போன வாரம் போலவே, இந்த வாரமும் மகர ராசி நேயர்கள் ரொம்பவே உஷாராக இருந்திட வேண்டும். எந்தக் காரியத்திலும் பதற்றம் கூடாது. யாரிடமும் வெளிப்படையாகப் பழகுவது நல்லதல்ல. மக்கள் நலனில் கவனம் தேவை. மனை, நிலம், வீடு இனங்களில் விழிப்புடன் இருக்க வேண்டும். கைப் பொருள் பத்திரம். ஏற்றுமதி இறக்குமதி இனங்களில் அளவோடு பலன் கிடைக்கும். சூரியன் 10ல் மற்றும் புதன் வக்கிர நிவர்த்தி என்பதால், குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும் அல்லது பங்குபெற சந்தர்ப்பம் உருவாகும்.

**கும்பம் :** சொல் திறமை, அறிவாற்றல், சாமர்த்தியம், பளிச்சிடும். சுதூகலத்துக்குக் குறைவில்லை. அதிர்ஷ்டம் அழைக்கும். உற்சாகம் ஊற்றெடுக்கும். குரு 5ல் உலவுவதாலும், 11ல் கேது உலவுவதாலும் மேற்கண்ட விஷயங்கள் சாத்தியமாகும். சிவப்பு நிறம் நன்மை தரும். மக்களால் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணை விஷயத்தில் கொஞ்சம் விழிப்பா இருங்க. தந்தை நலமும் பாதிக்கப்படலாம். குரு பார்வை சூரியனுக்கு இருப்பதால், எந்தப் பிரச்னை வந்தாலும், எளிதில் அகன்று விடும்.

**மீனம் :** மீனராசி நேயர்களுக்கும் நல்ல நேரம். 10ல் கேது, 11ல் செவ்வாய் சஞ்சாரம் என்பதால், எடுத்த காரியங்களில் வெற்றி... வெற்றி... வெற்றி! அதனால் புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடுங்கள். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், இராணுவம், பொறியியல் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள், பிறர் ஆச்சரியப்படும்படி சாதனை படைப்பார்கள். வியாபாரிகளுக்கு நல்ல ஆதாயம். கணவன் - மனைவியிடம் பாசம் பொங்கும். பெண்கள் நிலை உயரப் பெறுவார்கள்.



# சாந்தினி பார்

என் ஆர்ஜ காதலையும், பேமிலி டிராமாக்களையும் நம்பி, ரீல் சுத்திக் கொண்டிருக்கும் பாலிவுட்டிலிருந்துதான் இப்படியொரு படம்.

மும்பையில் இருக்கும் நூற்றுக்கணக்கான மது அருந்தும் பார்களில் நடனமாடி வயிற்றைக் கழுவும், அப்பாவிப் பெண்களின் நிஜவாழ்க்கையை உள்ளது உள்ளபடி பதிவு செய்திருக்கும் படம்.

இது ஏதோ டாகுமெண்டரியோ, கலைப் படமோ என்று அஞ்ச வேண்டிய அவசியமில்லை. சினிமாவை பிரேம் பை பிரேம் பிய்த்துப் பிய்த்து விமர்சிக்கிற செல்லுலாய்டு மேதாவியையும், ஐந்து ரூபாய் டிக்கெட்டில் ஆற்றுமணல் கொட்டப்பட்ட ஆஸ்பெஸ்ட்டாஸ் கிராமத்துத் தியேட்டரில் படம் பார்க்கிற பாமர ரசிகனையும் எளிதில் ஈர்த்துவிடும் ஒரு வெகுஜன சினிமா.

சாதிக்கலவரத்தில் பெற்றோரையும், வீட்டையும் தீயின் கோர நாக்குகளுக்குக் கொடுத்துவிட்டு உத்திரபிரதேச கிராமமொன்றிலிருந்து மும்பை வருகிறாள் இருபது வயது மும்தாஜ். வயிறும் வாழ்க்கையும் துரத்த 'சாந்தினி பாரி'ல் டான்சராக வேண்டிய நிர்ப்பந்தம். பாருக்கு வரும் உள்ளூர் தாதா 'போட்யா'வுக்கு மும்தாஜ் மீது மோகம். மிரட்டி, அவளைப் பலாத்காரம் செய்யும் தாதாவுக்கு அதிர்ச்சி. வழியும் விழிகளோடு எந்திரமாய் கிடக்கும் அவளிடம் காரணம் கேட்கிறான். மும்தாஜின் வியர்வையை உறிஞ்சி வாழும் மாமா, அவளின் கற்பை களவு கொண்டதையும், பாலியல் விற்பனை தன் மீது திணிக்கப்பட்டது என்பதையும் சொல்லிக் குமுறுகிறாள். கொதித்து எழும் போட்யா, அவள் முன்பாகவே மாமாவைக் கொன்று மும்தாஜ் கை பிடிக்கிறான்.

கள்ளிச் செடிகளின் நடுவே தும்பைப் பூக்களைப் போல மும்தாஜுக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கின்றன. மகளைத் தன்னைப் போல் பார் டான்சராகவும், மகனை கணவனைப் போல தாதாவாகவும் வளர்த்து விடக் கூடாது என்ற உறுதியோடு வாழ்க்கையைத் தொடங்கும், அவளின் கனவு நனவானதா? அதற்குச் சட்டமும், சமுதாயமும் இடம் கொடுத்ததா என்பதைப் 'பகீர்' பின்னணியில் யதார்த்தமாகச் சொல்லியிருக்கிறார் இயக்குனர்.

சாந்தினி பாரின் கதாநாயகி தபு. படம் முழுக்க இவரது தர்பார்தான். மும்தாஜின் கனவுகள், நம்பிக்கை, ஏமாற்றம், இழப்பு, எல்லாமும் நமக்கும் நிகழ்ந்து விட்டதைப் போன்று எண்ண வைக்கிறது அவரின் அபார நடிப்பு!

ஹேராம் படத்தில் அபயங்கர் பாத்திரத்தில் நடித்த அதுல்குல்கர்னிதான் தாதா பாத்திரத்தில் வந்து மிரட்டுகிறார். மனிதனாகி விடுகிற காட்சிகளில் ஜொலிக்கிறார்.

இடைவேளைக்குப் பிறகு அடிக்கடி நம்மைக் கலங்க வைத்துவிடும் இயக்குனர் 'மாதூர்பந்தர்' மசாலா இயக்குனர் ராம் கோபால்வர்மாவின் சிடர் என்பதை நம்ப முடியவில்லை (சேற்றிலிருந்து ஒரு செந்தாமரை!) உங்கள் ஊருக்கும் சாந்தினி பார் வரும்... சந்தியுங்கள், சிந்தியுங்கள்.

— விஷ்ணுவல்தாசன்

● டிஸ்டிங்ஷன்

# வட்டமேஜை




## அச்சாணியை முறிச்சா என்ன?

✉ 'புடைவைதான் எனக்குப் பிடிக்கும்' என்று மும்தாஜ் கூறியது கண்டு மலை மலை மலை மலைப்பில் ஆழ்ந்துவிட்டேன்!
அயன்புரம், த. சத்தியநாராயணன்.

✉ 'தேன் கூட்டில்' மதுரை அரவிந்தர் மருத்துவமனையில் தினம் ஓர் இலக்கியச் சொல் எழுதும் பெரியவர் பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். அவரைப் போலவே, மதுரையில் அரசரடியில் உள்ள வி.வி. ரெஸ்டாரண்டிலும் கல்கி வாசகர் வி. பரமசிவம் தினம் ஒரு பொன்மொழி எழுதி வைக்கிறார். அதனை எழுதுவதற்காகவே ஓட்டல் நிர்வாகம் இவருக்காக போர்டு செய்து வைத்துள்ளது.
திருநெல்வேலி, வீ. முத்தையா.

✉ 'குற்றாலத்தில் இடி இடித்தால் கோயம்புத்தூரில் விளக்கணையும்' என்றொரு சொல்வடை உண்டு. அதை நிரூபிப்பது போல் ஆப்கன், அமெரிக்கா போரினால் இந்தியப் பொருளாதாரத்திற்கு ஏற்படப் போகும் பின்னடைவுகளைப் படிக்கையில் மனது திக் திக் என்கிறது.
திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியம்

✉ நல்லவற்றைப் பாராட்டிய கையுடன் '12B' கதையில் ஹாலிவுட் படங்களின் தழுவலும் இருப்பதை இலைமறை காயாய்ச் சுட்டிக் காட்டிய உமது விமர்சகருக்குப் பாராட்டுக்கள்.
சென்னை – 26, சி. மகேஷ்.

✉ வெரி ஓல்டு 'கடி'களைப் உல்டா பண்ணி, 'அழகுத் திலகம்' சர்மிலியைக் காட்டி, பேட்டி என கவர் ஸ்டோரியில் வெறுப்பேத்துகிற சக்கரத்தின் 'அச்சாணி'யை முறிச்சா தப்பில்லைன்னு தோணுது.
திருவண்ணாமலை, எல்.எம். மங்கை.

✉ காஷ்மீரில் இயங்கும் பயங்கரவாதிகள் இந்தியாவுக்கு மட்டுமே எதிரிகள் அல்ல. அவர்கள் அமைதியின் எதிரிகள். உலக நலனின் எதிரிகள், மனித நேயத்தின், ஜனநாயகத்தின் எதிரிகள் என்பது தீர்க்கதரிசனமான வரிகள். உலகின் ஒட்டு மொத்த முஸ்லிம் சமுதாயத்தின் எதிரிகள் என்று கூறினால்கூட மிகையாகாது.
திருச்சி–4, எச். கௌஸ் பேக்.


✉ 'நானும் சில பேய்களும்' படித்தேன். 'கிறிஸ்டியன் சாத்தான் வந்துவிட்டால் திருநீறு காப்பாற்றுமா? சாமிலதான் மதம்னா, பிசாசுகள்லயும் மதமா" என்ற வார்த்தைகள் அருமை. சாதாரணமாய் இருந்தாலும் காலத்திற்கு ஏற்ற பொன்னெழுத்து வார்த்தைகள்.
விளக்குடி, வெ. அம்சதீபா.

✉ "கசப்பு இல்லை; எதிர்ப்பு உண்டு; நட்பும் உண்டு... போட்டியும் உண்டு... ஆஹா... வாக்காளர்களைக் குழப்புவதோடு வாசகர்களையும் குழப்பிவிட்டார் திருமாவளவன்!"
திருவானைக்காவல், எஸ். கௌரிலஷ்மி.

✉ 'உயிர் கொடுத்த தாலி' கட்டுரை படித்த பொழுது,
"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"
குறள்தான் ஞாபகம் வந்தது.
மதுரை, என். பாலகிருஷ்ணன்.

✉ 'யார் குற்றவாளி' சிறுகதை கற்பனை அல்ல. இன்றைய உலகின் நிஜம்.
விழுப்புரம், ஜி. ப்ரணவ்.


# ஹைக்கூவுக்கு கோனார் நோட்ஸ்




• கெட்டப் ஓ.கே!

சூப்பர் மார்க்கெட்டுக்கு வர்ற புக்ஸைப் பார்க்கறப்போ ஆச்சர்யமா இருக்கு... எப்படி இத்தனையும் விற்கும்? யார் வாங்குவாங்க? எந்த தைரியத்துல பதிப்பிக்கறாங்க...? நாட்டுல டீ.வி. பார்க்கறவங்களோட எண்ணிக்கையும் அதுக்காக அவங்க செலவிடற நேரமும் அதிகமாயிட்டு வருதுன்றப்போ இப்படி தீபாவளிக்கு முறுக்கு சுடற மாதிரி புக்ஸ் உற்பத்திப் பண்ணி என்ன பிரயோஜனம்...? தெரியலை...!

பட் ஒரு ட்ரெண்ட் நல்லா தெரியுது. புக்கோட கெட்அப் பார்க்கறதுக்கு டிஃபரன்டா இருக்கணும்னு ரொம்பவே எல்லாரும் மெனக்கெடறாங்க. உள்ளடக்கம்...? ம்ஹூம், மூச்!



• செந்தில்

ரீசன்ட்டா வந்திருக்கற வஸந்த் செந்திலோட 'மழையும் நீயும்' கவிதை தொகுப்பைப் (இலக்குமி நிலையம், 53, சௌடியா மடம் சாலை, சென்னை - 14, விலை ரூ. 30) பார்ப்போம்.


மேலட்டையில் ஆண் ஜீன்ஸ் ஜாக்கெட்டோட ஒரு பகுதியின் குளோஸ்அப் படம். அதிலே பட்டன் ஹோல்ல மஞ்சள், வெள்ளைப் பூக்கள் - அட்ராக்டிவ்! உள்ளே புரட்டினா, லெஃப்ட் ஸைட் ஃபுல் பேஜ் பஞ்சாங்க ஸ்டைல்ல தலைப்பு. எல்லா தலைப்புமே ஒன் ஆர் டு வர்ட்ஸ்தான்றதால ராக்ஷஸ எழுத்தால் பக்கத்தை நிரப்பியிருக்காங்க. எதிர்ப் பக்கத்துல கவிதை ஆரம்பிச்சுத் தொடர்ந்து போகுது.

கவிதைகளிலேயும் சரி, கடைசியில் வஸந்த் செந்தில் எழுதியிருக்கிற 'தமிழ்க் கவிதையும் தமிழில் கவிதையும்'ன்ற கட்டுரையிலேயும் சரி... பிரமாதமான அச்சுப் பிழைகள். பிழைன்னா சாமானியமான பிழையில்லை.... பிழை மழை!


நல்ல கவிதைகளும் சில இருக்கு. (மலை, குருவி மனம்) சில சுமார். (தேடல், பிடி மண்) வேறு சில ஓஹோ, கவிதையா?'ன்னு கேட்கிற மாதிரி இருக்கு (நான் என், எழுத்து, தருணம்). டாக்டர் சில சமயங்கள்ல ரொம்ப கிளினிகலா ஆயிடறாரோன்னு தோணுது.

'நீயும் டாக்டராகி கவிதை எழுதினயானா தெரியும் சுமி'ன்னு மடக்கினீங்கன்னா ஐ கிவ் அப்!

நெக்ஸ்ட் ஆன் தி லிஸ்ட், தொலைக்காட்சிப் புகழ், ஐ.ஏ.எஸ். புகழ் இறையன்புவோட 'முகத்தில் தெளிக்கும் சாரல்' (தாகம், G 3/8, மாசிலாமணி தெரு, தி. நகர்,



• சொன்னதைச் செய்தவர்



**சுமி சூப்பர் மார்க்கெட்**

சென்னை – 17. விலை ரூ. 45 டைட்டில் பிரமாதம். அட்டைப் படம் குளிர்ச்சியாயிருக்கு. பட் புத்தகம் முழுக்க ஹைக்கூவுக்குக் கோனார் நோட்ஸ் போட்ட மாதிரி உரை எழுதியிருக்கார். புத்தகத்தைப் புரட்டும்போது ஏற்படற சந்தோஷம், படிக்கும்போது ஏற்பட மாட்டேங்குது.

ஹைக்கூவுக்கு இப்படி வியாக்யானம் ஒருத்தர் எழுத, அதைப் படிக்கறதுன்றது... கவிதையோட ஸ்பிரிட்டைக் கொன்னுபோட்டுடுது.




• ஹைக்கூ பாஷ்யம்!



• இறையன்பு

உதாரணமா,

"அசுத்தம்
சோறு போடும்
துப்புரவுத்
தொழிலாளி"

இந்தத் தமிழ் ஹைக்கூவுக்கு இப்படி விளக்கம் தர ஆரம்பிக்கிறார் இறையன்பு.

'ஹைக்கூ என்பது
விடுகதையல்ல–
சிலேடையுமில்லை.
ஹைக்கூ என்பது
புனைவு இலக்கியமல்ல –
அது உணர்வு இலக்கியம்'

அழகான டெஃபனிஷன். அப்புறம் அசுத்தம்னா என்ன, சுத்தம்னா என்னன்னு விஞ்ஞான, மெய்ஞான விளக்கங்களெல்லாம் தந்து ஒரு வழியாக பாயிண்டுக்கு வர்றார்:

துப்புரவுத் தொழிலாளி
சுத்தம்செய்யும்போது
சோறு அவனுக்கு
மட்டுமல்ல
அனைவருக்கும்
கிடைக்கிறது.

இந்த விளக்கம் ஒரு ஆவரெஜ் ரீடர் தானாகவே யோசிச்சு அடையக்கூடியதுதானே. எதுக்கு இப்படி பாஷ்யம் எழுதணும்...? சில ஹைகூக்கள் முழுவதுமாக விளங்காமல் போனால்தான் என்ன... இவ்வளவு போஸ்ட் மார்டம் தேவையா...? இறையன்பு சார் காலேஜ் லெக்சரரா ஆகணும்னு ஆசைப்பட்டு, நிர்ப்பந்தத்துல ஐ.ஏ.எஸ். ஆகி விட்டாரோன்னு நினைக்கத் தோணுது. அவர் இரண்டு வரி பதில் சொன்னா இந்த காலம்ல வெளியிடறேன். இரண்டு பக்கத்துக்குத்தான் பதில் சொல்வேன்னு அடம் புடிச்சாலும் பரவால்லை; இந்த காலமை ஒரு வாரம் அவருக்காக விட்டுக் கொடுத்துடறேன்!

ஓ.கே! கொஞ்சம் நல்ல நியூஸ் கேட்கறீங்களா...? சில வாரம் முன்னால செப்டெம்பர் 9 நடந்த கல்கி பிறந்தநாள் விழா பத்தின ரிப்போர்ட் கல்கில வந்ததைப் படிச்சிருப்பீங்க.... விழாவில் மிஸஸ் ஒய்.ஜி.பி. செஞ்ச ஓர் அறிவிப்பையும் படிச்சிருப்பீங்க...

'தமிழை ஐந்தாம் வகுப்பு வரை கட்டாயப்பாடமாக்குவேன்'னு சபதம் பண்ணிருந்தாங்க.

(கல்கி தொடர்பான விழான்னாலே மேடையில ஏதாச்சும் சபதம் கிபதம்னு சென்சேஷனாயிடுது, போங்க!)

இப்போ சபதத்தை நிறைவேத்தியாச்சு! விஜயதசமி தொடங்கி, மிஸஸ் ஒய்.ஜி.பி.யோட பி.எஸ்.பி.பி. ஸ்கூல்ஸ்ல அஞ்சு கிளாஸ் வரைக்கும் தமிழ் கம்பல்ஸரி!

எல்லா குழந்தைங்களும் சுமி மாதிரி மணிப்பிரவாளத்திலே புரளாம நல்ல தமிழ் எழுதி, பேசி, உயர்ந்து, சிறந்து ஓங்க அன்புடன் வாழ்த்தும்...

— சுமி!

# INSTITUTE FOR PSYCHOTHERAPY & MANAGEMENT SCIENCES

*67, Hemm Villa, 2nd Flr., Jawahar Nagar, Near Rly. Station, Goregaon (W), Mumbai - 400 062. • ☎ : 879 0890 / 891*
*E-mail : ipms@mantraonline.com*

## அஞ்சல் வழி கல்வி சேர்க்கை அறிவிப்பு

- **எம்.எஸ்.** (ஆங்கிலம் / தமிழ்)
  (உளநல சிகிச்சை & ஆற்றுப்படுத்துதல்)
  *M.S. (Psychotheraphy & Counselling)* .... 2 வருடம்
- **பி.ஜி.டி.பி.சி.** (ஆங்கிலம் / தமிழ்)
  *P.G. Diploma in Psychological Counselling* .... 1 வருடம்
- **பி.ஜி.டி.சி.சி.** (ஆங்கிலம் / தமிழ்)
  *P.G. Diploma in Career Counselling* .... 1 வருடம்
- **எம்.பி.ஏ.** (ஆங்கிலம் மட்டும்)
  *M.B.A. (Master of Business Administration)* .... 2 வருடம்

**தகுதி : பட்டப்படிப்பு**

விளக்கவுரை மற்றும் விண்ணப்பப்படிவம் ரூ. 50 நேரில் அல்லது M.O. / D.D. மூலம் செலுத்தி பெறலாம்.

**• சிறப்பு அம்சங்கள் •**

- இந்தியாவிலேயே எம்.எஸ். அளவில் உளநல சிகிச்சை பயிற்சி அளிக்கும் மிகச்சிறந்த கல்வி நிலையம்.
- பட்ட மேற்படிப்பு பயிலுவோரும் அனுமதிக்கப்படுவர்.
- கல்விச் சான்றிதழ்களின் ஜெராக்ஸ் பிரதிகளை மாத்திரம் சேர்க்கைக்கு இணைத்தால் போதுமானது.
- எமது கல்வி நிறுவனம் திறந்த நிலை பன்னாட்டு பல்கலைக்கழகத்தினரால் அங்கீகரிக்கப்பட்டது.
- திறமை வாய்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட பாடத் தொகுப்புகள் வழங்கப்படுகிறது.

***For Spot Admission Contact :***

**Mrs. UMA JAYRAMAN :**
36, Ayyapan Street, Vijaya Laxmi Puram, Ambattur, CHENNAI - 600 053 • Tel. : 044 - 6571479

**Mr. M. NAGESWARAN :**
P. No. 28, Meenakshi Hospital, Krishna Nagar, MADURAI - 625 014.
Tel. : 0452 - 681777 / 681920 • Mobile : 09842181818

**Mrs. K. REVATHI :**
172, Neghru Street, Ramnagar, COIMBATORE - 641 009
Tel. : 04122 - 234663

**Mr. DEVRAJ MICHAEL :**
4/467, Mehala Bhavan, 20th Street, Shanthi Nagar, PALAYAMKOTTAI - 627 002.
Tel. : 0462 - 540208 • Mobile : 98430 77420

**Mrs. SHAKUNTALA SENGUPTA :**
23/J, Bade Raipur Road, Near Shaktigarth Play Ground, Jadavpur, KOLKATA - 700 032.
Tel. : 033 - 4140781 / 4141689 • Mobile : 09831006207

# MANTRALAYAM - SHIRDI DARSHAN



Darshan Trips Arranged



## CHENNAI - MANTRALAYAM- SHIRDI - CHENNAI

***In November & December 2001 every week.***

***Four days trip Rs.2,400/- fare inclusives food & accomodation.***

CONTACT :
BALA GOPAL, **044 - 4892258**

***Starts every Wednesday night & returns on Sunday evening (4 days)***



# "கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில் விளம்பரம் செய்ய ரூ.1250/- மட்டுமே. செய்து பயனடைவீர்!

**47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை – 97.**
**போன்: 2345622, 2345623**

# பை! பை! பைபை!

மாதுரி

ரயில் காற்றைக் கிழித்துக்கொண்டிருந்தது. த்ரீ டயர் கம்பார்ட்மெண்டில், ஜன்னல் அருகே உள்ள கொக்கியில் தொங்கியபடி அந்த 'அழுக்குப் பை' வண்டி சொன்னபடியெல்லாம் டான்ஸ் ஆடிக்கொண்டே வந்தது.

முதலில் அதைக் கவனித்தவர் கார்னர் சீட் கோபால்சாமி. அரசாங்கத்தில் இன்டர்னல் ஆடிட்டராக ஓய்வு பெற்றவர். திடீரென பை எப்படி முளைத்தது? யாருடையது? பிரயாணிகளைப் பார்த்தார். பதற்றம் காட்டாமல் "கிஸ்கா பேக் ஹை ஏ?"

"உங்க பையா?" என்று நிதானமாக அக்கம் பக்கம் வினவி முடித்தபோது அது அநாதை பை எனத் தெரிந்தது. 'திக்'கென கிலி அவருக்குள்.

தாம்பரம் செங்கல்பட்டுத் தடமென்றால் இதுபோன்ற அநாதை பைகளுக்கு அஞ்சத் தேவையில்லை. ஆனால், ரயில் ஓடுவதோ, நாளொரு பாமும் பொழுது நூறு சாவுமாக நடக்கும், இந்தியாவின் வடகிழக்கு மார்க்கத்தில். அசட்டையாகப் பரலோகம் போய் விடுவதா? பைக்குள் ஏதோ உருண்டையாக இருப்பது தெரிந்தது. இலேசான டிக்டிக் சப்தமும் அவருக்குக் கேட்டது. நிச்சயமாக இது விவகாரமான பை என்ற முடிவுக்கு வந்தார்.

யார் இதை இங்கே வைத்திருக்க முடியும்?

அதற்குள் அவர் மனைவி, "இங்க ஒரு வயசானவர் தாடி வைச்சிண்டு, சீட் கிடைக்காம, ஒட்டி ஒட்டி உட்கார்ந்திருந்தாரே அவரை ரொம்ப நேரமா காணோமே?"

"கரெக்ட்! கிழவன் எங்க போனான்?" தன் வயதை மறந்து படபடத்தார். வெடிகுண்டை வைச்சிட்டு நைசா நழுவிட்டானா? யாரையும் நம்ப முடியாதே! தீவிரவாதி என்ன சினிமாவுல வர்ற மாதிரி கறுப்பு கர்ச்சீப் தலையில கட்டிட்டா வருவான்? மளமளவென்று சந்தேக அலை அவர் மனத்தில் புரண்டு பரூ கூட்டியது.

"ஓ பக்கா ஹை! இஸ் மே குச் ஹை!" என்று அவர் பிரஸ்தாபித்ததும் பாதி கம்பார்ட்மெண்டிற்கு வியர்த்தது. பரபரப்பு ஆட்கொள்ள ஆளுக்கொரு மூலையாக பையின் DNA ஆராய்ச்சியில் இறங்கினர்.

"சார் பேசாம பையைத் தூக்கி டாய்லெட்ல வைச்சிடுவோம்!" ஓர் இளசு ஐடியா கொடுத்தது.

"டாய்லெட்டில வைச்சு, தண்ணி போட்டு அணைச்சிடலாமா? என்னய்யா பேசற நீ. இது வெடிகுண்டு; தீபாவளி பட்டாசில்ல!" பொறித்தார் கோபால்சாமி, "நீயெல்லாம் எங்க வேலை செய்யறியோ?"

"லைஃப் இன்சூரன்ஸ்... சார்!"

"அபசகுனம் அபசகுனம்! வாயை மூடு முதல்ல!" முடிக்கும் முன் தன் பாலிசியில் மனைவியை நாமினியாகப் போட்டிருப்பது நினைவுக்கு வர, இந்த விபத்தில் இருவரும் போய்ச்சேர்ந்துவிட்டால், பிள்ளைகள் இன்சூரன்ஸ் பணம் வாங்குவதற்குள் தாவு தீர்ந்திடுமே என்று புதுப் பெருங்கவலை அவரைப் பிடித்துக்கொண்டது.

"கட்லெட்! கரம் கட்லெட்!" தேவாவின் குரலில்.

"ஏன்னா உங்களுக்குப் பிடிச்ச கட்லெட்..."



"உனக்கு அறிவிருக்கா? கொஞ்ச நேரத்தில் எல்லோருமே கட்லெட் போல திஞ்சிடப் போறோமேன்னு அலறிண்டிருக்கேன்... இப்ப கட்லெட் ஒரு கேடா? இந்தப் பையை ஒழிச் சுக்கட்டற வரை வேற பேச்சே கிடையாது! உங்களுக்குச் சீரியஸ்னஸ் தெரியலே, தினம் பேப்பர் படிச்சாதானே?"

கோபால்சாமியின் டென்ஷனைப் பக்கத்தி லிருந்த நடுத்தர வயது வாலிபனால் தாங்க முடியவில்லை. அவன் தைரியசாலி போல் தெரிந்தான். "சாப், பயப்படாதீங்க! நான் அந்த ஓல்ட்மேனை, ரயில்லே, எங்க இருந்தாலும் தேடிப் பிடிச்சு, கொண்டு வர்றேன். இல்ல இந்தப் பையைத் தூக்கி வெளியே வீசிடறேன்" என்று அதைத் தொட்டான்.

"நோ... நோ... நோ... தொடாதே! தொடாதே! நீ நூறு வயசு வாழணும். அந்தக் கிழவனை தேடிக் கொண்டு வா..."

சொன்னபடி சிறிது நேரத்தில் தாடிக் கிழவனோடு வந்தான் வாலிபன்.

"மாஃப் கர்தோஜி! 52ல சீட் கிடைச்சது. மறந்து போய் உட்கார்ந்திட்டேன்." தாடிக் குள் அசடு வழிந்தது. அவர் சொன்னதும் அனைவரும் அவர்மீது பாய்ந்தனர்.

"நல்லா மறந்தே! உன்னால இந்தப் பெரிய வருக்கு ஹார்ட் அட்டாக்கே வந்திருக்கும்."

அவரவர் மிரட்டித் தள்ள, கிழவர் பையோடு மெதுவாக நகர்ந்தார்.

வாலிபனுக்குக் கோபால்சாமி கை கொடுத்தார்.

"நாற்பது வருஷம் ஆடிட் வேலை. கண் அலை பாய்ஞ்சிண்டேயிருக்கு. எல்லாத்தையும் சந்தேகக் கண், காதோட பார்க்க வைச் சிடுத்து." மனைவி பக்கம் திரும்பி, "இவளைத் தவிர!" என்று கிண்டலாக முடித்தார்.

எல்லோர் சிரிப்புக்கும் இடையே வாலி பன், "சார் இது என் பை. இங்க மாட்டிட்டு, சாப்பிட பேன்ட்ரி (கான்டீன்) வரை போக எனக்குப் பர்மிஷன் உண்டா?" என்றதும் கொல்லென்று மீண்டும் சிரிப்பலை...

புயல் அடித்து ஓய்ந்தது போலிருந்து... வாலிபன் பேன்ட்ரி நோக்கி நடந்தான். கோபால்சாமியும் மனைவியும் சௌகரிய மாகக் கால்களை மடக்கி அமர்ந்துகொண் டார்கள்.

இம்முறை மாட்டிய பைக்குள்ளிருந்து வந்த மெலிதான 'டிக் டிக்' சப்தம். இன்டர்னல் ஆடிட்டர் காதுகளுக்குக் கேட்டிருக்க வாய்ப் பில்லை. ○

# புதுவை காமராஜ்!

**கா**ங்கிரஸ்காரர்களின் 'கண்ணியம்' புதுவையில் பளிச்சிட்டிருக்கிறது. எந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களும் அவருக்காக தொகுதியைக் காலி செய்யாத நிலையில் கண்ணீர் விட்டபடி முதல்வர் பதவியை ராஜினாமா செய்திருக்கிறார் சண்முகம். புதிய முதல்வராக ரங்கசாமி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.



காங்கிரஸ் தொண்டர்களால் 'காமராஜ்' என்று பாசத்துடன் அழைக்கப்படுபவர் ரங்கசாமி. முழங்கை வரை நீளும் கதர் சட்டை, காமராஜரைப் போலவே உயரம், அதே எளிமை.

இரண்டு முறை அமைச்சராக இருந்திருக்கிறார். எந்தச் சர்ச்சையிலும் சிக்காதவர். அதன் காரணமாக சர்வ கட்சியினராலும் விரும்பப் படுபவர். ஏழைகளுக்கு இல்வசமாக வாதாடும் வழக்கறிஞர்.

வன்னியரான ரங்கசாமியைத் தேர்ந்தெடுத்தன் மூலம் பாண்டியில் பரவலாக உள்ள அந்தச் சமுதாயத்தினரின் ஆதரவு காங்கிரஸுக்குக் கிடைக்கும் என்று நம்புகிறது காங்.

சென்ற முறையே அவர் முதல்வராகியிருக்க வேண்டும். காங்கிரஸ் மேலிடம் அவரது பெயரை ஒரு கவரில் போட்டு அனுப்பியும் சிலர் செய்த சதியின் காரணமாக அவரால் முதல்வராக முடியாமல் போனது. 'சூழ்ச்சிகளே' மூலதனமாக உள்ள புதுவை அரசியலில் ரங்கசாமிக்குச் சவால்கள் நிறையவே இருக்கின்றன.

**- ப்ரியன்**

வாங்கிவிட்டீர்களா...?

இந்த இதழ்...

தேவியர் ஸ்பெஷல்!

ஓம் சரவணபவ

மாதமிருமுறை வெளிவரும்
ஒரே பக்தி பத்திரிகை!



இலவசம்!
சரஸ்வதி
தனலட்சுமி
இணைந்த
புதுமையான
கீ-செயின்

கூடல்நாயகி
ஸ்ரீமீனாட்சி
அம்மன்
-வண்ணப்படம்

மேலும் பரவசமூட்டும் ஏராளமான
பக்திச் செய்திகள்!

கௌசல்யை ஸ்ரீ ராமனை அனுபவித்தாள் என்று சொன்னேன். யசோதையைப் பற்றிய ஒரு கதையை ஞாபகப் படுத்திப் பாருங்கள்...

குழந்தை கிருஷ்ணனின் காதைக் கெட்டியாகப் பிடித்துத் திருகுகிறாள் யசோதை!

மகான்களெல்லாம் இந்தச் சம்பவத்தைக் கேட்டு அழ ஆரம்பித்துவிடுவார்கள்! "என்ன அக்கிரமம்!" என்று கேட்கிறார்கள். 'ஆய்ச்சி கையாலே காதைத் திருகும்படியாகத் தன்னைத் தாழ இட்டுக் கொண்டானே சர்வலோக சரண்யன்' என்கிறார்கள்.

பரமாத்மா, சர்வ நியந்தா! அவன் காதைப் பிடித்துத் திருகி இழுத்துக் கொண்டு வருகிறாள் யசோதை.

"என்ன உபத்திரவம் பண்ணுகிறாய் நீ! இப்போது எங்கே போய்விடுவாய் என்று பார்க்கிறேன்!" என்று தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்து உரலில் கொண்டு போய்க் கட்டுவதற்காக நிறுத்துகிறாள். நிறுத்தியவள், கட்டுவதற்குக் கயிறு கொண்டுவரவில்லை. அவசரம்! குழந்தையைப் பார்த்து ஒரு மிரட்டு மிரட்டுகிறாள்!

"இங்கேயிருந்து நகர்ந்து போனாயானால், தெரியும்! ஜாக்கிரதை!"

மாதம் வரை நம்மாழ்வாரை எழுந்துகொள்ள விடாமல் பண்ணியது இந்த சரித்திரம்!

இப்படியாக மகான்களின் ஹ்ருதயம் துடிக்கிறது. கண்ணன் உரலிலே கட்டுண்ட விருத்தாந்தத்தைக் கேட்டு...!

யசோதையால் கட்டுண்ட குழந்தை என்ன பண்ணுகிறது...? இரண்டு கையாலும் தலையில் தலையில் அடித்துக் கொள்கிறது. கையை யசோதை கட்டி வைத்திருந்தாலும் முன்கை மட்டும் நகர்த்தும்படியாய் இருக்கிறது. அம்மாவைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொள்கிறது குழந்தை.

# குறையொன்றுமில்லை

அந்தக் குழந்தை கட்டுப்படுகிறது! கயிறைக் கொண்டு வருவதற்குத தைரியமாகப் போகிறாள் யசோதை.

கயிறைக் கொண்டு வந்து சுற்றிக் கட்டினால், முடிச்சுப் போட வரவில்லை. சரியாக அரை அங்குலம் கயிறு குறைவாய் இருக்கிறது.

மறுபடியும் 'இரு...' என்று சொல்லிவிட்டுப் போய் இன்னொரு கயிறைக் கொண்டு வருகிறாள். மறுபடியும் கட்டினால் மறுபடியும் அரை அங்குலம் நீளம் குறைவாயிருக்கிறது.

யசோதை வியர்வை வழிய வழிய படுகிற அவஸ்தையை அந்தக் குழந்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

மறுபடியும் 'இரு' என்று சொல்லிவிட்டுக் கயிறு தேடுகிறாள்! ஆயர்பாடிப் பெண்களின் கழுத்தில் இருந்த மங்கள சூத்ரம் தவிர அத்தனைக் கயிறும் கண்ணன் கையிலே சுற்றுவதற்கே சரியாய்ப் போய்விட்டதாம்!

கடைசியில், யசோதை தன்னை கட்டட்டும் என்று அனுமதித்து நின்றானாம் கண்ணன்.

இந்த அனுபவத்தை மதுரகவியாழ்வார் பாடியிருக்கிறார். நம்மாழ்வாரோ, பகவானின் எளிமை, சௌலப்யம் எத்திறம்! என்று மூர்ச்சையாகியே விழுந்துவிட்டார். விழுந்தால் மூர்ச்சை தெளிய ஆறு மாத காலம் ஆகிறதாம்! எழுந்தபின் மறுபடியும் மூர்ச்சையாகிவிடுகிறார். மறுபடியும் ஆறு மாத காலம்... இப்படியே பதினெட்டு

அம்மா என்ன பண்ணுகிறாள்...? இங்கே இருக்கிற பசுவை அங்கே கட்டுகிறாள். சாணத்தையெல்லாம் வழித்து வாரிக் கொண்டுபோய் அங்கே போடுகிறாள். அங்கே இருக்கிற புல்லை எல்லாம் எடுத்துக் கொண்டு வந்து இங்கே போடுகிறாள்! பால் பாத்திரத்தையெல்லாம் தேய்க்கிறாள்.

அங்கேயிருந்து குழந்தை அம்மாவைப் பார்த்துத் தலையில் தலையில் போட்டுக் கொள்கிறது.

கிட்டே வந்து "எதற்குத் தலையில் அடித்துக் கொள்கிறாய்" என்று கேட்கிறாள்.

"என்ன அக்கிரமம்! நீ

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

# 35



பண்ணுகிற காரியம் நன்றாயிருக்கிறதா! நான் சர்வலோக சரண்யன்; சர்வ பூதாத்மா, அந்தராத்மா... உனக்கு இந்தக் காரியமெல்லாம் விட வேண்டும் என்பதற்காகத்தானே இங்கே வந்து பிறந்திருக்கிறேன். உனக்கு விசேஷ அனுபவம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தானே நான் இங்கே இருக்கிறேன். அப்படிப்பட்ட என்னைக் கொஞ்சுவதை விட்டு விட்டு, என்னைப் பிடித்துக் கட்டியிருக்கிறாயே! இது என்ன காரியம்!" என்று அம்மாவைப் பார்த்துச் சொல்கிறது அந்தக் குழந்தை!

பிரும்மத்தைப் பிடித்து உள்ளே கட்டி விட்டால் நமக்கும் இங்கே லௌகிக காரியம்தான் ஓடிக்கொண்டிருக்கும். இதையெல்லாம் விட்டால்தான் நம்மால் **அவனைப்** பிடித்துக் கொள்ள முடியும்.

அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டால் இது மொத்தமும் தானாக நழுவும்! 'தூங்குபவர் கைப்பண்டம் போலே!' என்று சுவாமி தேசிகன் மிக அழகாய்ச் சொல்கிறார். தூங்குபவர் கையிலே இருக்கிற பண்டம், அவரிடம் 'விழப் போகிறேன் விழப்போகிறேன்' என்று சொல்லிவிட்டா விழும்! தானாக அல்லவா விழும்.

அந்த மாதிரிதான், பகவத் விஷயத்திலே ஈடுபட்டால், நாம் கெட்டியாகப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறோமே இந்த பந்தங்கள்... அவை மொத்தம் கீழே விழும். ஆனால் இதையெல்லாம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தோமானால் அவன் போய்விடுவான்!

ஆகையினாலேதான் சுமித்ரை தன் பிள்ளை லக்ஷ்மணனிடம் அழகாகச் சொன்னாள்:

"அப்பா குழந்தாய்! ராமனுக்குச் சதா காலம் கைங்கர்யம் பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறாய். கைங்கர்யம் பண்ணும்படியான நீ, ராமனை ஏற - இறங்கப் பார்த்துக் கொண்டிராதே!"

ஏன் ஏற இறங்கப் பார்க்கக் கூடாது?... அப்படிப் பார்க்க ஆரம்பித்தால் கைங்கர்யம் சித்திக்காது! அவன் பகவான் என்பதை மறந்துதான் அவன் திருவடியிலே கைங்கர்யம் பண்ண முடியும்!

கோயிலில் அர்ச்சகர்கள் இருக்கிறார்கள்... அவர்கள் பகவானைப் பார்த்துக் கண்ணால் ஜலம் விட்டுக் கொண்டேயிருந்தால் எல்லோரும் தேங்காய், வெற்றிலை பாக்கை வைத்துக் கொண்டு நின்று கொண்டேயிருக்க வேண்டியதுதான்! அதுபோல்தான் லக்ஷ்மணனும் கைங்கர்யத்தில் ஈடுபடுவதற்காக அவனை மறக்க வேண்டும் என்றாள் சுமித்ரை!

அப்படிப்பட்ட ராமனைத்தான் விச்வாமித்ரர் 'கௌசல்யா சுப்ரஜா' என்று துயிலெழுப்பினார்.

**ப**கவானை ஸ்மரிக்க வேண்டும்; பகவான் நாமாவைச் சொல்ல வேண்டும் என்று கருட புராணம் வெகு அழகாகச் சொல்கிறது.

அப்படி ஸ்மரிப்பவர்களுக்கு என்ன கிடைக்கும் என்பதையும் சொல்கிறது. அதை ஆசார்யார்களும் வியாக்யானமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் பெரும் பிரயாணம் போய்க் கொண்டிருக்கிறோம். திருவள்ளூர் போக வேண்டும் என்று நினைத்துப் போய் விட்டு வந்துவிட்டோமானால் ஒரு பிரயாணம் முடிந்து விடுகிறது. அந்த கைய பிரயாணம் இல்லை இந்தப் பிரயாணம் - இது நித்ய பிரயாணம் - வந்து கொண்டேயிருக்கிற பெரிய்ய்ய பிரயாணம்.

**அ**ந்த காலத்தில் பிரயாணமென்றால் நடந்தே போவார்கள். நடைபலம் அதிகமாயிருந்தது அவர்களுக்கு. இப்போது நாம் பிரத்யேகமாக நடக்க வேண்டியிருக்கிறது! அந்தக் காலத்து நடைப் பிரயாணங்களின்போது வழியிலே குளம் வரும். அதன் கரையிலே மரம் இருக்கும். அங்கே இளைப்பாறி சாப்பிட்டுவிட்டு ஸ்வஸ்தானத்தை அடைவார்கள். கட்டுச் சாதம் என்பதாக புளியோதரை, தொத்தியோன்னம், மோர்க்களி என்று ஏதாவது எடுத்துக் கொண்டு போவார்கள்.

## அருள்வாக்கு

**அ**ஸுரன் என்று வெளியில் யாருமில்லாமல் ஸர்வ ஜனங்களுக்குள்ளேயும் புகுந்து கொண்டிருக்கும் போது எப்படி ஸம்ஹரிப்பது? விச்வாமித்ரருக்கு யாகம் செய்யணுமென்று தர்மமான எண்ணம் இருந்தது. அஸுரர் என்று வெளியிலே இருந்த சிலர் இடைஞ்சல் பண்ணினார்கள். ராமர் போய் அவர்களை வதைத்து – துஷ்க்ருத்களை விநாசம் செய்து – யக்ஞ ரக்ஷணமும் ஸாது பரித்ராணமும் பண்ணினார். கலியில் விச்வாமித்ரர் இருந்தால் அவருடைய மூளைக்குள்ளேயே அஸுரன் போய்,



முதலுக்கே அவருக்கு யாகம் செய்யத் தோன்றியிருக்காது! இப்படி தர்ம கார்யங்கள் அரூபமான துஷ்ட சக்திகளால் நின்று போய்விடுகிற ஸமயத்தில் ஒரு அவதாரத்தைக் கொண்டு துஷ்ட சிக்ஷணம், சிஷ்ட ரக்ஷணம், தர்மோத்தரணம் ஆகியவற்றைச் செய்வதென்றால் எப்படி?

நம்மாலானால் இதற்கு ஸொல்யூஷன் கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கும். பரமாத்மாவானதால் ஸுலபமாகக் கண்டுபிடித்துவிட்டார்! "கலிகால அவதாரங்களில் துஷ்ட ஜனங்களை ஸம்ஹரிப்பதில்லை. ஜனங்களுக்குள்ளே புகுந்து கொண்டிருக்கும் துஷ்டத்தனத்தையே ஸம்ஹரிக்க வேண்டும். இப்படிப் பண்ணி ஜனங்களை நல்லவர்களாக்கிவிட வேண்டும். 'விநாசாய சதுஷ்க்ருதாம்' 'கெட்டகார்யம் செய்பவர்களுடைய அழிவின் பொருட்டு' என்பதற்கு ஒரு அமென்ட்மென்ட் போட்டுவிட்டால் போதும். 'துஷ்க்ருதாம்' (கெட்டகார்யம் செய்பவர்களுடைய) என்பதை 'துஷ்க்ருத்யானாம்' (கெட்டகார்யங்களுடைய) என்று 'அமென்ட்' செய்துவிட்டால் போதும்" என்று பரமாத்மா ஸொல்யூஷன் கண்டுபிடித்துவிட்டார்!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஒரு பிரயாணத்தில் களைப்பில்லாமல் போய்ச் சேருவதற்காகக் கட்டுச்சாதம் கூட வருகிற மாதிரி.... நாம் ஈடுபட்டிருக்கிற பெரிய்ய.... முடிவில்லாத இந்தப் பிரயாணத்தில் நாம் களைப்பில்லாமல் இருக்க வேண்டுமானால் புண்டரீகாக்ஷனுடைய நாம சங்கீர்த்தனம் என்கிற கட்டுச்சாதம் நமக்கு வாழ்வளிக்கும். இல்லையானால் கஷ்டம். இந்தப் பிரயாணமே சிரமமாகும்.

'சிரமமில்லாத பிரயாணம் பண்ணுவதற்குக் கட்டுச்சாதம் போலே....' என்று கருடபுராணம் சொல்கிறதே, அதே கருட புராணம் எட்டு விதமான பக்தியைச் சொல்கிறது.

இந்த எட்டு விதமான பக்தியிலே ஏதாவது ஒன்று ஏற்பட்டாலும், எல்லாம் ஏற்பட்டாலும் அவன்தான் முனி, அவன்தான் மஹரிஷி, வித்வான், அவன்தான் ஸ்ரீமான், அவன்தான் யதீச்வரன் என்று கருடபுராணமானது கொண்டாடுகிறது.

எட்டிலே முதல்: **பக்தஜன வாத்ஸல்யம்**

'என்னுடைய பக்தாளிடம் வாத்ஸல்யமாக இருக்க வேண்டும்' – இது பகவானுடைய வாக்கு. 'பகவானுவாச' என்று கருட புராணத்திலே பகவானே சொல்கிறான்.

பிரஹலாதன் சொல்கிறான் விஷ்ணு புராணத்தில். – "ஒருத்தரை ஒருத்தர் துவேஷிக்க இடம் ஏது? மற்றவர்களைப் பரிகாசம் பண்ணலாமா...? அவிவேகிகள் வேண்டுமானால் பண்ணலாமேயொழிய விவேகமுடையவன் பண்ணவே மாட்டான்" என்கிறான் பிரஹலாதன்.

ஏன் அப்படிச் சொல்கிறான் என்றால், 'எல்லோருக்குள்ளும் பகவான் இருக்கிறான் என்று உணர்ந்த பிற்பாடு, என்னுள்ளேயும் எம்பெருமான் இருக்கிறான் என்று உணர்ந்த பிற்பாடு, உன்னுள்ளேயும் இருக்கிறான் என்று உணர்ந்த பிற்பாடு... ஒருத்தரை துவேஷித்தால் யாரை துவேஷித்ததாகிறது? ஏளனம் பண்ணினால், யாரை ஏளனம் பண்ணினதாகிறது? எம்பெருமானைத்தான் பழித்ததாகும். பகவானைத்தான் பழித்ததாகும். எனவே ஒருத்தரை துவேஷிப்பது என்பது முடியுமா? ஒருத்தரை நிந்திப்பது என்பது முடியுமா!

அதனாலே பக்தஜன வாத்ஸல்யம் – பக்த ஜனங்களிடத்திலே எவன் பக்தியோடு இருக்கிறானோ அவனுக்குப் பரிபக்குவமான நிலை ஏற்படும்.

எட்டு விதமான பக்தியிலே இரண்டாவது என்ன...?

'என்னுடைய **பூஜையை அனுமதிக்கக் கூடியவனாக இருக்க வேண்டும்**' என்கிறான் பகவான்.

நிறைய புஷ்பம் வாங்கினால், 'எதற்கு இவ்வளவு? துனூர் மாசம் முடிய பூஜை பண்ண வேண்டாமா... இன்றைக்கே எல்லாவற்றையும் வாங்கிவிட அவசியம் என்ன?' என்று கேட்கக் கூடாது. பகவானுக்குச் செய்கிறபோது கணக்குப் போடுவதெல்லாம் ரொம்ப தப்பு. பகவத் விஷயத்திலே, இன்னொருவர் பண்ணுவதைப் பார்த்து ஆனந்திக்கணுமேயொழிய எதற்கு, ஏன்? என்று குறுக்கிடலாகாது. ஆகவே பூஜையை அமோதிப்பவனாக இருக்க வேண்டும் என்பது பக்தியின் இரண்டாவது வகை.

மற்ற ஆறையும் தொடர்ந்து சொல்கிறேன்.

(வளரும்)

***சீஸன்களில் கண்களைப் பாதிக்கும் நோய்கள் பற்றியும், க்ளகோமா பற்றியும் கண் மருத்துவர் டாக்டர் சந்தர் நெரூரிடம் கேட்டோம் :***

**மழைக் காலத்தில் திடீரென்று கண் நோய் வருவது ஏன், டாக்டர்?**

இதை வைரல் கஞ்சக்டிவைடிஸ் என்பார்கள். இதற்குக் காரணம் வைரஸ்தான். மழைக் காலச் சூழ்நிலையில் இந்த வைரஸ் எளிதாகப் பரவுகிறது. அதிகமாகவும் பரவுகிறது. கண் சிவந்து போய், நீர் வடியும்.

இன்னொரு வகை, கண் அலர்ஜி, தூசு சம்பந்தப்பட்டது. இதற்கு எந்தக் குறிப்பிட்ட காரணமும் சொல்ல முடியாது. இது மழைக் காலத்திலும் வரும்; கோடைக் காலத்திலும் வரும். தூசு என்றால் வீட்டுத் தூசு ரொம்ப சாதாரணம் இல்லையா? காலையில் வீட்டில் டீவி, சோபா மீது படிந்திருக்கும். வேறு வகை அலர்ஜியினாலும் வரலாம். அதற்கு அலர்ஜி



# கண்ணான கண் அல்லவோ?

டெஸ்ட் செய்துதான் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியும். சில சமயங்களில் மரங்களில் இருந்து பூக்கள் வெளிப்படுத்தும் 'போலன்' எனப்படும் மகரந்தத்தூள் இருக்கிறதே இதுவும் காரணமாக இருக்கலாம். ஆனால், பத்துக்கு ஒன்பது பேர் விஷயத்தில் வீட்டுத்தூசு அல்லது மலர்கள் வெளிப்படுத்தும் மகரந்தத்தூள் மட்டுமே காரணமாக இருந்து வருகிறது.

**சமீப காலமாக, 'க்ளகோமா' எனும் கண் பாதிப்பு ஏற்பட்டு அவதிக்கு உள்ளாகிறவர்கள் பற்றிக் கேள்விப்படுகிறோம். க்ளகோமா வந்திருக்கிறது என்று எப்படித் தெரிந்து கொள்ளுவது?**

அறிகுறிகள் பெரும்பாலும் வெளிப்படையாகத் தெரியாது. தலைவலி வரும். அடிக்கடிக் கண்ணாடியை மாற்ற வேண்டி வரும். சூழ்நிலைகூட 'க்ளகோமா' இருக்கிறதோ என்ற சந்தேகத்தை உருவாக்கும். ஒளியைப் பார்க்கிறபோது, அதைச் சுற்றி வட்டமாக வண்ணங்கள் தெரியும். இதை கலர்ட் ரிங் என்பார்கள்.

ஆனால் அதிகபட்சமாக, க்ளகோமா இருப்பது கண்டு பிடிக்கப்படுவது ரொட்டீன் செக்அப்பின்போதுதான்.

கிட்டத்தட்ட 90 சதவிகிதத்துக்கு மேல், சாதாரண செக்அப்பின்போது கண்டு பிடிக்கப்படுகின்றன என்றே சொல்லலாம். அதனால்தான் இதை சைலன்ட் பிராப்ளம் என்கிறார்கள். கண்ணுக்குள் ஒரு வகை திரவம் தேங்கி, விழிகளை அழுத்தும்போது பார்வையில் பிரச்னை உண்டாக்குவதுதான் 'க்ளகோமா.'

**ஒவ்வொரு வருடமும் கண் பரிசோதனை செய்வது இதற்கு உதவுமா?**

நிச்சயம் உதவும். அதிலும் குடும்பத்தில் முன்பே யாருக்காவது இருந்திருந்தால், க்ளகோமா வருகிற வாய்ப்பு அதிகம். இவர்கள் வருடத்துக்கு ஒரு முறை கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டியது மிக அவசியம்.

**'க்ளகோமா'வை அறவே போக்கிவிட முடியுமா?**

'க்ளகோமா' இருக்கிறது என்று கண்டறியப்பட்டு, சிகிச்சை தொடங்கிவிட்டால், அது மேலும் வளராமல் இருக்கிற அளவுக்குத் தடுக்க முடியும். ஆனால் அதுவரை இழந்த பார்வை இழந்ததுதான்.

**சிகிச்சை என்றால் அறுவைச் சிகிச்சைதானா?**

முதலிலேயே சர்ஜரி செய்ய மாட்டோம். மருந்துகள் இருக்கின்றன. டிராப்ஸ், மாத்திரைகள், சிரப் எல்லாம் கொடுத்தும் கட்டுப்படவில்லை என்றால்தான் அறுவைச் சிகிச்சை. அதிலும் சில வேளை லேசர் மருத்துவமும் உதவுவதுண்டு. அது பலன் தராமல் போகும்போதுதான் சர்ஜரி. விழிக்குள் சேர்ந்து அழுத்தம் தரும் திரவத்தை வடியும் விதமாக விழிக்குள்ளேயே ஒரு மாற்றுப் பாதை உருவாக்குவதுதான் அறுவைச் சிகிச்சை.



• சந்தர் நேரூர்

**சிகிச்சைக்குப் பிறகும் செக்கப் தேவையா?**

ஆம். மிக அவசியம். 3 அல்லது 6 மாதங்களுக்கு ஒரு முறை கண் மருத்துவரைப் பார்ப்பது நல்லது. இது நோயாளியைப் பொறுத்தது. ஆரம்பத்திலேயே கண்டறிவதும், உடனடி சிகிச்சையும் 'க்ளகோமா'வைக் கட்டுப்படுத்தும்.

**இரண்டு கண்களுமே பாதிக்கப்படுமா?**

சாதாரணமாக இரண்டு கண்களுமே பாதிக்கப்படும். ஆனால் இரண்டும் ஒரே சமயத்தில் பாதிக்கப்படாது. ஒரு கண் பாதிக்கப்பட்டு, பிறகு விரைவில் அடுத்த கண்ணும் பாதிக்கப்படும்.

**பாதிப்பு மெதுவாக இருக்குமா? திடீரென்று வருமா?**

பெரும்பாலான க்ளகோமா, மெதுவாகத் தொடங்கிப் பரவும். முதல் செக்அப்பின்போது இருக்காது என்று வைத்துக் கொள்ளுங்கள். இரண்டாவது, மூன்றாவது செக்அப்பின் போது தெரிய வரும். ஏனென்றால் மெதுவாக உருவாகிப் பரவுகிறது. இன்னொரு வகை 'அக்யூட் க்ளகோமா! திடீரென்று தோன்றும். ஆனால் இது வெகு அபூர்வம். அப்படியே அபூர்வமாக வந்த ஒருவர் செக் அப் செய்து கொள்ளும்போது தெரிந்துவிட்டால் லேசர் முறையில் அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட முடியும். மேற்கொண்டு கடுமை ஆகாமல் தடுத்துவிட முடியும். அதனால்தான் 35 - 40 வயதுக்குமேற்பட்டவர்கள், கட்டாயம் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

— சாருகேசி



'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்ற பாட்டைக் கண்ணதாசன் இயற்றியபோது நான் அவரருகே இருந்தேன். 'மனைவியின் அருமை தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோமே நாம்' என்று என்னைப் பற்றி எனக்கே வெட்கம் ஏற்பட்டது. என்னைப் போலவே அந்தப் பாட்டைக் கேட்டு மனம் நெகிழ்ந்து கவிஞரைப் பாராட்டியவர்கள் ஏராளம்'' என்றார் இராம. கண்ணப்பன், கண்ணதாசன் நினைவு நாளன்று. (சன்). கவியரசரைப் பற்றிப் பேச அவரை அழைத்தது மெத்தப் பொருத்தம். கண்ணதாசனிடம் நெருக்கமாகவும் நீண்ட காலத்துக்கும்



• கண்ணதாசன்

# கவிஞர் ஏன் நடிகரானார்?

உதவியாளராகப் பணியாற்றியவர் அவரைப் போல் யாருமில்லை.

'பாட்டு எழுதிக் கொண்டிருந்தவர் ஏன் நடிப்பில் இறங்கினார்?' என்று கேட்டபோது, கண்ணப்பன் சொன்னார்: 'கறுப்புப் பணம்' என்ற தலைப்பில் சொந்தப் படம் எடுத்தார் கவிஞர். நாடெங்கும் உள்ள கறுப்புப் பணக்காரர்களை அரசு கடுமையாக வேட்டையாடிக் கொண்டிருந்த சமயம் அது. அந்தப் படத்தில் ஹீரோவாக நடிக்க எல்லாரும் பயப்பட்டார்கள். அதனால் கண்ணதாசன் 'நானே ஹீரோவாக நடிக்கிறேன்' என்று சொல்லிவிட்டார்.

கண்ணதாசன் ஒருமுறை காதலில் தோல்வியுற்றதாகவும் அதனால்தான் காதல் பாடல்களை நெஞ்சம் நெகிழ எழுத முடிந்தது என்றும் ஒரு புதிய தகவலைச் சொன்னார் கண்ணப்பன்.

ஆம். No tears in the writer, no tears in the reader என்று கவிஞர் ராபர்ட் ஃப்ராஸ்ட் சொன்னது உண்மையே.

There are two times in a man's life when he should not speculate: 1. When he can't afford it. 2. When he can என்றார் மார்க் ட்வெயின். இந்த அறிவுரையை உணராமல், 'அத்திம்பேருக்கு' மின்சார ஷாக் அடித்து, பின்னால் நடக்கப் போவதெல்லாம் அவருக்கு முன்னால் தெரியவே அதை வைத்து பிஸினஸ் ஆரம்பிக்கிறார்கள் 'சின்னப் பாப்பா பெரிய பாப்பா' அன்கோ. ஆரூட பிஸினஸ் – இன்ன கேள்விக்கு இன்ன தட்சிணை என்று.

'என் பெண்டாட்டி ஓடிப் போனால் மச்சினியைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன். அது எப்ப நடக்கும்?' என்பது, வருகிற ஒருவரின் பச்சையான கொச்சையான கேள்வி. 'லாட்டரியில் எந்த நம்பருக்குப் பரிசு விழும்?' என்பது இன்னொரு கேள்வி. சாமர்த்தியமாக, 'சித்தி'க்கும் ஒரு இடைச்செருகல் விளம்பரம்.

கேள்வி: 'சித்தி'யின் கிளைமாக்ஸ் என்ன?

பதில்: என்னைக் கேட்காதே, அது டைரக்டர் பாஸ்கருக்கும் கடவுளுக்கும்தான் தெரியும்.

Smart.

"டைட்டானிக்' கதாநாயகி வின்ஸ்லெட் விவாகரத்து செய்துகொண்டு விட்டார். ஸ்டார் மூவிஸில் அதைப் பற்றிச் சொன்னவர், 'நானும் என் கணவரும் நல்ல நண்பர்கள். ஒருவரையொருவர் மதிக்கிறோம். எங்களுக்குள் எந்தப் பிரச்னையும் இல்லை. பிரிகிறோமே என்று எனக்கு ரொம்ப வருத்தம்'' என்றார்.

அப்புறம் ஏன் விவாகரத்து?

அதுதான் ஹாலிவுட். In some countries being a president is just an honorary position - like being a husband in Hollywood என்றார் ஒரு ஹாலிவுட் பத்திரிகையாளர்.

திகிலான ஸ்டண்ட் படங்களைப் பார்க்கிற மாதிரி இருந்தது, விஜய் காட்டிய வெளிநாட்டுத் துண்டுச் செய்திகளைப் பார்த்தபோது. 'Without warning' என்பது தலைப்பு. அதில் ஒன்று.

ஆஸ்திரேலியாவில் ஒரு குதிரைப்

**வினோத்**



• சின்ன பாப்பா, பெரிய பாப்பா!

பந்தயம். தடைகளைத் தாண்டி ஓடும் போட்டி. இருபது முப்பது பேர் படுவேகமாகக் குதிரைகளை ஓட்டி வருகிறார்கள். இரண்டாவதாக வந்து கொண்டிருந்த குதிரை எகிறித் தள்ளி விடுகிறது தன் ஜாக்கியை. விழுந்தவரின் கால், சேணத்தின் வளையத்தில் சிக்கிக் கொள்கிறது. குதிரை நிற்காமல் ஓடவே அவரும் தரதரவென்று இழுத்துச் செல்லப்படுகிறார். அடுத்த தடைவேலியில் அவர் மண்டை உடைவது நிச்சயம். தப்பி விடுகிறார். அதற்கடுத்த தடைவேலி. அவருடைய நண்பரொருவர் பாய்ந்து சென்று அவரை இழுத்துப் பிடித்துக் கொள்ள, குதிரையின் ஓட்டம் நிற்க, ஜாக்கி உயிர் தப்புகிறார்.

இந்தத் துண்டுப் படத்தின் இறுதியில் ஒரு சோகக் கவிதை இருக்கிறது. எல்லாக் குதிரைகளும் வெற்றி இலக்கை நோக்கி ஓடிக் கொண்டிருக்கையில் ஜாக்கியைக் கீழே தள்ளிய குதிரை மட்டும் தளர்ந்து தனியே வருகிறது. பாவம். A sad sight, indeed.

அந்தக் குளிர்பான விளம்பரப் படத்தில் அமிதாப்பச்சன் சொல்வது நன்றாகவா இருக்கிறது?

மொத்தம் இரண்டுபடங்கள். முதல் படத்தில், எதிர்பாரா விருந்தாளியாகப் போன வீட்டில், இருக்கிற ஒரே ஒரு புட்டியை எடுத்து வைத்துக்கொண்டு கொடுக்க மறுக்கிறான் சிறுவன். அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்து நைச்சியம் பண்ணிப் பார்க்கிறார் அமிதாப். பையன் புட்டியை மறுபுறம் எடுத்து வைத்துக் கொண்டு, 'என்னை என்ன முட்டான்னு நினைச்சியா?' என்று கேட்டுவிட்டுத் தானே குடிக்கிறான். அமிதாப்புக்கு ஏக்கம். நமக்குச் சிரிப்பு.

இதன் தொடர்ச்சி போல இதே பானத்துக்கு இன்னொரு விளம்பரப் படம். வட்ட மேஜை. ஒரு பக்கம் அமிதாப். எதிரில் அதே சிறுவன். ஒரு பெரிய புட்டியை எடுத்து டொம்மென்று மேஜை மீது வைக்கிறார் அமிதாப். சிறுவன் ஒரு காலி கிளாஸ் டம்ளரை எடுத்து ஜம்மென்று வைக்கிறான் – தனக்கும் தரும்படி.

தருகிறாரா அமிதாப்? இல்லை. புட்டியைத் திரும்ப எடுத்து வைத்துக் கொண்டு, 'என்னை என்ன முட்டாள்னு நினைச்சியா?' என்கிறார்.

வேடிக்கையான விளம்பரம்தான். என்றாலும் ஆனானப்பட்ட அமிதாப்பச்சன் ஒரு குழந்தையிடம் போய் tit for tat விளையாடலாமா? தர மாட்டேன் என்று சொல்கிற மாதிரி சொல்லிவிட்டு பிறகு தாராளமாக ஊற்றித் தருகிற மாதிரியாவது காட்டியிருக்கலாமே!



• வின்ஸ்லெட்

# நில், கவனி, வெற்றிகொள்!



## கல்கி ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®


இணைந்து வழங்கும்

# இளைஞர் திருவிழா!

*ஐயா... தெரியாதய்யா!*

*ஜே.எல். பேர்டு கற்பனை கூட செஞ்சிருக்க மாட்டாரய்யா... தன்னோட அறிவியல் கண்டுபிடிப்பு இந்த அளவுக்கு மக்களை மந்திரிச்சு மயக்கிப் போடும்னு...*

*'சின்னத் திரை'னு அடக்கமா பேர் வெச்சுக்கிட்டு, 'டீ.வி.' பண்ற மெகா விஷயங்களை 'ஜூம்' செய்ய வருகிறார்கள் டாப் ஸ்டார் பேச்சாளர்கள்.*



தலைப்பு :

## சிறை வைக்கிறதா சின்னத்திரை?

**பேச்சாளர்கள்:**

அரட்டை அரசர் :

திரைப்பட இயக்குனர்

**விசு**

சுருசுரு சரவெடி :

வழக்கறிஞர் **சுமதி**

நேரம் :
**மாலை 4 மணி**

நாள் : **28.10.2001**

(ஞாயிறு)

இடம் : நாரத கான சபா, சென்னை - 18.

அனைவரும் வருக.... அனுமதி இலவசம்.



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.

Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)

Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



ஸ்ரீ குமரன் ஸ்டோர்ஸ்

61, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17.

போன்: 4359029, 4342744

A SYMBOL OF TRADITION

SINCE 1955

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / Chief PMG-141 / 2001 "
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 " Registered as a Newspaper in Srilanka




# "உஜாலா சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் மட்டுமே துணிகளுக்கு இணையற்ற வெண்மையின் ஜொலிப்பை தரும்"


INSTA-WHITENING SYSTEM

ஜோதி லேபின் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் ஆராய்ச்சி மூலம், பரிசுத்தமான, துணிகளை, சேதப்படுத்தும் இரசாயனக் கூறுகள் எதுவும் இதில் இல்லை என நிரூபணம் பெற்ற மிக சிறப்பான ஃபார்முலாதான் உஜாலா சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம். தண்ணீரில் உடனடியாகக் கரைவதோடு, துணிகளின் நுட்பமான நூலிழைகளினுள் ஆழ்ந்து உள்ளிருள், துரிதமாக செயல்பட்டு, துணிகளில் வெண்மையின் வெளிச்சத்தை கொண்டு வருவது உஜாலா **சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டத்தால்** மட்டுமே முடிந்த ஒன்று.


விஞ்ஞான ஆதாரமற்ற முறையில் அல்லாத சாதாரணமான தயாரிப்புகளில் உள்ள தரங்குறைந்த இரசாயனங்கள் நாளடைவில் துணிகளில் நூலிழைகளை பாதித்து, வலுவற்றதாக்கிவிடும் துணிகளில் கறைகளை ஏற்படுத்தும்போது, உஜாலா சுப்ரீம் துணிகளுக்கு வலிமை குறையாதிருக்கச் செய்து வெண்மையை நிலை நிறுத்துகிறது.

விஞ்ஞான உண்மைகளை அறியாத ஒரு சிலர் உஜாலாவின் வாக்குறுதிகளையும் அதன் செயல்திறனையும் நம்ப மறுக்கலாம். அவர்கள் அறியாதது அதன் சிறப்பான ஃபார்முலாவையே.

நீங்களே சந்தேகங்களை போக்கிக் கொள்ள சுயமாக சோதித்துப் பாருங்கள்.



சாதாரண தயாரிப்புகளில் உள்ள தரம் குறைந்த இரசாயனங்கள் துணிகளின் நூலிழைகளை சேதப்படுத்துகின்றன



உஜாலா சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் துணிகளில் இணையற்ற **வெண்மையான வெளிச்சத்தை** தருகிறது




**UJALA** *Supreme*

வெண்மையின் புதிய நிறம்

A product of Jyothy Laboratories Ltd.